490

# புதுமைப் பொங்கல்

# புதுமைப் பொங்கல்

எழுதியவர் :

எஸ். குழந்தைநாதன்

சென்னை அரசாங்க செய்தித்துறை

# நூன்முகம்

---

ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றி மக்கள் அனைவரும் நன்கு -.றிந்துகொள்ளவேண்டும் என்னும் நோக்கத்துடன் சென்னை அரசாங்க செய்தித்துறை, அண்மையில் நாடகப் போட்டி ஒன்றை நடத்தியது. போட்டிக்குப் பல நாடகங்கள் வந்திருந்தன. அவற்றிலிருந்து, முதல் பரிசுக்கு உரியனவ'ாக மூன்று நாடகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதில் ஒன்றே "புதுமைப் பொங்கல்" என்னும் இந்த நாடகம். இதை எழுதியவர் அழகப்பா கல்லூரித் தமிழ் உரையாளராகப் பணியாற்றிவரும் திரு. எஸ். குழ,.தைநாதன் ஆவார். ஐந்தாண்டுத் திட்ட நோக்கங்கள், சா.தனை.ளை உணர்த்து வ.... இந்; நாடகம் நன்கு பயன்படும் ்றுநம்பு கிறோம். இந் நாடகத்தை நடிக்க விரும்புவோ., ", சென்னை அரசாங்க செய்தித்துறை நெறியாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடிக்க.வண்டும்.

நெறியாளர்
சென்னை அரசாங்க செய்தித்துறை.

# நாடக மாந்தர்

1. உலகப்ப முதலியார். — பாலையூர்க் கிராம மிராசுதார்—பணக் காரராகச் சாவதற்காக ஏழை யாகவே வாழ்பவர்.

2. நல்லப்பன் .. — உலகப்பரின் மூத்த மகன்—சிறந்த லட்சியவாதி, "அன்பு வழியே ஆக்கும் வாழ்விக்கும்" என்னும் நோக்கினன்.

3. கருணாகரம் பிள்ளை. — பண்பட்ட நடுத்தரக் குடும்பத்தவர்—வாழ்ந்து கெட்ட குடும்பமானாலும் பண்பு கெடாது பேணுபவர்.

4. பாண்டியன் .. — கருணாகரம் பிள்ளையின் மகன்—தலைதெறிக்கும் வேகத்தில் நாட்டையே மாற்றியமைக்க வேண்டும் என்ற புரட்சி நோக்கம் கொண்ட, உணர்ச்சி வயப்பட்ட இளைஞன்.

5. காவேரி .. — கருணாகரர் மகள்—தமிழகப் பண்பெல்லாம் தேங்கி நிற்கும் குல விளக்காய் வாழ நல்லப்பனை நேசிக்கிறாள்.

6. கண்ணாயிரம். — உலகப்பரின் கணக்கப் பிள்ளை—அவரது கணக்கெல்லாம் "இவரிடம் தான் அடக்கம்".

7. அம்மாக் கண்ணு. — அந்தக் கண்ணாயிரமே தன் கைக்குள் தான் அடக்கம் என்னும் தர்ம பத்தினி.

8. செல்லத்துரை .. — உலகப்பரின் இளைய மகன்—சினிமாப் படம் எடுத்துச் செல்வம் குவிப்பதில் "கோட்டை கட்டுபவன்".

9. ஆடியபாதம் .. — உலகப்பரின் வேலைக்காரன்.

10. பலவேசப் பண்டிதர். — உலகப்பரை அண்டிவாழும் "பண்டிதர்".

11. சங்கிலி
12. முனிசாமி
13. ராமசாமி

} கிராமவாசிகள்.

14. பண்ணையாட்கள்.

# களம் 1

## காட்சி 1

**இடம் :** பாலையூர்க் கிராமம்—உலகப்ப முதலியார் வீடு.

**மாந்தர் :** உலகப்ப முதலியார், ஆடியபாதம், கண்ணுயிரம், கருணாகரம் பிள்ளை, நல்லப்பன்.

(உலகப்ப முதலியார், பாலையூர்க் கிராமத்துப் பெரும் புள்ளி. சமீபத்தில் மிராசுதாரானவர். தன் வீட்டுக் கூடத்தில் முகத்தை மறைத்தபடி "பேப்பர்" படித்துக் கொண்டிருக்கிறார்.)

**உல :** பரந்தாமா, பார்வதீசா ! பத்திரிக்கையைப் புரட்டினாலே வயிறு கப கபங்குது. எதுக்கெடுத்தாலும் வரி, வரின்னு உரிஞ்சு பிடுறாங்க உரிஞ்சு ! . . . அடே ஆடியபாதம் ! ஆடியபாதம்.

(ஆடியபாதம் லேசாக நொண்டியபடி நடந்து வருதல்)
டேய் ! ஆடியபா.............

**ஆடி :** வந்துட்டேங்க.......வந்துட்டேங்க.

**உல :** உள்ளே என்னடா பண்ணிக்கிட்டு இருந்தே ?

**ஆடி :** (கொட்டாவி விட்டபடி) உள்ளேங்களா (கொட்டாவி) உள்ளேங்களா........

**உல :** ஆமா ! உள்ளேதான் . . . தூங்கு மூஞ்சி. காலங்காத்தாலே விடியா மூஞ்சித்தனமாக கொட்டாவி விடறயே......

**ஆடி ;** இல்லேங்க விடிஞ்சத்துக்கப்புறம் தான் கொட்டாவிவிட ஆரம்பிச்சேன்......பாருங்க......நான் உட்கார்ந்துக்கிட்டுத்தான் திட்டம் போட்டுக் கிட்டு இருந்தேன். அந்தத் திட்டம் அப்படியே கண்ணை அசத்திடுச்சிங்க ..........

**உல :** திட்டமா ! அதென்னடா திட்டம் ? கும்பகர்ணன் மாதிரி சேர்ந்தாப்போல ஆறுமாதந்தூங்கறது எப்படினு திட்டம் போட்டியா.........இல்லே.......

**ஆடி :** ஹி........ஹி..........அதெல்லாம் இல்லேங்க நான் அப்படியெல்லாம் எப்போதும் துங்கமாட்டேங்க. அதுவாத் தூக்கம் வந்தாத்தான் நானுத் துங்கிப் பிடுவேன்....

**உல :** என்னடாவிளையாடுறே..........கூப்பிட்டு என்னடா செஞ்சுக்கிட்டிருந்தேன்னு........திட்டம் கிறே...... தூக்கம் கிறே . என்னடா அந்த துங்குமூஞ்சித் திட்டம் ? சொல்லுடா......ம்

**ஆடி :** சொல்றேங்க........பொங்கலுக்கு இன்னும் நாலே நாளுத்தான் இருக்கு. நாளைக்குக் களத்துமேட்டு நெல்லெல்லாம் வீட்டுக் களஞ்சியத்துக்கு வந்திடும். கரும்பு வண்டி வண்டியாச் சந்தைக்குப் போயிக் கிட்டிருக்கு. அது மூட்டை மூட்டையாப் பணம் கொண்டு வரும். இல்லீங்களா. (முதலியார் திகைத் தல்) அப்புறம்......அந்த...........அதான்ங்க அந்தக் களத்து மேட்டு நெல்லுவேறே வரும். நிறைய இருக்கிற இடத்திலே இப்டிவந்து குவியுதே இதையெல்லாம் எங்கே வைக்கிறது. என்ன பண் றது........அப்படீன்னு திட்டம் போட்டுக்கிட்டுருந் தேங்க......அதுதாங்க..........இப்படி ஆளையே அசத்திட்டிசிங்க..........

**உல :** அசருவேடா......அசருவே........ஊஹும்........ எனக்கு வருகிறதை யெல்லாம் என்ன பண்ணுகிறதுங் கிறதுக்கு நீயும் திட்டம் போட ஆரம்பிச்சிட்டியா...... சரி........நண்டு கொழுத்தால் வளையிலே இருக் காதுடா இருக்காது உன்னைச் சொல்லி என்ன பண் றது ! தாதனுக்கு. வாச்ச தப்பும் குருடு ன்னு இருக்கு அந்த மூத்த பையன் என்னடான்னு இப்போதே என்னை முறைத்துப் பார்க்கிறுன், இளையது வாரி இறைக்குது. சுற்றியிருக்கிறவனெல்லாம் சுரண்டப் பார்க்கிறுன்.............ம்..................என் னென்ன நடக்குமோ ? என்னென்ன நடக்குமோ !

**ஆடி :** அதெல்லாம் உங்க கண்ணுக்கு முன்னுலே எதுவும் நடக்காதுங்க.

**உல :** கண்ணுக்குத்தெரியாமல்தான் நடக்குமோ ?

**ஆடி :** இல்லீங்க · இந்த ஆடியபாதம் இருக்கிற வரைக்கும்.

**உல :** ஒன்னும் ஆடாமல் பார்த்துக்கு வே........போடா தடிமுண்டம், எங்கேடா அந்தக் கணக்கன் ?

**ஆடி :** களத்துமேட்டுக்குப் போருருங்க......இந்தா ஆள் அனுப்பி வரச் சொல்லட்டுங்களா.

**உல் :** என்னது ? நீ ஆள் அனுப்பி வரச் சொல்லும் அளவுக்குப் பெரிய மனுஷஞ வந்துட்டியா . . வரும், டா வரும் ! உழுகிறவன் இளைத்திருந்தால் எருது மச்சின முறை கொண்டாடுமடா கொண்டாடும்.

**ஆடி :** நான் என்னங்க செய்யுறது (தன் நொண்டிக் காலைச் சுட்டிக் காட்டி) என் மேலே வஞ்சம் இல்லை...... (வாயிற்படிப் பக்கம் பார்த்து) இந்தா அவரே வர் ருருங்க........

**உல :** அப்படின்ஞ அந்தக் கருணுகரம் பிள்ளையைக் கூட்டி வரச் சொல்லு.

**ஆடி :** எந்தக் கருணுகரம் பிள்ளை......கோடிவீட்டு......

**உல :** ஆமாடா ஆமா. அந்த ஆறுமாதக் கடன்காரப் பிரபுவைத்தான். இப்ப ரெண்டுலே ஒன்று தீர்த்துப் புடணும்......

(ஆடியபாதம் போதல்.)

(கண்ணுயிரம் நுழைந்துகொண்டே)

**கண் :** ஆமாங்க........ரெண்டிலே ஒன்று தீர்த்துப் பிடத் தாங்க வேணும்.

**உல :** உன் உத்தியோகத்தைத் தானே........கட்டாயம் தீர்த்துவிடுகிறேன். நீவேலை செய்கிற லட்சணத்தைப் பார்த்தால் உன் மண்டைப் பூச்சி குறுகிப் போச்சுன்னு தெரியுது........(கணக்கப் பிள்ளை விழித்தபடி நிற்றல்) எய்யா. . காலங் காத்தாலே களத்து மேட்டுக்கு நெல்லளக்கப் போயி. இவ்வளவு நேரமா? எய்யா ? நமக்குமட்டும்தான் அளந்திய. இல்லே ஊருக்கே அளந்தியா ?

**கண் :** நான் என்னங்க செய்யுறது ? நம்ம பண்ணை யாளுகள் எல்லாம் ஆளுக்கொரு சட்டம் பேசுருன் உழைச்சவனுக்கு ஒரு பாதிக்கு மேலே குடுங்கிருன். முணு முணுக்கிருன், முறைச்சுக்கூடப்பார்க்கிருன்..

**உல :** அது எவன்யா முறைக்கிறவன்.

**கண் :** இந்தக் கண்ணுயிரத்துக்கிட்டே எவனாலே முறைக்க முடியும் ? கணக்கிலே குளோஸ் பண்ணிப்பிடுவேன்லே கண்ணுயிரமா . . . . . கிள்ளுக்கீரையா . . . .—

**உல :** உன் பிரதாபம் போதுமய்யா. இந்த நாய் எசமான் இருந்தாத்தான் பல்லேக்காட்டும். இல்லாட்டிவால் தொங்கிப்போகும் . . . . . . . . . . நிறுத்து . . . . . . . . . . அப்புறம் என்னதான் யா ஆச்சு ?

**கண் :** இந்தாப் பாருங்க சுருக்கமாவே சொல்றேன். இந்தச் சுதந்திரம் வந்தாலும் வந்தது. எல்லாப் பயலுகளும் தலைகீழாநடக்க ஆரம்பிச் சுட்டானுக . . . . . வெள்ளைக்காரன் ஆண்ட காலத்திலே எவனுவது இம் . . ம் . . . . என்பானு ? இப்போ சாதி கெட்டுப் போச்சு . . . . . . . . குலம் சீரழிஞ்சுபோச்சு . . . . . . மானம் போச்சு . . . . . . மரியாதை போச்சு . . . . . எல்லாம் போச்சு . . . . . . . . . .

**உல :** உன்னே என்ன ஒப்பாரி வைக்கவாய்யா கூப்பிட்டேன்.

**கண் :** ஒப்பாரி வைக்கத்தான் வச்சிருவானுக போலிருக்கு . நம்ப மூத்த தம்பியில்லே . . . . . அவரும் அவனுக கூடச் சேர்ந்துக்கிட்டுப் பேசுருரு ! பரவாயில்லே, உழைச்சவனுக்குக் கூடவே குடு, வயித்திலே அடிக்காதே அப்பிடி இப்படின்னு அங்கே வந்து தகராறு பண்ணுருரு . . . . . . . நமக்கே கெடுதல் பண்ணுருரு.

**உல :** நடக்கட்டும். நடக்கட்டும் இவ்வளவு நாளாக வீட்டுக்குள்ளேயிருந்து கெடுத்தான், இப்ப வெளியிலேயும் வந்து கெடுக்க ஆரம்பிச்சுட்டானு . . . . . . . ?

**கண் :** அதிலேயும் அந்தக் கருணுகரம் பிள்ளே வீட்டு அஞ்சு வேலி நிலமும் நம்பக்கிட்டே அடகிலே இருக்கு. இந்த வருஷம்தான் அதிலே ஏதோ கொஞ்சம் விளஞ்சது. அப்படி விளஞ்சது பூரவும் வட்டிக்கே காணுது. அதைக் கருராக் கேட்கப் போனு ஒரே கூப்பாடாப் போச்சுங்க . . . . .

**உல :** யாரு . . . . . . கருணுகரம் பிள்ளேயா கூப்பாடு போட்டது ?

**கண் :** இல்லேங்க......அவருக்குத்தான் உடம்புக்குச் சுக மில்லேயாமே ! அவரு மகன்தான் வந்து........

**உல :** யாரு ? பட்டணத்திலே திரிந்தானே அந்த அரட்டைத் தலேயா :

**கண் :** ஆமாங்க .. அங்கே எல்லாவற்றையும் குளோஸ் பண்ணிவிட்டு இங்கேயும் சண்டப் பிரசண்டம் பண்ண வந்துவிட்டான். கணக்கிலே அது தப்பு, இது சொள் ளேங்கிருன்.

**உல :** வரட்டும். வரட்டும் கணக்கைப் பார்த்துப் பேசிக் கொள்ளுகிறேன்.

**கண் :** ஆமா .. நாம்பளா பேசப்போரும். கண்ணுயிரத்து கைப்பட எழுதின கணக்கில்ல பேசும். கோர்ட்டிலே யிருந்து குப்பைமேடு வரைக்கும் நான் எழுதின கணக்கிலே எவன் “மிசுடேக்” சொல்லுறது .. ?

**உல :** சரி .. சரி .. கருணுகரம் பிள்ளே பற்றையெல்லாம் எழுதிக்கொண்டா....இந்த உலகப்ப முதலியார் வீட்டுச் சொத்துக்கு இவளு பிறந்திருக்கிருன் (மீசையை முறுக்கல்).

(திரும்பவும் பத்திரிகையை எடுத்துக்கொண்டு உட் காருகிருர். கண்ணுயிரம் கணக்குப் புத்தகங்களேப் புரட்டுகிருன். ஆடியபாதம் உள்ளே வருகிருன்)

**ஆடி :** இந்தா வர்ருருங்க ..

**உல :** ம் .. ம் .. டேய் ஆடியபாதம் இன்னிக்கு என்ன தேதின்னு கணக்கப் பிள்ளேயைக் கேளு. ..

**கண் :** (விழித்தபடி) நேத்திக்கு என்னங்க தேதி ..

**உல :** என்னய்யா ......நான் உன்னேக் கேட்கிறேன். நீ எதிர்க் கேள்வி போடுறே .. நல்லாயிருக்கு. தேதி கூடத் தெரியாமெ நீ கணக்கெழுதுற லட்சனம். ..

**கண் :** அதனுலே என்னங்க ! நமக்குத்தேதியா முக்கியம், பணந்தானே பிரதானம் . . . . . . . . . காலேயிலே களத்து மேட்டுக்குப் போன அவசரத்திலே தேதிப் படத்தைக் கூடக் கிழிக்க மறந்து போச்சு .. ஐயா .. ..கையிலே இருக்கிற பேப்பரிலே போட்டி ருக்குமே.

**ஆடி :** அது மளிகைக் கடையிலே ஐயா நிறுத்து வாங்கிக் கிட்டு வரக் சொன்ன போன மாசத்துப் பேப்பருல்ல.. (வாயைப் பொத்திக் கொள்ளுதல்)

**உல :** என்னடா சிரிப்பு .. முண்டம் புதுசா என்னத்தெடா கண்டுப்பிட்டே ..

**ஆடி :** புதுசு இல்லீங்க ,.. பேப்பர் பழசுன்னுதான் .. சொன்னேன்

**உல :** போடா உள்ளே .. உலகப்ப முதலியார் வீட்டுச் சோறுடா சோறு

(ஆடியபாதம் உள்ளே போதல்)

(கருணாகரம் பிள்ளை போர்த்தியபடி மெதுவாக, இருமிக்கொண்டே நுழைகிறார். பார்த்ததும் பாராதது போல உலகப்பர் இருக்கிறார்.)

**கரு :** வணக்கம். முதலியார் ஐயா . . . வ் . . . வணக்கம்.

**உல :** (பேப்பரை மடித்தபடி) என்னங்க பிள்ளை இப்பக் கூடவா முடியவில்லை.

**கரு :** ஆமாங் .. அஞ்சாறு நாளாக முடியவில்லை. உடல் உள்ள வரைக்கும் எனக்குக் கடல் கொள்ளாத கவலை யாகப் போய்விட்டது. கவலையும் வறுமையும் சேர்ந் தால் வியாதி தன்னாலே வர வேண்டியதுதானே !

**உல :** நான் அதை கேட்கவில்லை பிள்ளை. இப்பத்தான் உங்க அடமான நிலத்திலே விளைஞ்சிருக்கே அந்தக் கடனைக் கொடுக்க இப்பவுமா முடியவில்லை என்று தான் கேட்கிறேன்.

**கரு :** (இருமியபடி) என்னங்க .. என் நிலைமை முழுவதும் நன்கு தெரிந்த நீங்களே இப்படிப் பேசுகிறீர்கள். நமது நட்பு இன்று நேற்று ஏற்பட்டதா ? எவ்வளவு நெருங்கிப் பழகினோம். எண்ணிப் பாருங்கள் முதலி யார் வாள். . . !

**உல :** ஆமாமா......நம்பகடனும் இன்று நேற்று ஏற் பட்டதா........இல்லையே........அதினாலே தான்.. அப்பேர்ப்பட்ட நமது நெருக்கமான நட்பிலே, பொருள் ஊடாடிக் கெடப்பிடாதுன்னு தான் இவ்வளவு கண்டிப்பாகக் கேட்கிறேன்.

கரு : அதுவும் நீங்க கண்டிப்பாகக் கேட்கிற அளவுக்கு உணர்ச்சியில்லாத மானங் கெட்டவன் நானில்லே என்பது உங்களுக்கே தெரியும். .. இருபது வருஷத் துக்கு முன்னுலே வந்த பெரிய பஞ்சத்துக்கு ஆற்ருமல் . . . ராமனுதபுரம் சீமையிலே இருந்து நமது இரண்டு குடும்பமும்தான் இந்தப் பாலேயூருக்கு வந்துசேர்ந்தோம். ஏதோ கஷ்டப்பாடுபட்டோம். .. அப்போ . . . அப்போ . . . (இருமுதல்)

(நல்லப்பன் உள்ளே வந்து பேசாமல் நிற்றல்)

கரு : அப்பொழுது நல்லப்பன் எல்லாம் ரொம்பச் சின்னப் பிள்ளே. ஏதோ அதிர்ஷ்ட தேவதை கண் திறந்தாள். நீங்க நல்ல ஸ்திதியிலே இருக்கிறீர்கள். என்னேப் பிடித்த போதாத காலம் அவள் கண் மூடியதி லிருந்து கையும் விளங்கவில்லே. காலும் துலங்க வில்லே. என் மகள் காவேரி கலியாணத்தை முடித்து விட்டால் என் கண் தானுக மூடிவிடும் (நல்லப்பனே பார்த்தல்)

உல : (அனுதாபக் குரலில்) மூக்குள்ள வரைக்கும் சளியும் இருக்கத்தான் செய்யும். அவரவர்கள் கஷ்டம் அவ ரவர்களுக்குத்தான் தெரியும். பாருங்க பிள்ளே. என் பிழைப்பும் வர வர மோசமாகப் போவதினுல் தான் நானும் கொஞ்சம் கண்டிப்பாகப் பேச வேண் டியதிருக்கிறது. அதிலேயும் இப்ப யாரையும் நம்ப முடியவில்லே. நம்ப சர்க்காராலும் ஆச்சு இந்தக் காலத்தில் தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் ஆயிட்டான். குடியாட்சி குடியாட்சியின்னு, இருக்கிற வன் குடியை யெல்லாம் குட்டிச் சுவராக்கத் திட்டம் வேறே தீட்ட ஆரம்பிச்சுட்டானுக . . . நிலத்திலே விளேஞ்ச நெல்லு வீடு வர முடியாத சட்டம், இருக்கிற பணத்தை எதுவும் செய்ய முடியாமெத் திட்டம். சட்டமாம் திட்டமாம். வாய்க்கு விளங்காத சட்டமும் வ ாழ முடியாத திட்டமும்......(நல்லப்பன் இடைமறித்து)

நல் : இல்லேயப்பா . . . நீங்கள் தெரியாமல் பேசுகிறீர்கள். நமது ஆட்சியைத் தவருகப் புரிந்து கொண்டு பேசு கிறீர்கள். எது உரிமை வாழ்வு, எது அடிமை வாழ்வு என்றெல்லால் எடை போட்டுப் பார்க்காது.

**உல :** சரிதாண்டா...பெத்த அப்பனுக்கு ஒன்னும் தெரியாதுன்னு பேசத்தான் உங்க குடியாட்சியும் குட்டிச் சுவரும் வந்துச்சோ ? உரிமையாம் உண்டக்கட்டியாம். உதவாக்கரைப் பயலுக. உங்க குடியாட்சி வந்து என்ன லாபம். எல்லாப் பயலுகளுக்கும் நாக்குத்தான் நீண்டு போச்சு...கை கால் எல்லாம் சுருண்டு சோம்பேறிப் பட்டாள மாக்குச்சு...

**நல் :** இல்லையப்பா நீங்கள் தவறுக...

(கருணாகரர் இடை மறிக்கிறார்.)

**கரு :** வேண்டாங்க.. .தம்பி. ....நீங்க பேசவேண்டாம்.... (முதலியாரிடம்) தம்பி தெரியாமல் பேசுது....

**உல :** பேசுவான். தெரியாமலும் பேசுவான், தெரிஞ்சும் பேசுவான் ! களத்து மேட்டுக்குப் போயி இவனேயில்ல வெடிவைக்கிறான். பிள்ளையாம் பிள்ளை. கட்டுச் சோத்து மூட்டைக்குள்ளே பெருச்சாளியையும் வளர்க்கிற கதைதான் என் பொழப்பு.

**கரு :** அப்படியெல்லாம் பேசாதீங்க. என் சமாச்சாரமாகத் தான் கணக்கப் பிள்ளையிடம் தம்பி சொன்னாங்க...

**உல :** (கண்டிப்புடன்) உங்க சமாசாரமா இருந்தாத்தான் என்னங்க...நான் கண்டிப்பாக கேட்கிறேன்னு வீணா வருத்தப்படப்பிடாது.....நான் பணக்காரன்தான். இந்தக் கண்மாய் நிறைஞ்சாத்தானே கரையிலே தண்ணீர் கசியும். கரை நல்லா இருந்தாத்தானே தண்ணீர் தேங்கி நிற்கும். என் கிட்டே நாலு காசு இருந்தாத்தானேய்யா சமயத்திலே நானும் நாலு பேருக்கு உதவ முடியும்

**கரு :** நியாயம்...நியாயம்..

**உல :** கடன் வாங்கினவங்களும் அதுபோல நாலு கலம் விளைஞ்ச இடத்திலே மூணு கலமாவது தந்தாத் தானே—அடெ பொன்னுங்கிற இடத்திலே பூவை யாவது வைச்சால்தானே மனச் சந்தோஷம் ஏற்படும்.

**கரு :** (தயங்கியபடி) நாலு வருஷமா.

**உல :** நாலு வருஷமா உங்க நிலத்திலே விளைவில்லே. வாஸ்தவம் தான். அப்ப உங்களாலே தரமுடியாது. தரவும் வேண்டாம். இப்ப விளைஞ்சிருக்கிறபோதாவது தரணும்ல.

**கரு :** (திகைத்திருத்தல்).

**உல :** நியாயமா ஒன்று சொல்றேன்....இப்ப விளைஞ்சதிலே அஞ்சு கலத்தை நான் வட்டிப்பாக்கிக்கு எடுத்துக் கிறேன்.

**கரு :** முதலியார்...நீங்கள் பெரும் தனவந்தர். நாங்கள் உங்களை அண்டி வாழ்கிறவர்கள். இந்த ஐந்து கல மும் உங்களுக்கு இலையிலே விழுகிற எச்சில் சோறு போல. ஆனால் எங்களுக்கு அதுதான் உயிர் போகாத் தண்ணீர். ரொம்பவும் பெரிய மனது வைத்துப் பொறுத்துக்கொள்ளவேண்டும். எனக்கும் சோதனை மேலே சோதனை. என் பையன் பாண்டியனும் வேலையை விட்டு வந்துவிட்டான். காவேரியின் திருமணம் வேறு...

**உல :** எல்லாம் நீங்க குடுத்த இளக்காரம் ஐயா, தட்டி வளர்க்காத பிள்ளையோ தவிட்டுக்கு வாங்கின பண்ட மோம்பாங்க. இப்ப என்னடான்னு எனக்கு எதிராக வே பண்ணைக்காரப் பயலுகளைச் சேர்த்துக்கிட்டுப் புரட்சி பண்ணுறானும்..புரட்சி.

**கரு :** என் பையன் அப்படியெல்லாம் தப்புச் தண்டா விற்குப் போக மாட்டானுங்க..அவன் நீங்கள் அறிய வளர்ந்த பிள்ளை. அப்படியே அவன் தவறு செய் தாலும் திருத்தவேண்டியது எங்கள் பொறுப்பு.

**உல :** ஆமாமா..உங்க பையன் செய்யுறது உங்களுக்குத் தப்புத் தண்டாவாத் தோணுது. என்ன..ஊரான் தலையிலே தானே மிளகாய் அரைக்கிறான். என் வளவளான்னு பேசணும் எய் கணக்கப் பிள்ளை.

(கண்ணாயிரம் எழுந்து)

**கண் :** (ஏட்டைப் புரட்டியபடி) கருணாகரம் பிள்ளை..பற்று.. மார்கழி மாதம் 25-ம் தேதி..காலை 11 மணி யோடே ஒன்பதாயிரத்துத் தொண்ணூத்தி ஒன்பது ரூபாய் பதினைந்தணா பதினேரு பைசாவும் சொச்சமும் ....அதாவது 99 புதுக்காசும் ஆச்சுங்க.

உல : பார்த்துக்கங்க....நனைஞ்ச வைக்கோல்கட்டு மாதிரி வட்டியும் முதலுமாக ஏறிபோச்சு..அடகும் வேண்டாம், நிலமும் வேண்டாம்..நெல்லும் வேண்டாம் சில்லறையைத் தள்ளிக்கிட்டுப் பூராப் பணத்தையும் பொங்கலுக்குள்ளே தீர்த்துப்பிடுங்க..

கரு : அது எப்படிங்க முடியும்..?

உல : முடியலேயின்னா..ஒரு நெல்லுமணிகூட உங்க வீடு வராது ஆமா....

கரு : என்னங்க முதலியார்வாள்..கொடியைப் படரவிட்டுப் பந்தலைப் பிரித்த மாதிரி..திடீரென்று மென்னியைப் பிடித்தால்

உல : திடீர்னு ஒன்றும் இல்லே..எல்லாம் திட்டம் போட்டுத் தான்.

கரு : திட்டம் போட்டா....!

நல் : திட்டம் போட்டா ? நாட்டில் குடிதழைக்கத் திட்டம் போடுகிறார்கள்..நீங்கள் குடி கெடுக்கத்திட்டம் போடுகிறீர்கள்..என்ன கொடுமையப்பா இது ? காலத்தின் போக்கை அறிந்தாவது கண் திறந்து பேசுங்களப்பா. அழக்கொண்டதெல்லாம் அழப் போய்விடுமப்பா..பணம் மட்டும் பெருகிவிட்டால் போதுமா..பெருந் தன்மையும் மனிதப் பண்பும் வளர வேண்டுமப்பா..எல்லோரும் வாழும் நல்லெண்ணம் பெருக வேண்டுமப்பா.

உல : போதுமப்பா..போதும். போடா உள்ளே! புத்தி சொல்ல வந்துட்டான், என்னைக் காட்டிலும் மகா நல்லெண்ணத்தைக் கண்டவன் .. (கருணாகரரிடம்) சரி. பிள்ளே. ரெண்டிலே ஒன்று. இன்னும் இரண்டு நாளைக்குள்ளே தெரியணும் ஆமா..

(எழுந்து உள்ளே போதல்..கருணாகரர் தலை குனிந்தபடி உட்கார்ந்திருக்கிறார்)

நல் : வருத்தப்படாதீர்கள். அப்பா ஆத்திரப்பட்டுக் கொட்டி விட்டார்..இதை எண்ணிக் கலங்காதீர்கள்...

(கருணாகரர் மெதுவாக எழுந்தபடி)

**கரு :** பார்த்தீர்களா தம்பி! பழகின பழக்கத்தையெல்லாம் பண ஆசை திரைபோட்டு மூடிவிட்டதே. அருள் செழித்திருந்த சோலைபோன்ற நெஞ்சத்தைக் கொடுமை நிறைந்த பாலையாக்கி விட்டதே....

**நல் :** அந்தப் பாலைபோன்ற நெஞ்சத்தை மீண்டும் பசுஞ் சோலையாக்க முடியும்....நீங்கள் வருந்தாமல் வீடு செல்லுங்கள்..நான் அங்கு வருகிறேன்.

(திரை)

# களம் 1

## காட்சி 2.

**இடம் :** கருணாகரம் பிள்ளை வீடு.

**மாந்தர் :** காவேரி, கருணாகரர், பாண்டியன்.

(கருணாகரம் பிள்ளையின் மகள் காவேரி பாடிக் கொண்டிருக்கிறாள்—" பாருக்குள்ளே நல்ல நாடு " என்ற பாரதியார் பாடல்)

" ...உயர் மானத்திலே அன்ன தானத்திலே " என்ற அடிகள் கருணாகரர் காதில் விழுகிறது. சோர்வுடன் வந்து கட்டிலில் அமர்கிறார்.

**காவேரி :** (பாட்டு முடிந்ததும்) என்னங்கப்பா ஒரு மாதிரி யாக இருக்கிறீர்கள்..(முதலியாரிடம்) ஏதேனும் தகராறு?

**கரு :** ஆமாம்மா..நீ பாடினயே..மானமும்..தானமும்.. போச்சம்மா கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் பேசி விட்டார். இரண்டு குடும்பமும் இத்தனை வருசமாப் பழகிய பழக்கத்தை யெல்லாம் ஒரு நொடியில் பொடியாக்கிவிட்டார். இந்தப் பொங்கலுக்கு முன்னே எல்லாப் பணத்தையும் நாம் தந்துவிடவேணுமாம் அம்மா..(இருமுதல்).

**கா :** இந்தப் பொங்கலுக்குத் தானேப்பா விளைந்த நெல் வீடு வரும்னு பார்த்தோம். அதையும் கொடுத்து விட்டு வேறு என்னப்பா செய்வது ? அவருகூடவா அப்பா கட்சி ?

**கரு :** எவரும்மா. அந்தப் பையன் நல்லப்பனைச் சொல்றியா..என்னம்மா அவனாலே செய்ய முடியும்.. அப்பாவுடைய சாவிக் கொத்து இடுப்பைவிட்டு இறங்கும் வரை இளைஞர்களின் லட்சியமும் கொள்கையும் உதட்டோடுதானே இருக்கும். சாவி கைக்கு வந்துவிட்டால் உதட்டிலேயும் ஒட்டாமல் உதிர்ந்து விடும்..ம்.... நாம் ஏதோ கடன் பட்டு விட்டோம். கடன் இல்லாமல் கால் வயிற்றுக்கஞ்சி குடித்தாலும் போதும்..எப்ப உலகப்ப முதலியாரே இவ்வளவு கண்டிப்பாகச் சொல்லிவிட்டாரோ நமக்கு அந்த நிலத்து நெல்லு ஒரு மணியும் வேண்டாம்.

**கா :** அப்படின்னு நம்ம சாப்பாட்டுக்கு என்னப்பா செய்வது. ?

**கரு :** என்ன செய்வது..எல்லாம் கடவுள் விட்ட வழி

(பாண்டியன் நுழைதல்)

**பாண் :** எதப்பா கடவுள் விட்ட வழி ? காசு சேர்க்கும் பேராசையில் கண்மூடி வெறியாடுகிறவர்களது காலை பிடித்துக் கெஞ்சுவதா கடவுள் விட்ட வழி ? நாளெல்லாம் பாடுபட்டுக் கிடைத்த நாலு கலத்தையும் நடு வழியிலே பறி கொடுக்கிறதா கடவுள் விட்ட வழி....? நாட்டுச் சட்டம் எங்கே போச்சு..நியாயம் எங்கே போச்சு..அந்த வழியெல்லாம் இல்லாமலா கடவுள் விட்ட வழி வந்துவிட்டது....?

**கரு :** பாண்டியா..உனக்கு இன்னும் உலக நடப்புத் தெரியவில்லையப்பா..உரிமையோடு உன்னை வளர்த்தேன். வறுமையால் வாடியபோதும் உன்னை வானம் பாடியாகத் திரியவிட்டேன். ஒரு பிள்ளை யென்று உணர்வை அதிகமாக ஊட்டி வளர்த்தேன். அந்த உணர்வு அளவு கடந்து பெருகி உன்னை நிலைதடுமாறச் செய்கிறது, கண்மூடிப்பேசச் சொல்லுகிறது....

(பாண்டியன் தலையசைத்துக் குனிந்து நிற்றல்)

குடும்பக் கவலையுள்ள ஒரு பிள்ளை எனக்குப் போதாதா? நீ குடும்பத்தை ஒழுங்காகக் கவனித்தால் எனக்கு எம்ப்பா இந்தக் கஷ்டம் ? உன் ஒரே தங்கை காவேரியைப் பார். அவள் கண் கலங்காத இடமாக முடித்துவிட்டால் என் கட்டை சாந்தியடைந்துவிடும்.. (பெருமூச்சு விடுதல்)

**கா :** என்னப்பா....என்னென்னவோ பேசுகிறீர்கள் ?

**கரு :** எல்லாம் அவசியத்தோடுதானம்மா பேசுகிறேன்.... ஊர்க்கடனும் உள்ளங்கைச் சிரங்கும் என்பாங்க.. நாம் அந்த உணர்ச்சிகூட இல்லாமல் இருக்கலாமா ?

**பாண் :** கடன் படாதவன் இந்த உலகத்தில் யார்தாம்ப்பா இருக்கிறார் ? "இருக்கிறவனும்தான் கடன் வாங்கிறான் ..இல்லாதவனும் வாங்குகிறான்..என் சர்க்காரே கடன் வாங்குது !" ஏதோ கடனைப்பட்டோம். உலகப்ப முதலியார் சொத்துக்கு நாமா பிறந்திருக்கிறோம். இன்றைக்கு இல்லாவிட்டால் நாளை அவர் முகத்தில் தூக்கியெறிந்துவிட்டுப் போகிறோம்....

**கரு :** இந்தத் துடுக்குத்தனம்தாம்ப்பா உன்னைக் கெடுத்து விட்டது. பட்டணத்து மில்லிலே வேலை செய்யப் போனாய். பாட்டாளி வர்க்கம், தொழிலாளி உரிமை, வேலை நிறுத்தம் என்றல்லாம் ஏகக் கோஷமிட்டாய் ..ஆலையையும் மூடிவிட்டு வந்துவிட்டாய்..

**பாண் :** அப்படியானால் அநியாயத்தை எல்லாம் ஏற்றுக் கொண்டு மரக் கட்டையாக, மண்ணாங்கட்டியாகக் கிடக்கும் மானங்கெட்ட வாழ்வு நான் வாழவேண்டு மாப்பா ?

**கரு :** கடன் கொடுத்தவர்களுக்குத் திருப்பிக் கொடுக்காம லிருப்பது மட்டும் மானங்கெட்டவாழ்வு இல்லையா.... ..........

**பாண் :** என்னை என்னதாம்ப்பா செய்யச் சொல்லுகிறீர் கள்....?

**கரு :** இந்தக் கிராமத்திலேயாவது பண்ணையாளுகளைத் தூண்டிவிட்டு எதுவும் கலாட்டாச் செய்யாமல் இரு.. ..அதுவே போதும்.

**பாண் :** அப்டியானால் கண்ணிருந்தும் குருடனாக, காதிருந்தும் செவிடனாக, வாயிருந்தும் ஊமையாக, உணர்விருந்தும் முடவனாக, உள்ளமே யில்லாத கோழையாக என்னை வாழச் சொல்லுகிறீர்கள்..அது முடியாதப்பா..ஒரு நாளும் முடியாது. எதற்கும் சட்டம் உண்டு, வரம்பு உண்டு. பணபலத்தை வைத்து ஊரையே அடக்கி ஆள விரும்புகிறார் உலகப்பர்.

அவருடைய அக்கிரமம், பேராசை, அதிகாரமெல்லாம் இன்னும் பெருகினால் புரட்சி பொங்கிவிடும்..உலகப்ப பரே உருக்குலைக்கப்படுவார்.
(கையை நெறித்தல்)

**கரு :** பார்த்தாயா காவேரி. உன் உடன் பிறந்தவன் சூரத் தனத்தை ! ஊராரு கடனை வாங்கிவிடுவானும் திருப்பிக் கேட்டால் உருக் குலைத்து விடுவானும்..புரட்சி பொங்கி விடுமாம்..ம்..நீயே புத்தி சொல்லம்மா..நீயே சொல்லு..

(உள்ளே போதல்)

**கா :** என்ன அண்ணு இது? நீ அப்பா சொல்லுகிறபடி தான் பேசாமல் கேளேன்....

**பாண் :** ஏன்....அதுக்குப் பேசாமல் ஒரு முழுக் கயிற்றைக் கொடுத்துத் தூக்குப்போட்டுக் கொள்ளச் சொல்லட் டுமே....எல்லாம் உன்னாலே தான்.

**கா :** என்னாலேயா......? எனக்கென்ன ? (கிண்டலுடன்) அப்பா சாந்தமூர்த்தி அண்ணன் பெரிய புரட்சிவாதி ! பேசினாலே தீப்பறக்கும், பார்த்தாலே பொறி கலங்கும். இப்பேர்ப்பட்ட அண்ணன் இருக் கிறபோது எனக்கென்ன....

**பாண் :** (சிரித்துவிடுதல்) உனக்கென்னவா..உனக்கென்னங் கிறதை அவன் நல்லப்பனைக் கேட்டால் அல்லவா தெரியும். அப்படியே ஒப்பிப்பானே....(சிரித்தல்)

**கா :** போ....அண்ணு......

(திரை)

# களம் 1

## காட்சி 3.

**இடம் :** கணக்கப்பிள்ளை கண்ணாயிரம் வீடு.

**மாந்தர் :** கண்ணாயிரம் அவர் மனைவி அம்மாக்கண்ணு.

(கண்ணாயிரம் மெதுவாக வீட்டிற்குள் நுழைகிறார்).

**கண் :** அம்மாக்கண்ணு....என் கண்ணே....அம்மாக் கண்ணு....(சுற்று முற்றும் பார்த்தபடி) என் ஆசைப் பத்தினியையும் காணோம், அவள் பெத்த அரை டசன் செல்வங்களையும் காணோமே அடியே அம்மாக் கண்ணு....அடியே

**அம் :** (கையில் கரண்டியுடன் வருதல்) என்ன.... வர வர வாய் மீறுது....அடியே கிடியேன்னு வந்தாச்சா..

**கண் :** உன்னைக்கூட அடியேன்னு கூப்பிட முடியல்லை யின்னா, நான் வேறு யாரைத்தாண்டி அப்படிக் கூப்பிடறது..

**அம் :** என்..எவளையாவது கூப்பிட்டுத்தான் பாருங்களேன் ....

**கண :** அடெ கூப்பிட்டா என்னடி ஆகும்..? எண்டி என்னைப் பழைய பாடாவதிக் கண்ணாயிரம் என்று இன்னமும் நினைச்சுக்கிட்டிருக்கே? இப்போ பெரிய கணக்கப்பிள்ளை கண்ணாயிரம்டி.... கணக் கப்பிள்ளை கண்ணாயிரம். அதுவும் ஊருக்கு மிராசு உலகப்ப முதலியார் வீட்டுக் கணக்கப் பிள்ளை.

**அம் :** ஆமா.. அறுவடைக்காலம் வந்தா எலிக்கு அஞ்சு பெஞ்சாதியாம். பெருமைதான் போங்க..குதிச்சுக் குதிச்சு மாவிடிச்சாலும் குந்தாணிக்கு எது கொழுக்கட்டை. அவரு வீட்டுக் கணக்கப் பிள்ளை யின்னுப்பிலே நமக்கு வந்து நிறைஞ்சிடுமாக்கும். நானும் தான் பார்த்தேன்..

**கண :** என்னடி பார்த்தாய்....?

**அம் :** ஆமா.. வீருப்புக்கெல்லாம் குறைச்சல் இல்லே. நீங்களும்தான் ஒரு ஆம்பளேயின்னு வேட்டியைக் கட்டிக்கிட்டுத் திரியுறீங்களே..

**கண் :** நான் என்னடி செய்யுறது. வேறே எந்த ஆம்ப ளேயும் சேலேயைக் கட்டமாட்டேங்கிருனே..இல்லாட்டி நானும் வேணும்ணு....குழாய் மாட்டிக்கிறேன்.. (அப்புறம் குழாய்க்காரக் கண்ணுயிரமாயிடுவேன்).

**அம் :** போதும்.. போதும்.. வாயைத் திறக்காதீங்க.. நம்ப பொழைப்பைக் கேட்டால் ஊரு சிரிக்கும். அறக்கப் பறக்கப் பாடுபட்டாலும் படுக்கப் பாயில்லே.. ஒரு நல்ல துணியுண்டா.. நல்லது உண்டா.. கெட் டது உண்டா.. உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு.. ஆறேழைப் பெத்தது தான் மிச்சம். (சிணுங்கியபடி) நான் என்னத்துக்கு உங்கக்கிட்டேக் கிடந்து சீரழிய ணும்..

**கண் :** ஐயையோ....அழாதே அம்மாக் கண்ணு..வீடெல் லாம் வெள்ளமாயிரும். வேண்டாம்மா.. வேண் டாம் நான் என்னேக்காவது நீ கிழிச்ச கோட்டைத் தாண்டியிருக்கிறேனு.. நீ இப்போ என்ன சொன் ணுலும் கேட்கிறேன். தாயே.. வெள்ளத்தை நிறுத்து.. அம்மா....கண்ணு.

**அம் :** அப்படின்னு....நீங்களும் நாலு ஆம்பளேகள் மாதிரி நடந்துக்கணும்.

**கண் :** என்னடி.. ஆம்பளே ஆம்பளேன்னு என் மானத்தை வாங்குறே.. என்னேப் பார்த்தா ஆம்பளேயாத் தெரியலேயா.. நாலு ஆம்பளே மாதிரி நான் ஒருத்தனு எப்படிடி நடக்கிறது.

**அம் :** தினம் நாலு பணம் சேர்க்கணும். எப்படியாவது சேர்க்கணும் சொத்தைப் பெருக்கணும்.

**கண் :** நான் எப்படித் தாண்டி இனிமேல் பெருக்கிறது. ஊரெல்லாம் உற்பத்தியைப் பெருக்கத் திட்டம் போடுறேம்ணுங்க. நான் வேறே வழியில்லாமல் ஒரு அரை டசன் பிள்ளேகளேப் பெத்துப் பாரத நாட்டுக்கு விட்டிருக்கிறேன். இந்த உற்பத்திதான் என்னுலே முடிந்தது. வேறே என்ன தான் செய்யிறது. எப்படித்தான் பெருக்கிறது.

**அம் :** எப்படியாச்சியும் யாரையாவது மோசம் பண்ணித்தான் பெருக்கணும். ஒருத்தனை ஒருத்தன் மோசம் பண்ணாமெ எதுவும் செய்ய முடியாதுன்னு எங்கப்பா சொல்வாறே....

**கண் :** சொல்லமட்டுமா செஞ்சாரு.. செயலிலே தான் காட்டிப் பிட்டாரே.. என்னையெ மோசம் பண்ணி உங்கிட்டத் தள்ளிப்பிட்டாருல்ல..

**அம் :** ஆமாமா.. குளம் குட்டையிலேயாவது.. பாழடைஞ்ச கேணியிலாவது தள்ளாமெ என்னைக் கொண்டாந்து இந்த கருமத்துக்கிட்டே தள்ளினாரே..

**கண் :** அப்படித் தள்ளியிருந்தாத்தான் ஒருத்தருக்கும் உபத்திரவம் இல்லாமெப் போயிருக்குமே..

**அம் :** நான் இருக்கிறது உங்களுக்கு உபத்திரவமா.. இருக்கு.. நான் இப்பவே போறேன்.. உங்க பிள்ளை களை நீங்களே வைச்சுக்குங்க..

**கண் :** ஐயையோ.. அதுகளை வச்சுக்கிட்டு நான் என்ன செய்யுறது.. தாயே.. அம்மாக் கண்ணு வேண் டாண்டி.. நீ என்ன சொன்னாலும் கேட் கிறேன். எப்படிச் சம்பாதிக்கணும்னு சொல்லிக் குடு.. அப்படி யெல்லாம் செய்யுறேன்.. பெண்டாட் டித் தெய்வம் தாண்டியம்மா பெரிய தெய்வம், கண் கண்ட தெய்வம்..

**அம் :** அந்தப் புத்தி இருந்தாத்தான் வீடெல்லாம் விளைஞ் சிடுமே.. இந்தாப் பாருங்க.. நான் சொல்றதைக் கேளுங்க..

**கண் :** சொல்லு.. சொல்லு..

**அம் :** நாம்ப.. ஒரு திட்டம் போடணும்..

**கண் :** திட்டமா.. எதுக்குடி திட்டம் ?

**அம் :** உங்க முதலாளி வீட்டுக் கணக்கு, பணமெல்லாம் உங்க கிட்டே தானே..

**கண் :** பணம் வரும். உடனே அவரு பெட்டிக்குப் போயி டும்.. கணக்கு வரும். எனக்கிட்டே தான் இருக்கும்.. ஆமா.. நான் எழுதி வைத்திருக்கிற

கணக்கை என்னை விட்டால் வேறே எந்தப் பயலுக்கும் ஒரு வரி தெரியாது. அணு பைசாத் தவருமெ சர்க்காரு தஸ்தாவேஜி மாதிரில்ல வச்சிருக்கேன். எங்க முதலாளி கூட என்னைக் கேட்டுத்தான் இருப்பைத் தெரிஞ்சுக்குவாரு.. கண்ணுயிரம் கணக்குன்னு கோர்ட்டு வரை எடுபடும் ஆமா..

**அம் :** இப்படி யெல்லாம் கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சுக் கொடுக்கிறீங்களே.. உங்களுக்கு என்னமாச்சியும் பிரயோசனம் உண்டா..

**கண் :** அதாம் மாசம் பத்து ரூபாயும் ரெண்டு மூட்டை நெல்லும் தர்ருரேடி..

**அம் :** இவ்வளவு பாட்டுக்கும் இதானு கூலி? இது எந்த மூலைக்கு.. இதை வைச்சிக்கிட்டு என்ன செய்யுறது... வருஷம் ஒண்ணு பொறந்தா புள்ளை ஒண்ணு கூடிக்கிட்டே வருது...

**கண் :** (யோசித்தபடி) ஆமா.. அம்மாக் கண்ணு.. நீ சொல்றதிலேயும் நியாயம் இருக்கு.. மூட்டை மூட்டையாத்தான் வீடு வருது.. யாருக்கு லாபம் மூட்டை யடிக்கிறவனுக்குத்தான் லாபம், அவரு மகன் இளைய பயல் என்னடான்னு படிக்கிறேன் படிக்கிறேன்னு தாம்தூம்னு செலவழிக்கிருன். பெரியவன் ஊரைச் சுத்துருன். நியாயம் அனியாயம்னு பிரசங்கம் பண்ணிக்கிட்டுத் திரியுருன். நான் மட்டும் நினைச்சா..

**அம் :** எவ்வளவோ செஞ்சுக்கலாம்.. நமக்கு ரொம்ப ஒன்னும் வேண்டாம் (காதோடு சொல்லல்).. என்ன இவ்வளவு போதும்.

**கண் :** இந்தத் தலகாணி மந்திரம் போதும்டி. கொளுத்திப்புடுறேன். உனக்கு இவ்வளவு மூளையிருந்துச்சுன்னு எனக்கு இவ்வளவு நாளாத் தெரியாமெப் போச்சடி ! நீ தாண்டி என் தர்ம பத்தினி.. எனக்கேத்த பெண்டாட்டி... சாடிக்கு ஏத்த மூடி.. (அவளைப் பிடிக்க எழுதல்)

**அம் :** சரி.. சரி.. பழைய சோத்துக்கேத்த சுண்டைக் குளம்பு வச்சிருக்கேன் சாப்பிட வாங்க..

**கண் :** அம்மாக்கண்ணு.. அம்மாக்கண்ணேய்.. நாம் பெத்த செல்வங்கள் எல்லாம் எங்கேடி.. ஒண்ணத் தையும் காணோம்..

**அம் :** தொட்டியிலே ஒன்னு கிடக்கு.. தோட்டத்திலே நாலஞ்சு திரியுது..

**கண் :** போதும்.. போதும்.. சோறுபோடு.. போடு.. அதுக கண்ணிலே படும் முன்னாலே அஞ்சாறை அள்ளி வாயிலே போட்டுக்கிறேன்.

(திரை)

# களம் 1

## காட்சி 4

**இடம் :** கருணாகரர் வீடு.

**மாந்தர் :** காவேரி, நல்லப்பன், பாண்டியன், கருணாகரர் (காவேரியும், நல்லப்பனும் தனிமையில்....)

**நல் :** நீ கூடவா தப்புக் கணக்குப் போட்டுவிட்டாய் காவேரி! சிப்பியின் வயிற்றில் முத்துப் பிறப்ப தில்லையா, கள்ளியின் வயிற்றில் அகில் பிறப்பதில் லையா,.. என் அப்பா பேராசை பிடித்தவர்தான். அவர் வயிற்றில் பிறந்த ஒரே குற்றத்திற்காக என்னை யும் பேராசைப் பித்தேறியவன் என்று கூறுகிறாயா?

**கா :** சேற்றில் தான் செந்தாமரை பிறக்கும் என்பது எனக் கும் தெரியும்... நான் ஒன்றும் உங்களை மாறு பாடாக எண்ணவில்லை. அப்பாவும் அண்ணனும் தான் ஒரு மாதிரியான தடைகளைச் சொல்லுகிறார்கள்.

**நல் :** உன் அப்பா என்ன சொல்லுகிறார் காவேரி..

**கா :** உங்கள் சாதி வேறு....எங்க சாதி வேறு.. நீங்கள் பெரிய இடம்.. அது இது என்றார்.. உண்மை தானே..

**நல் :** ஆம்! உண்மைதான்! (காவேரி—திகைத்தல்) சாதி, சாத்திரம்,குலம், கோத்திரம்—தமிழ்ச் சமுதாயத்தையே பாழாக்கிய இந்தத் தீய சொற்கள் உன் அப்பாவையும் விட்டு வைக்கவில்லையா?.. காவேரி.. காலம் மாறியும் உங்கள் அப்பாவுமா இன்னும் பத்தாம்பசலிச்

சனுதனம் பேசுகிருர். அவருடைய உயர்ந்த பண்பும், தெளிந்த நோக்கும் சாதிச் சாக்கடையைக் கண்டா அஞ்சுகின்றன.. ? பாண்டியனும் அப்பா கட்சிதானு?

**கா :** அண்ணு சொல்லுகிருர்..பணம் எப்படி நிலையில்லா ததோ அதுபோலத்தான் பணக்காரர்களுடைய நெஞ்ச மும், நினைப்பும், செயலும், சிந்தையும் என்கிருர்..

**நல் :** நன்ருயிருக்குறது. பணக்காரனுக்கு மகளுகப் பிறந்த தால் எனக்கு நெஞ்சமும் இல்லை, நேர்மையும் இல்லையென்று பாண்டியன் குற்றம் சாட்டுகிருன் ? ம்.. ம்.. நல்ல உலகம் பஞ்சையும் தலைதூக்க முடியவில்லை. பணக்காரனும் வாழமுடியவில்லை..

**கா :** நானென்ன செய்வது.. அப்பாவும் அண்ணனும் தானே அப்படிச் சொல்லுகிருர்கள்..அப்பா ஒரு அணையைக் கட்டிவிட்டார் ; அண்ணு ஒரு தடையை எழுப்பி விட்டார். அப்புறம் காவேரி ஓடமுடியுமா ? தேங்கித்தானே திகைக்கவேண்டும் ?

**நல் :** என் வாழ்வில் நீ சங்கமமாக இத்தனை தடையா ? அப்படியானுல் உன் முடிவுதான் என்ன காவேரி..

**கா :** என் முடிவிற்கு என்ன இருக்கிறது ? (அலட்சியமாக) நான்தான் அன்றே முடிவு செய்துவிட்டேனே....

**நல் :** என்ன.. உன் முடிவு.. ? சொல்..சொல்..

**கா :** பில்ஹணன் காதலி அமுதவல்லியும், அம்பிகாபதி யின் காதலி அமராவதியும், சாருதத்தன் காதலி வசந்தசேனையும், துஷ்யந்தன் காதலி சகுந்தலையும், கோவலன் காதலி கண்ணகியும், மேற்கொண்ட முடிவுதான் என் முடிவும் ? வாழ்ந்தாலும் உங் கள் காவேரி தான், மடிந்தாலும் உங்கள் காவேரி தான்....! ஓடினுலும் உங்கள் காவேரிதான், ஒடுங்கினுலும் உங்கள் காவேரிதான் !

**நல் :** காவேரி.......... !

**கா :** அன்பே........ !

**நல் :** காதலை இலக்கியத்தில் படித்திருக்கிறேன், இன்று தரிசிக்கிறேன் ; அனுபவிக்கிறேன் ! நீயோ சாகாவரம் பெற்ற இலக்கியக் காதலிகளையும் தாண்டிவிட்டாய்.... ஆனுல்..

**கா :** ஆனால் ....!

**நல் :** அந்தச் சிரஞ்சீவிக் காதலர்கள் நடந்த பாதையில் நாமும் நடக்க நேர்ந்தால்....

**கா :** தயங்காது நடப்போம். நீங்கள் அன்று சொன்னீர்களே.. காதல் பாதை விசித்திரமானது, கரடு முரடானது, கண்ணுக்குப் புலப்படாதது அப்படி இப்படியென்று....

**நல் :** இனிமேல் நான் அப்படிச் சொல்ல மாட்டேன்.... காவேரி! சொல்லமாட்டேன். இனி நமது காதல் வளர் பிறை, கலை நிறை வான்மதி, கோடை நிழல், கொட்டும் நன்னீர்! தெவிட்டாத் தேன், தித்திக்கும் இசை.

**கா :** நான் அப்படிச் சொல்லமாட்டேன் அன்பரே! நமது நட்பு இன்னும் மாம்பூவாகத்தான் இருக்கிறது. இதிலே அழகு இருக்கிறது, மணமும் இருக்கிறது. ஆனால் எப்போது உதிர்ந்துவிடுமோ என்று ஏக்கம் தான் என்னை வாட்டுகிறது..

**நல் :** ஏக்கம் எதுவும் வேண்டாம் காவேரி! என் தகப்பனார் பணக்காரராகச் சாவதற்காக ஏழையாகவே வாழ்கிறார்.

**கா :** அவருக்குப் பணம்தான் ஒரே குறி..அந்தப்பணம் இல்லாக் குறைதானே எங்களை இந்த நிலையில் வைத்திருக்கிறது. எதுவும் செய்யமுடியாமல் சோதனை செய்கிறது. அப்பாவுக்கு நீண்ட நாட்களாக நல்ல சுகமில்லை..அண்ணனுடைய சம்பாத்தியமும் நின்றுவிட்டது.

**நல் :** காவேரி..என் நிலையை நானும் தெளிவு படுத்தி விடுகிறேன். சிறு பருவத்தில் கூடிச் சிற்றில் இழைத்து விளையாடிய பருவம் தொட்டுச் சேர்ந்து பழகிவிட்டோம். இன்று இருவர் சிந்தையும் இணைந்து விட்டது. காலமும் பருவமும் நம்மை நெருங்கியவர்களாக்கிவிட்டன...

**கா :** ஆனால் பணமும் அந்தஸ்தும் நம்மைப் பிரிக்கக் காத்திருக்கின்றனவே. சாதித்தடைகளையும், குலக் கொடுமைகளையும் நம்மீது வீசுகின்றனவே.... உங்கள் தகப்பனார் சம்மதிக்காவிட்டால்..

**நல் :** சம்மதிக்க வைக்க முயலுகிறேன்..அவர் சம்மதிக்கா விட்டால் இடையூறும் ஏராளமாகச் செய்வார்.

**கா :** என்ஞல் எத்தகைய இடையூறும் தங்களுக்கு வர வேண்டாம் அன்பரே....

**நல் :** வந்தால் என்ன..எது வந்தாலும் இருவரும் மன முவந்து ஏற்போம். தயங்காது தியாகம் செய்வோம். காதலுக்காக மாமன்னர்கள் தங்கள் அரசபதவியையே துச்சமெனத் தள்ளியிருக்கிருர்கள், மாவீரர்கள் களம் பல கண்டிருக்கிருர்கள், காப்பியக் காதலர்கள் செய்த தியாகத்தில் ஒரு பகுதிகூடத் தியாகம் செய்ய முடியாத கோழையா நான்....!

(பாண்டியன் நுழைதல்)

**பா :** சபாஷ்....! கோழையா நீர்....! இந்தக் கேள்வி யைக் காவேரியிடம் கேட்டு என்ன செய்வது தோழரே..! உம் தந்தையாரைக் கேளும், அவருடைய அடக்கு முறைச் சுவட்டில் ஒடுக்கப் பட்டிருக்கும் பண்ணையாட்களைக் கேளும், ஊராரைக் கேளும்....என்....உம் நெஞ்சத்தையே கேளும்.... கோழையா இல்லையா என்று..

**நல் :** பாண்டியன்..நீயுமா என்னைக் கோழையென்கிருய், கொடியவன் என்கிருய்..

**பா :** நானென்ன சொல்ல இருக்கிறது. வயது வந்தவர்.. வீட்டுக்கு மூத்தவர். அப்பாவின் அக்கிரமங்களுக்கும் ஆர்பாட்டங்களுக்கும் "ஆமாஞ்சாமி" போட்டுக் கொண்டிருந்தால் வேறு என்னய்யா அர்த்தம்?

**கா :** அண்ணு நீயுமா அவர் மனதைப் புண்ணுக்குகிருய்..

**பா :** நீ சும்மா இரும்மா..அவர் மனது இப்பொழுது தானே புண்ணுகப் போகிறது....ஆண்டாண்டு களாகத் தீண்டத் தகாதவர்கள் என்றும், கூலிப்பட் டாளம் என்றும், ஒரு சாரார்ரை ஒதுக்கி வைத்து அவர் களை என்றென்றும் மண் சுமக்கச் செய்த கொடுமை சும்மா போய்விடுமா....ஆருது பொறுக்குத் தட்டிய புண் வேசில் மறைந்துவிடுமா ?

**நல் :** பாண்டியன் ....எதையும் நேரடியாகவே கேட்டு விடேன்.

பா : நேரடியாகத்தான் கேட்கப் போகிறேன்..நல்லப்பரே.. நீர் பெயரில் மட்டும் நல்லப்பராயிருந்து பயனில்லை.. உன் தந்தையாரின் கொடுமை கோபுரம் போல் உயர்ந்து விட்டது உன் கண்ணில் படவில்லையா! விளைந்த நெல் வீடு வரமுடியாமல் எல்லோரது வயிற்றிலும் அடிக்கும் கோரச் செயல் உன் உள்ளத்தை உலுக்கவில்லையா? நாட்டுச் சட்டத்துக்குத்தான் கண் இல்லை, நீதிக்குக்கால் இல்லை..சமூகத்துக்கு காது இல்லை..உனக்குக் கூடவா உணர்ச்சியில்லை..உள்ளமில்லை.. எண்ணமில்லை, **இதயமில்லை....**

நல் : பாண்டியன்..போதும்..என்னைச் சித்திரவதை செய்யாதே.. நீ பிறந்தது முதல் வானம் பாடியாகவே திரிபவன்..எதுவும் பேசலாம். நான் கூண்டுக்கிளியாக இருந்து கொண்டே வானத்தையும் அளக்க வேண்டும்..

பா : **ம்..கூண்டுக்கிளி..**அந்தக் கூண்டை உடைத்தெறிய எவ்வளவு நேரமாகும்..?

நல் : உன்னை விட எனக்கும் பேசத் தெரியும்..பேசிவிடுவதால் மட்டும் காரியம் ஆகிவிடாது என்பதும் எனக்குத் தெரியும். என் அப்பாவின் போக்கும் எனக்குத் தெரியும்..எல்லாம் தெரியும்.

பா : அப்படியானால் எல்லாம் தெரிந்துதான் நடிக்கிறாயா?

நல் : நான் ஒன்றும் நடிக்கவில்லை. எல்லோர்க்கும் எல்லா உரிமையும் உண்டு, வாழ்வும் வளமும் உண்டு; அதைப் பெறுவது உரிமை, வழங்குவது கடமை என்ற உன்கருத்தை நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் அமைதியாகவே அனைத்தையும் சாதிப்பதே நலமென்பது என் கட்சி. வெறுப்போடு திட்டியல்ல; விருப்போடு திருத்தி! ஆர்ப்பாட்டத்தினாலும் புரட்சியினாலும் அல்ல; அஹிம்சையினாலும், அன்பினாலும்! நாட்டில் நல்லது பெருக வேண்டுமென எண்ணுகிற நாமும் நல்லதே செய்யவேண்டும் பாண்டியன்..இதுதான் என் நோக்கம்....

பா : போதும் .. இந்த நோக்கம் இருபதாம் நூற்றாண்டிற்கு ஏற்றதில்லை தோழரே..ஏற்றதில்லை. இந்த அன்புவழி பணக்காரனை இன்னும் பணக்காரனுக்கும், ஏழையை இன்னும் பரம ஏழையாக்கும்.

உன்னைச்சொல்லி என்ன குற்றம்.. உன் குடிப்பிறப்பும் பணப் பெருமையும் அந்த அன்பு வழியைத்தானே உபதேசிக்கும்..

**கா :** அப்படியானால் எல்லாப் பணக்காரர்களும் ஒரே மாதிரி தானா அண்ணா .. நல்லவர்கள் யாரும் இல்லையா?

**பா :** நல்லவர்கள் இருக்கமாட்டார்கள்..நல்லப்பர்கள்தான் இருப்பார்கள்..காவேரி..நீ வக்காலத்து வாங்கிப் பேசுவதற்கு வேறே விஷயம் நிறைய இருக்கிறது.. அதோட நிறுத்திக்கொள்..இது எங்கள் இருவருக் கும் இடையே ஏற்பட்டுள்ள கொள்கைப் போராட்டம்.. அவர் அபிப்பிராயம் மாறும் வரைக்கும் விடமாட் டேன்..அதிகார மூடுதிரையும், பணக்கார முலாமும் கலையும் வரை லேசில் விடமாட்டேன்.

**நல் :** இதை நான் அன்புச் சவாலாக ஏற்றுக்கொள்ளு கிறேன் பாண்டியன். தொழிலாளர் துயர் தீர்க்க உன் போராட்டந்தான் சரியான வழி யென்றால்..

**பா :** கட்டாயம் போராட்டம் தான் சரியான வழி..புதிய தோர் உலகு பூக்க வேண்டுமென்றால் கெட்ட போரி டும் உலகத்தை வேரோடு சாய்க்கத்தான் வேண்டும்..

**கா :** அப்பப்பா..எனக்குத் தலைவலி எடுக்குது..

**பா :** ஆமாமா..நான் பேசினால் உனக்குத் தலைவலிக்கத் தான் செய்யும்.

**நல் :** நீ கொஞ்சம் பேசாமலிரு காவேரி..அவருடைய போராட்டச் சண்டைமாருதங்களைத்தான் கேட்போம்.. நீங்க பேசுங்க..புரட்சி வீரரே..போராட்டச் சிங்கமே பேசுங்க..எரிமலை கக்கட்டும், கடல் முழங்கட்டும், இடி இடிக்கட்டும்....!

(கருணாகரர் இருமியபடி வருதல்)

**கரு :** என்னம்மா இது ஒரே கலாட்டா....

**கா :** இவர்கள் இருவரும் சேர்ந்துகொண்டு வீட்டையே இரண்டு படுத்துகிறார்களப்பா....

**பா :** நல்லவேளை....நான் மட்டும்தான்னு சொல்லாமல் இருந்தாயே.

**கா :** ஆமெ ! எப்பப்பார்த்தாலும் கிண்டல்தான்....

(காவேரி போதல்)

**கரு :** யாரு..நல்லப்பனு..வாப்பா..வா..

**நல் :** காலையிலே அப்பா பேசியதையெல்லாம் மனதில் கொள்ளவேண்டாம் என்று மன்னிப்புக் கேட்கத்தான் வந்தேன்..

**கரு :** இருக்கட்டும்..பரவாயில்லை..ம்..அதுபோகட்டும்.... தம்பி பாண்டியனும் இருக்கிறபோதே உங்களிடம் ஒன்று கேட்டுவிட விரும்புகிறேன்....

**நல் :** நன்ருகக் கேளுங்கள்....

**கரு :** நமது இரண்டு குடும்பங்களுக்கும் இதுவரைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. அந்தக் கடன் சமாசாரம்தான் எல்லாவற்றையும் கெடுத்துக்குலைத்து விட்டது..இன்னும் என்ன ஆகுமோ....

**நல் :** எதுவும் ஆகாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன் மாமா..மா..மா..(தயங்குதல்)

**பா :** என்ன முழுங்கிறீங்க..சும்மா "மாமா" என்றே கக்குங்க..எல்லாம் தெரியும்....

**கரு :** (பாண்டியனிடம் செல்லமாக) டே..சும்மா..இரு.... (நல்லப்பனிடம்) இந்தாப்பாருங்க நல்லப்பன்..என் மகள் காவேரியை உங்களுக்குத் தருவதில் எனக்கு இரட்டைச் சந்தோஷம் தான்..ஆனல் உலகப்ப முதலியார் இதுக்குச் சம்மதிப்பாருன்னு நான் நம்பவில்லை....

**நல் :** இதிலெல்லாம் அப்பாவின் கட்டுப்பாடு என்னை எதுவும் செய்யமுடியாது......

**கரு :** அப்படியெல்லாம் பேசாதீர்கள் தம்பி..பெத்தவங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று தானே பிள்ளைகளைப் பாடுபட்டு வளர்க்கிரேம்....நானுயிருந்தால் என்ன, முதலியாராக இருந்தாலென்ன.. இன்றைக்கு நிலையிலே உங்கள் அப்பாவுக்கு இணங்கி நடப்பதுதான் நல்லதென எனக்குத் தோன்றுகிறது....

**நல் :** நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்..?

(பாண்டியன் திரும்பிக் கொள்ளுதல்)

**கரு :** விளக்கமாகவே சொல்லிவிடுகிறேன்....உங்கள் தகப்பஞர் சம்மதம் பெற்று இங்கே வாருங்கள். நன்ருக வாருங்கள்..அதுக்கு முன்ஞலே..

**நல் :** அப்படியாஞல் நீங்களுமா என்னேச் சந்தேகிக்கிறீர்கள்..?

**கரு :** சந்தேகத்துக்கு இல்லே தம்பி....நாளேக்குச் சங்கடமேதும் வரக்கூடாதென்பதற்குதான்....

(நல்லப்பன் தலே குனிந்து நிற்றல்)

அப்படியாஞல் போய் வருகிறீர்களா..போங்க..

(நல்லப்பன் திகைத்துக் தயங்கிப் போதல்)

(திரை)

# களம் 1

## காட்சி 5

**இடம் :** உலகப்பர் வீடு.

**மாந்தர் :** உலகப்பர், ஆடியபாதம், பலவேசப் பண்டிதர், கண்ணுயிரம், பாண்டியன், நல்லப்பன், பண்ணேயாட்கள், பிச்சைக்காரன்......

(உலகப்ப முதலியார் தனக்குள் பேசிக்கொண்டிருக்கிருர்).

**உல :** காலம் அநியாயத்துக்குக் கெட்டுப் போச்சு..வெள்ளேக்காரன் ஆண்ட போது ஊரிலே இருந்த சீரென்ன, செழிப்பென்ன ? இப்ப இவனுக சுதந்திரம் வாங்கிஞலும் வாங்கிஞனுக....என்ன பாடுபடுத்துருனுக.........கத்தரிக்காய் வாங்கிக்கிட்டுப் பூசணிக்காய் கொசறு கேட்ட மாதிரி விளேஞ்சதெல்லாம் எனக்குத் தான்ங்கிருன் பண்ணேக்காரப்பயலெல்லாம்... கணக்கும் தெரியலே வழக்கும் புரியலே....நமக்கு வாச்ச பிள்ளே ரெண்டும் தென்னம் பிள்ளேயாப் போச்சு.... இளேயவஞவது ஒழுங்காகப் படிப்பான்னு பார்த்தால் அவன் பண்ணுற செலவு தாங்க முடியல்லே படிச்ச கிளாஸிலே பத்து வருசம் படிக்கிருன்.... நம்மைப் போல மிராசுதார் நிலேமை சாண் ஏறிஞல்

முழம் சறுக்குது..பண்ணையாட்கள் வயித்திலே கை வச்சா....சர்க்கார் நம்ப தலையிலே கை வைக்குது.... சேச்சே.......தலைசுத்துருப்பிலே ஆயிப் போச்சு பொழெப்பு..பரந்தாமா..பார்வதீசா..

(ஆடியபாதம் ஓடிவந்து)

**ஆடி :** எசமான்..எசமான்..இந்த வைக்**கோல்**கட்டெல்லாம் எங்கே போடச் சொல்ல..

**உல :** எந்தலையிலே போடச் சொல்லு.

**ஆடி :** தலையிலேயா..என்னங்க..இப்ப என்னத்துக்குங்க..

**உல :** அடச்சீ..தடிமாடு..எங்கேடா அவன் ?

**ஆடி :** அவரு அந்தப் பொண்ணுக்கிட்டேத்தாங்க..ப்ப்..

(வாயைப் பொத்தி விழுங்குதல்)

**உல :** எந்தப் பொண்ணுடா....என்னடா முழிக்கிறே....

**ஆடி :** இல்லீங்க..தெரியாமெச் சொல்லிப்பிட்டேன்..அவரு சொல்லக்கூடாதுன்னுதான் சொன்னாரு..வாய் தவறித் தெரியாமெ..இல்லீங்க..மறந்திடுங்க..

**உல :** டேய்..இங்கே வாடா....உள்ளத்தைச் சொல்லலை.. இன்னொரு காலையும் ஒடிச்சுப்பிடுவேன்..என்னடா சங்கதி..எந்தப் பொண்ணு..சொல்லு..ம்..

**ஆடி :** சொல்லிப்புடுறேங்க..அது..அது..நம்ப மூத்தவரு இல்லே..

**உல :** அது எவருடா மூத்த செவரு....

**ஆடி :** அவருதான் நல்லப்பய்யா..அவரு..அந்தக் காவேரிக்கிட்டே......

**உல :** எந்தக் காவேரிடா....சொல்லமாட்டே ஒழுங்கா....

**ஆடி :** [தெம்புடன்] அந்தக் கருணாகரம் பிள்ளை மகளைத் தம்பி கலியாணம் பண்ணிக்கப் போகுதுன்னு ஊரே பேசுது..

**உல :** என்ன ஊரே பேசுதா....

**ஆடி :** பின்னே..நம்ப வீட்டுச் சங்கதின்னுத்தான் சந்தைக் கடைக் கத்திரிக்காய் மாதிரில்ல எல்லாப் பயலும் பேசுறானுக..

**உல :** பேசுவாண்டா..பேசுவான்..நீ ஏண்டா முன்னாலே என்னிடம் சொல்லலை....

**ஆடி :** அவரு..ஐயாக்கிட்டேச் சொல்லக்கூடாது..சொன்ஞ உன் காலே முறிச்சிப்பிடுவேன்னு முன்ஞலே சொல் லிப்பிட்டாரு. சொன்ஞ அவரு முறிப்பேன்கிருரு, சொல்லாட்டி நீங்க ஒடிக்கிறேங்கிறீங்க ரெண்டுபாதமும் ஆடிறப்பிடாதேன்னு பேசாமே..ப்..ப்......

**உல :** ம்..அவ்வளவுக்கு ஆயிப்போச்சா..கருணுகரம் பிள்ளே என் சம்பந்தியாக வர்றதுக்கு வசியமருந்தும் வலே யும் போடுருஞ..கால்வாயைத் தாண்டக் காலில்லாத கபோதிப் பயல் கடலேத் தாண்டத் திட்டம் போடுருஞ..ம்..

(திரை மறைவில் பிச்சைக்காரன் குரல்)

**பிச் :** ஐயா..நாலு நாளாகப் பட்டினிங்க..சாமி..உங்க வீடு பொங்கணும்க..

**உல :** அது எவன்டா பொங்க வந்திருக்கவன்..மரியாதை யாப் போகச் சொல்லு....

(உலகப்பர் உட்காருகிருர்..ஆடியபாதம் சென்று)

**ஆடி :** நீ யாருப்பா..எடம் தெரியாமெ வந்துட்டே.... ஐயாவுக்கு நல்ல குணம் நர்த்தனம் ஆடுறபோதே நாலுபருக்கை கிடைக்காது. எள்ளும் கொள்ளும் வெடிக்கிற போது இவன் வந்திருக்கான்....ஏய்.. பண்டாரம்..வேறே குடுக்கிற இடமாப் பார்த்துப் போய்யா..போ.. (திரும்பியபடி) பாடாவதிப் பயலுக..காலங்காத்தாலே திறந்த வீட் டிலே நாய் நுழைஞ்ச மாதிரி வந்துடருனுக....

(பலவேசப் பண்டிதர் வருகிருர்).

**பல :** என்னப்பா..ஆளேப் பார்த்துத் தான் மங்களம் பாடு கிருயா..

**ஆடி :** அடெடே...பண்டிதர் ஐயாவா..நான் பிச்சைக் காரனேயில்ல போகச் சொன்னேன்..அவன் போயிட் டான்..இப்ப நீங்க வந்துட்டீங்க..போங்க..போங்க.. ஐயாவுக்கு வந்த சாமி இன்னேரம் மலே ஏறி இருக் கும்....

(ஆடியபாதம் உள்ளே போதல்)

**பல :** கும்பிடறேன் முதலியார்வாள்..

**உல :** (வேறெங்கோ பார்த்தபடி) கும்பிடுங்க..கும்பிடுங்க.. புத்திவரக்கும்பிடுங்க..

பல : கொஞ்சம் கிருபை வச்சுக் கடாட்சம் புரியணும்..நான் பலவேசப் பண்டிதர் வந்திருக்கிறேன்..பலவேசம்..

உல : (நிமிர்ந்து) ஓ..நம்ப பண்டிதரா..வாங்க..வாங்க.. நான்வேறே நினைப்பா இருந்திட்டேன்..உட்காருங்க.. என்ன இப்படி..

பல : ஒண்ணுமில்லே..ஒரு பாட்டுக் கட்டினேன்..ஹி..ஹி.

உல : அதை அரங்கேத்த வந்திங்களாக்கும்..

பல : ஆமா..ஊருக்குப் பெரிய மிராசு நீங்க..உங்க நாக்கு அசைந்தால் நாடசையும், உதடு அசைந்தால் ஊரசையும்..

உல : இப்ப ஒண்ணும் அசையாது..என் உடம்பே..அசைந்தாலும்கூட ஒரு துரும்பு அசையுதில்லே..காலம் கெட்டுப் போச்சுங்க பண்டிதர்..இப்ப எவன் மரியாதை குடுக்கிறான்..

பல : ஆமாங்க..எல்லாம் சமம், எல்லாம் சமம்னு சேரியிலே கிடந்தவனை யெல்லாம் சேர்த்து வைச்சுட்டாங்க, என்னைப் போல நாள், நட்சத்திரம், வாரசூலை, கிரகம் ராகு காலம், குளிகை, எமகண்டம் இதுக்கெல்லாம் எவன் மதிப்புத்தர்ரான்..போச்சு..என்ன காலத்துக்தான் இந்தப்பாடு படுத்துறானுகளோ..

உல : சரி..என்னமோ பாட்டுன்னிங்களே..காலாகாலத்திதிலே..

பல : இந்தா..ரெண்டே வரி..

"சண்டிக் குதிரை மேல்..நொண்டித்துரை செயும் சவாரி போலுமிவ் வாழ்வதனில்.

(கண்ணுயிரம் வேகமாக வருதல்)

உல : அருமை..அருமை..

பல : சவ்வாரி போலுமிவ் வாழ்வதனில்..

கண் : ஆமாங்க..அந்தப் பயலுக..இனிமேல் குதிரை ஏறிச்சவாரி பண்ணமல் விட மாட்டானுக போலிருக்கு..சே..சே..

உல : என்னய்யா..இது..புயல் வந்தா மாதிரி வர்ரே..

**கண் :** எல்லாம் அந்தப் பாண்டியன் பண்ணுற விவகாரங்க.

**உல :** பாண்டியனு..எலும்பு கடிக்கிற நாய்க்கு இரும்புக் கடையிலே என்னய்யா வேலே.. ?

**கண் :** சேரிப் பண்ணைக்காரனுகளே .யெல்லாம் கூட்டிக்கிட்டு நிறைய நெல்லுக் கேட்க வருகிருனுங்க..

**உல :** என்ன..குடிவைச்ச வீட்டிலே கொள்ளி வைக்கவந் துட்டானு..எங்கே..அவன்..

(பாண்டியன் பண்ணையாட்களுடன் வருகிருன்)

**பல :** பாருங்க..பாருங்க..தீண்டாதவன் எல்லாம் நடுவீட்டுக் குள்ளே வந்துட்டானுக..

**பா :** ஆமாம்..தீண்டாதவர்கள் தீண்டாதவர்கள் என்று நாளெல்லாம் உழைக்கிறவர்களே ஊருக்கு வெளியே ஒதுக்கியதைப் போல உரிமையையும் உங்களுக்கென ஒதுக்கிக் கொண்டு உல்லாச வாழ்வு வாழ்கிறீர்கள்..

**உல :** என்னப்பா..இடம் தப்பி வந்து கண்ணே மூடிக் கிட்டுப்பேசுறே..

**பா :** கண் மூடிப்பேசவரவில்லே..கண் மூடி வழக்கத்தை யெல்லாம் மண் மூடச் செய்யத்தான் வந்திருக்கி ருேம்..ஏர் கொண்டு உழைப்பவர்களே என்றென்றும் ஏமாளிகளாக இனிமேலும் வைத்திருக்க முடியாது என்று எச்சரிக்கத்தான் வந்திருக்கிருேம். இடம் தப்பி வரவில்லே..சாட்சாத் உலகப்ப மிராசுதாரின் திருச் சமூகம் நாடித்தான் வந்திருக்கிருேம்..

**உல :** டேய்..பண்ணைக்காரப்பயலுகளா..இவன் என்னடா உங்களுக்கு வக்கால்த்தா..வாயா..என்னங்கடா திமிருவச்சிருச்சா..மரியாதையாகப் போகலே..

**பா :** அப்படி அவர்களே மிரட்டி ஒடுக்க இனிமேலும் முடி யாது..உலகப்பரே ! ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆய்விடுவார்கள் என்பதை இனிமோலாவது தெரிந்துகொள்ளுங்கள்.. திருந்திவிடுங்கள்..இல்லேயென்ருல்..

**உல :** என்னடா பூச்சி பிடிக்கிறே..டேய்..ஆடியபாதம் கூப் பிடுடா ஆளுகளை..பயலுக கொழுத்துப் போயிட்டா னுக..கூப்பிடுடா..

(ஆடியபாதம் அங்கு மிங்கும் ஓடிப் பார்த்து)

**ஆடி :** எல்லாம்தான் இங்கே நிக்கிறுங்களே..இனிமேல் யாரை எசமான் கூப்பிடுறது..

(முதலியார் துடித்தல்)

**பா :** இனிமேல் யாரும் வரமாட்டார்கள்..முதலியார் பெரு மகனுரே..உங்களுக்குச் சிரமம் வேண்டாம்..காலம் மாறிவிட்டது. கண் திறந்துபாருங்கள்..உழைத்தவ னுக்கு உரிய பங்கைத்தந்து விடுங்கள்..தரமறுத்தால் நாங்களே எடுத்துக்கொள்ளுவோம்..வாங்களப்பா.. போகலாம்..

(சரேலெனப் போதல்)

**பல :** பாத்தீங்களா..ஊரரார் சொத்துக்கு இவன் பேயாத் திரிகிறதை. நெருப்பால்ல பொறிஞ்சிட்டுப் போருன்.

**உல :** உம்..நெருப்புத்தான்..

**கண் :** இது..கடுகத்தனைப் பயலுங்க..

**உல :** கடுகத்தனை நெருப்பானுலும் பெரும் போரைக் கொளுத்திவிடும். விரலாலே கசக்கிப்பிடுறேன்..

(நல்லப்பன் வருகிறுன் ஆத்திரமாக)

**நல் :** இதெல்லாம் என்னப்பா..ஊருமுழுக்க நம்மைக் கேவல மாகப் பேசுகிருர்கள்..ஏனப்பா இந்தக் கொடுமை..

**உல :** பின்னே..உன்னைப் போலப் பிள்ளையைப் பெத்து வச் சிருந்தாக் கேவலமாப் பேசாமெ மாலை போட்டா கும்பிடுவாங்க..

**நல் :** நானென்னப்பா செய்தேன் ?

**உல :** செஞ்சிக்கிட்டு இருக்கிறதெல்லாம் போதாதோ.. இன்னமே வேறே செய்யணுமா..இந்தாப்பாரு..அந் தக் கருணாகரம் பிள்ளை வீட்டுப் பக்கம் காலெடுத்து வச்சே நீ என் பிள்ளையும் இல்லே..நான் உன் அப்ப னும் இல்லே..விளைஞ்ச நெல்லுலே ஒரு உழக்குக் கூட அவன் வீடு போகப்பிடாது..தீர்த்துக்கட்டிப்பிடுகிறேன்.

**நல் :** அப்பா பொறுமைக்கும் ஒரு எல்லேயுண்டப்பா..விப ரீதத்திற்கு வித்திட்டு விடாதீர்கள்..ஆமாம்..

**உல :** என்னடா உருட்டுறே..மாமன் மச்சானுக்குப் பரிஞ்சு பேசுருப்பலே இல்ல பேசுறே !

**நல் :** உள்ளதைத்தானப்பா சொல்லுகிறேன்..நான் அவர் மகள் காவேரியைத் தான் கல்யாணம் செய்து கொள்ளுவேன்..

**உல :** கலியாணமா..பாத்தீங்களா பண்டிதரய்யா..அவ் வளவு தூரத்துக்கு முன்னேறிட்டியா..

**பல :** பெரியவர்கள் பார்த்துச் செய்யட்டும் தம்பி..

**உல :** இந்தாப்பாரு..இந்த உலகப்பருக்கு உயிரு இருக்கிற வரைக்கும் கலியாணமும் நடக்காது, கருமாதியும் நடக்காது..

**நல் :** நான் நல்ல விஷயத்தைப் பற்றிப் பேசுகிறேனப்பா.. தயவு செய்து..

**உல :** இந்தாப்பாரு..ஒரே வரி..கருணுகரன் வீட்டுப் பேச் செடுத்தே இந்த வீட்டுக்குள்ளே கால் எடுத்து வைக் கப்படாது..

**நல் :** அப்பா..அதுமுடியாதப்பா..

**உல :** முடியாதுல்ல..அப்ப இங்கேயும் இருக்க முடியாது.. போடா வெளியே..மானம் இருந்தா வெளியே போயிடு . . மனுஷனுயிருந்தா வெளியே போயிடு..

**நல் :** அப்பா..

**உல :** போடான்னு..

**நல் :** (போய்க்கொண்டே) அப்பா காலம் உங்கள் கண்களைத் திறக்கட்டும், நான் வருகிறேன்..

**உல :** திறக்கும்..திறக்கும்..போகட்டும்..ரெக்கை முளேச் சிடுச்சுல்ல போயிட்டுத்தன்னலே வா..

**பல :** என்னங்க முதலியார்வாள்..பையன் கோபமாகப் போருரே..பொங்கலும் அதுவுமா..

**உல :** போய்யா..பொங்கிப்போகும் இப்பிடிப்புள்ளே துட்டுக்குத் தொண்ணூறு வாங்கலாம்..போகட்டுமே..எருதுக்குக் கோபம் வந்து பரதேசம் போனு..இருக்கிறவன் என்னய்யா செய்வான்..ஏய்..கண்ணுயிரம்.. அந்தக் கணக்கெல்லாம் கொண்டா..தீர்த்துப் புடுகிறேன்..

**கண் :** வந்துட்டேங்க..

(திரை)

(முதற் களம் முடிந்தது)

# களம் 2

## காட்சி 1

**இடம் :** பாலையூர்க் கிராம விவசாய சங்கத்திடல்.

**மாந்தர் :** பாண்டியன், நல்லப்பன் கூட்டத்தினர்.

பொங்கல் விழா நடக்கிறது..பாடல்.

(விவசாய சங்கத்தில் பாண்டியன் பேசிக் கொண்டிருக்கிறார்.)

**பாண் :** ஆகவே தான் விவசாயத் தோழர்களே சொல்லு கிறேன். பழம் பெருமை பேசுவதால் மட்டும் நாம் வாழ்ந்துவிட முடியாது. நமது நாடு எல்லா வளமும் கொண்ட எழில் நாடு, செல்வம் படைத்த திரு நாடு, ஆறு பலவோடத் திருமேனி செழித்த பெரு நாடு, புகழ் மண்டிக் கிடக்கும் பெரிய நாடு என்றெல்லாம் புகழ் பாடுவதால் மட்டும் நாம் வாழ்ந்துவிட முடி யாது. தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத் தினை அழித்திடுவோம் என்ற பாரதி வாழ்ந்த நாட் டில் இன்று சொல்லத் துடிக்கிறது நெஞ்சம். சோற் றுக்கே வந்து விட்டது பஞ்சம். நம் விவசாயிகளின் நிலையைப் பார்த்தால் நெஞ்சு பொறுக்கவில்லை. நினைப்பலைகள் நீளவில்லை. பாட்டாளி மக்கள், பஞ்சை களாக, பராரிகளாக, பச்சைப் பாமரர்களாக நடத்தப் படுகிறார்கள். இந்தக் கொடுமையைக் கண்டும் அச்ச மும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் உச்சத்திற் கொண்ட ஊமை சனங்களாகவே நாம் வாழ்கிறோம். வாய் பேசாது அடங்கி நடக்கிறோம். உழைக்கும் வலிய கரங்களைக் கொண்ட நாம் ஏன் அடங்கிக் கிடக்க வேண்டும். உரிமையின்றிப் புழுக்களாக நெளிய வேண்டும். நமக்கு மானமில்லையா ? வாழ்வு இல்லையா ? உணர்ச்சி இல்லையா ?

(கைதட்டல்)

இன்று பொங்கற் பொன்னாள். பாடுபட்டவன் பலன் அனுபவிக்கும் இன்ப நாள். இன்று நம் நிலைமை

என்ன ? நாம் பாடுபட உலகப்பர் பலன் அனுபவிக்கிறார். அதிகாரமும் செய்கிறார். இன்றைய நமது அரசாங்கமும் பணக்காரர்களுக்குத்தான் பல்லவி பாடிப் பக்கத் துணையாக இருக்கிறது. இந்தக் கேடு கெட்ட நிலையை மாற்ற இன்றே சங்கற்பம் செய்து கொள்ளுவோம். உரிமைக்காகப் போரிடுவோம். உயிரைத் தந்தும் போரிடுவோம். ஓயாது போரிடுவோம்.

(கை தட்டல்)

(நல்லப்பன் பேச்சு மேடைக்கு வருதல்—கூட்டத்தில் சலசலப்பு "அடெடெ......நல்லப்பனுமில்ல பேசப் போகிறான்" என்ற வியப்புக் குரல்கள்.)

**நல் :** பெரியோர்களே ! வீடெல்லாம் பால் பொங்கும் இந்தப் புனித நாளில் உங்கள் நெஞ்சங்களையெல்லாம் பொங்க வைத்துப் பேசிவிட்டார் பாண்டியன் ! அவர் வாய்ச் சொல்லில் வீரர். எனக்கு அவ்வளவு கவர்ச்சியாகப் பேசத் தெரியாது. அவர் நாட்டைத் தாக்கினார், நம்மைத் தாக்கினார். அரசாங்கம் முதல் அனைத்தையும் கண்டித்தார். போராடி வெல்வோம் எனக் கொட்டி முழக்கினார். அவர் சொன்ன குறைகளையெல்லாம் நானும் ஏற்றுக் கொள்ளுகிறேன். "ஒரு நாடு பணக்காரனும், முதலாளியும் இல்லாமல் வாழ முடியும். ஆனால் பாட்டாளிகள் இல்லாமல் ஒரு நாளும் வாழ முடியாது" என்ற காந்தியடிகளின் அமுதச் சொல்லை அடிபணிந்து ஏற்கிறேன். நம் நாடு பொன்னுடாகட்டும், மக்கள் உரிமை பெற்று வாழட்டும் என்ற வளமார்ந்த நெஞ்சத்துடன் என் கருத்தையும் சொல்ல உங்கள் அனுமதி கேட்கிறேன்.

**கூட்டத்தினர் :** சொல்லுங்கள்..சொல்லுங்கள்..

**நல் :** பெருமக்களே..நாம் சுதந்திரம் அடைந்து பல ஆண்டுகளாகிவிட்டன. கத்தி முனையில் நடந்த ஆங்கிலேயர் ஆட்சியை மாற்றிச் சேவை வழியில் நமது ஆட்சியாக அமைத்தோம். உலகப் பெரும் போராலும், அன்னிய

அடக்குமுறை ஆட்சியாலும் சீர்கெட்டுக் கிடந்த நமது பொருளாதார வாழ்வைச் செம்மை செய்ய நமது பிரதிநிதிகள் எல்லா வகையாலும் முயலு கிருர்கள். சமுதாய சீர்திருத்தம் முதல் பொரு ளாதாரப் பெருக்கம் வரை எல்லா வகையிலும் எல் லார்க்கும் நல் வாழ்வளிக்கப் பாடுபடுகிருர்கள். பல திட்டங்களையமைத்து நாட்டு நலம் பேணுகிருர்கள். ஆனல் நாம்தான் மாறுபாடாக நடந்து கொள்ளு கிறேம். ஏனே தானே என்று ஒதுங்கி விடுகிறேம். ஒத்துழைக்க மறுக்கிறேம். அல்லது அடியோடு எல் லாவற்றையும் ஒழிக்க வேண்டுமெனக் கொக்கரிக் கிறேம். போராட்டம், புரட்சி என்று நமக்கும் சர்க் காருக்கும் இடையே பல தடைச் சுவர்களை எழுப்பு கிறேம்..எனவே விவசாய மக்களாகிய நம்மிடையே இணக்கத்தைப் பெருக்குவோம். அன்பாலும் அமை தியாலும் அனைத்தையும் சாதிப்போம்..! வணக்கம்.

(நீண்ட கை தட்டல்..)

(நல்லப்பன் அமர, மீண்டும் பாண்டியன் எழுகிருர்)

**பாண் :** மதிப்பிற்குரிய நல்லப்பர் பேசக் கேட்டீர்கள்.... பாவம்! அவர் பணக்காரரர் மகன். நமக்கு அப்படி உபதேசம் செய்யத்தான் அவரால் முடியும். (கூட் டத்தினரிடையே சிறு சிரிப்பு..நல்லப்பன் திகைத்தல்) ..உலகப்ப முதலியார் சேர்த்துள்ள சொத்து ஊரா ரைச் சுரண்டிச் சேர்த்த சொத்து என்ருல் நல்லப்பர் ஏற்றுக்கொள்ளுவாரா..மாட்டார்..

**நல் :** (குறுக்கிட்டு) பாண்டியன்..

**பாண் :** பொறுங்கள்..ஆகவே பாட்டாளிப் பெருமக்களே! இத்தகைய பத்தாம் பசலி வேதாந்தங்களைக் கேட்டுக் கேட்டுக் காது புளித்துவிட்டது. இது வரைக்கும் கட்டுண் டோம். பொறுத்திருந்தோம். காலம் மாறுமெனக் காத்திருந்தோம். காலம் மாறியது. ஆனல் நமக்குச் சாதகமாக மாறவில்லை. பணம் படைத்தவர்களுக்குச் சாதகமாக மாறியிருக்கிறது. ஊரைச் சுரண்டும்

உலகப்பர்களுக்குச் சாதகமாக மாறியிருக்கிறது. அப் பாவின் கொடுமை கண்டும் ஆமாஞ்சாமி போடும் நல்லப்பர் போன்றவர்களுக்குச் சாதகமாக மாறியிருக் கிறது. ஆகவே நமது முடிவு ஒன்று தான். நாம் பாடுபட்டுப் பலன் விளைவித்த நிலத்தில் நமக்குத்தான் முழுப்பங்கும். இல்லையென்றால் இரத்தம் சிந்தச் சிந்தப் போரிடுவோம். இறுதிவரை போரிடுவோம்....

(திரை)

# களம் 2

## காட்சி 2

**இடம் :** தெருவின் ஒரு திருப்பம்.

**மாந்தர் :** கிராம வாசிகள்—முனிசாமி, சங்கிலி, ராமசாமி, கணக்கப் பிள்ளை கண்ணுயிரம்.

(கூட்டம் முடிந்து கிராம வாசிகள் பேசி வருகின்றனர்)

**முனி :** நம்ம உலகப்ப மிராசு பையன் கூடவுல்ல பேசுருக....

**சங் :** பின்னே. . . பேசாமெ என்ன செய்யமுடியும் ? பேசியாவது மடக்குன்னு அப்பா அனுப்பியிருப்பாரு.

**முனி :** சேச்சே . . . அந்தப் பையனைப்பார்த்தா அப் படித் தோணலேப்பா. அது நமக்குத் தெரிய வளர்ந்த பிள்ளை. . . அந்தக் காலத்திலே யிருந்து அது ஏழைகள் பக்கம்தான்.

**ராம :** ஆமாங்க . . . சங்கிலியண்ணேன் . . . அன் னிக்குக் கூடக் களத்து மேட்டிலே

**சங் :** அதுதான் இல்லே . . . அதெல்லாம் பகட்டு (காதுக்குள்ளே ஏதோ சொல்லுதல்) அப்படித் தான் பாண்டியர் சொன்னார். நாம்ப மிஞ்சிகிட்டோமில்ல இப்பக் கொஞ்ச வந்திருக்காங்க . . .

**ராம :** அப்படியா . . . அதுக்கெல்லாம் ஏமாந்துவிடப் பிடாதுன்னே . . . பாண்டியர் சொன்னப்படி இனிமேல் நிலத்துக்குள்ளே ஒருத்தரும் இறங்கப் பிடாது. இன்னொருத்தனை இறங்கவும் விடப் பிடாது . . .

**முனி :** ஆமாங்க . . . . அப்படித்தான் செய்யணும். பட்டணத்திலேயெல்லாம் வேலேக்காரங்க அப்பிடித் தான்செய்வாங்களாம் . . . . அங்கேயிருந்து என் மருமகப்பிள்ளே வந்திருக்கான்ல . . .

**சங் :** யாரு . . மில்லிலே வேலே செஞ்சானே . . அவனு . . . என் . . . .

**முனி :** ஆமா . . . மில்லிலே அதிகச் சம்பளம் வேணும் அப்பிடி இப்படின்னு கேட்டாங்களாம். முதலாளிகள் முடியவே முடியாதுண்ணுங்களாம். அப்புறம் பெரிய " ஸ்ரேக் " நடந்து, ஒருத்தரும் வேலேக்குப் போகலேயாம்.

**சங் :** ம் . . அப்புறம் மில்லாவது " ஸொள் " ளாவது நாம்ப மட்டும் ஒண்ணு சேர்ந்திட்டோமின்னு

(கண்ணுயிரம் வருதல்)

**கண் :** ஒண்ணுச் சேர்ந்து தானே நிக்கிறீங்க . . . . தனியா எங்கேடா இருக்கப் போறீங்க . . . சேருங்க . . .

**சங் :** யாரு பாலேயூர்ச் சித்திரபுத்திரரா . . . எப்படி யிருக்கு உங்க தர்பாரு . . .

**முனி :** அவரு அரிச்சந்திரனேப் பிடிச்ச நட்சத்திர ஐயரு அண்னே . . . .

**ராம :** இல்லேய்யா . . . துரியோதனனுக்கு வாச்ச சகுனி . . . .

**கண் :** அப்பா . . . தலேகாலு புரிஞ்சுதானே நடங்கடா . . . ஒரேதா ஆடி எல்லாத்தையும் கொட்டிக் குட்டிச் சுவரர்க்கிக்கிடா தீங்க.

**சங் :** குட்டிச்சுவராக்கத்தான் நீ ஒரு ஆளு இருக்கிறியே பத்தாதாய்யா ? உலகப்ப முதலியார் வீட்டு நாற் காலியைப் புடிச்ச மூட்டைப்பூச்சி மாதிரி இருந்துக் கிட்டு ஊராரு ரத்தத்தையெல்லாம் கறந்து குடிக் கிருயில்லே . . . .

**ராம :** மூட்டைப்பூச்சி மட்டுமென்ன . . . சரியான கட் டாந்தரை அட்டை அண்ணுச்சியோவ் . . .

**கண் :** டேய் . . . . டேய் . . . . என்னங்கடா . . . . மூட்டைங்கிறுன், அட்டைங்கிறுன் . . . . . . . கண், காது தெரிஞ்சு

பேசுங்கடா....மேலே போயிடாதிங்க. உங்க கணக்கெல்லாம் இந்தக் கண்ணுயிரம் கைக்குள்ளேதான் அடக்கம்....அப்படியே அப்பளம் தான்!

**சங் :** இனிமேல் இந்த அப்பளம் நொறுங்காதுங்கண்ணே.. பதத்துப் போச்சு....பதத்துப் போச்சு....

**முனி :** ஆமா.... அப்பிடியே சவ்வா இழுக்கும்.

**கண் :** இழுப்பிங்கடா....இழுப்பிங்க....நீங்களா பேசுறீங்க....

**ராம :** இல்லே....உங்க வீட்டுக் கணக்கும் அது அளக்கிற சோறும் அப்படிப் பேசச் சொல்லுது....

**கண் :** அதுக்குச் சந்தேகம் என்னங்கடா. என் கணக்குத் தாண்டா உங்களுக்குச் சோறு போடுது. இல்லேன்னு....

**சங் :** (பரிவுடன்) அது சரிங்க....கணக்கப் பிள்ளே. உங்க கணக்கிலே ஒவ்வளவு ஒதுக்கியிருக்கீங்க....

**கண் :** என்ன....எவ்வளவு....

**சங் :** அட....சும்மா சொல்லுய்யா.... முதலியார் வீட்டுப் பணத்திலே உங்க பெட்டிக்கு எவ்வளவு வந்திருக்கும்னு கேட்கிறேம்.

**முனி :** சும்மா சொல்லுங்க....நாங்க யாருக்கிட்டேயும் சொல்ல மாட்டோம்....

**கண் :** டேய் உங்க நாக்கு அழுகிப் போகும்டா..அனியாயமா பேசுறீங்க....உங்களே என்ன செய்யுறேன்னு பாருங்கடா....இல்லே....செய்யச் சொல்றேன்னு பாருங்க....

**ராம :** அட சரித்தான் போய்யா....சாணிப் புழு மாதிரி..

**கண் :** டேய்..என்னேக் கேவலமாவா பேசுறீங்க....வாங்க பார்த்துக்கிறேன்.

**சங் :** பார்த்துக்குங்க....பார்த்துக்குங்க....**உங்க உடம்பைப் பத்திரமாப் பார்த்துக்குங்க....**

**முனி :** வாங்கண்ணே போகலாம்.

**(திரை)**

# களம் 2

## காட்சி 3

**இடம் :** உலகப்பர் வீடு.

**மாந்தர் :** கண்ணுயிரம், ஆடியபாதம், உலகப்பர், பல வேசப் பண்டிதர்.

(கண்ணுயிரம் கணக்கெழுதிக் கொண்டிருத்தல்)

**கண் :** (தனக்குள்) ஐநூற்றி எழு..அறுநூற்றி எழு..அறு நூற்றித் தொண்ணூத்தி எழு.. அப்பா.. அந்த மேல வயல் விளேச்சல் மட்டும் இவ்வளவு ஆச்சே. இன்னம் இந்தப் பயலுக தகராறு பண்ணுற நிலத்து நெல்லும் வந்தா..வீடே கொள்ளாதே..ம்.ம். வீடு கொண்டால் என்ன..வீதி நிறைஞ்சால் என்ன—இதி ஞலே நமக்கு என்ன லாபம் ? அளக்கிற உழக்கா இருக்கிறேம். நமக்கு ஒரு பதராவது கூடக் கிடைக்குமா ..ம்..அன்னிக்கு அவளும் தான் சொன்னுள்..அவள் சொன்னபடியே நம்ப கொஞ்சம் அப்படி ஒதுக்கிஞ என்ன குடிமுழுகிப் போகுது. இப்போ அந்த மூத்த பயலும் வீட்டில் இல்லே. முதலியாருக்கு நிறைஞ்சது தான் தெரியும், குறைஞ்ச தெங்கே தெரியப் போகுது. அவள் சொன்னபடியே செய்ய வேண்டி யது தான். பெண்சாதி பேச்சைக் கேட்டுத் தான் ரொம்பப் பேரு முன்னுக்கு வந்திருக்காங்கன்னு சொல்லுவாங்க..ம்..ஒரு வேலே அகப்பட்டுக்கிட்டா.. யாராலே கண்டு பிடிக்க முடியும். இந்தப் பேனக் கட்டையெப் பிடிச்சு நான் எழுதுற கணக்கை அந்தப் பிரமன் வந்தாலும் கண்டு பிடிக்க முடியாதுல்ல..

(ஆடிய பாதம் காய்கறியுடன் நுழைதல்)

(அதிகாரத் தொனியில்) எண்டா..நொண்டிமாடு..இவ் வளவு நேரமா.. வழியிலே எங்கேடா போயிருந்தே ?

**ஆடி :** என்ன நீங்களும் அதிகாரம் பண்ணுறீங்க. நீங்க உங்க கணக்கைச் சரியாத்தின்னுங்க..இல்லாட்டி கண க்கு உங்களேத் தின்னுடும்.

**கண் :** அடெடெ..கோவிச்சுக்காதே..உட்காரு எண்டா..— இவ்வளவு காய்கறின்ஞ..

**ஆடி :** இதெல்லாம் காசா குடுத்து வாங்கினேன். பண்ணைக் காரனுக பண்ணுற கலாட்டாவிலே தோட்டத்துக்காய் கறியும் பறிபோய் விடும்னு எல்லாத்தையும் ஐயா பறிக்கச் சொல்லிட்டாரு..

**கண் :** இவ்வளவையும் என்னடா பண்ணுவது ?

**ஆடி :** காஞ்சு சருகாப் போற வரைக்கும் ஐயா விடமாட்டா ருல்ல..

**கண் :** நான்..என்னமோ விசேஷ மோன்னு நினேச்சேன்..

**ஆடி :** விசேஷமும் தான். இன்னிக்குச் சின்னவரு வரப் போறுருல்ல.

**கண் :** யாருடா காலேசிலே படிச்சுக் கிழிக்கிருரே அந்தச் செல்லத் துரையா..

**ஆடி :** ஆமா..படிச்சதெல்லாம் போதும். இங்கே வந்து கிழிக்கலாம்னு ஐயா லெட்டர் போட்டு வரச் சொல்லி விட்டாரே உங்களுக்குத் தெரியாது..

**கண் :** எனக்கெங்கடா இதெல்லாம் தெரியப் போகுது. அடுப்படிக் கரண்டி பிடிச்சாத் தானேடா இந்த ரகசிய மெல்லாம் தெரிய வரும்.

**ஆடி :** அது மட்டுமா. பெரியவரு கோவிச்சுக்கிட்டுப் போகலே ?

**கண் :** ஆமா..அதான் போயிட்டானே..

**ஆடி :** அவரு சொத்துலே பங்கு வேணும் அப்படி இப்படி யின்னு கேசு போடுறத்துக்கு முந்தியே கொஞ்சம் நிலத்தை அவருக்குக் குடுத்துப் பிடணும்னு ஐயா சொல்லிக் கொண்டிருந்தாரு..

**கண் :** அடெ.. எனக்குத் தெரியாமெ ஏராளமான திட்ட மெல்லாமில்ல நடந்திருக்கு..ம்..முதலியாரு நம்பளே மறைச்சே காரியம் பண்ண ஆரம்பிச்சாச்சா..

**ஆடி :** எந்த முதலியாருங்க..

**கண் :** உங்க..தாத்தா..அது சரி..அதென்னடா கடுதாசி கையிலே

**ஆடி :** இதுவாங்க..படிங்க....படிங்க..தெருவுலே அந்தப் பாண்டியன் தந்துச்சு..

**கண் :** (வாங்கிப் பார்த்தபடி)..ம்..ஆளைப் பார்த்து தான் கொடுத்திருக்கிறான்..முதலியாருக் கேத்த முட்டுக் கட்டை ஆசாமி தான் டேய் ஆடிய பாதம்..நீயும் கேளு.

**ஆடி :** யாரைக் கேக்க..

**கண் :** பாட்டைக் கேளுடான்னு..

**ஆடி :** ம்..ஐயா வர்றதுக்குள்ளே படிங்க..

**கண் :** (இராகம் போட்டு)

"பொத்தல் இலேக்கலமானுர் ஏழை மக்கள்

புனல் நிறைந்த தொட்டியைப்போல் ஆனார் செல்வர்"

(ஆடியபாதம் ஒன்றும் புரியாமல் உதட்டைப் பிதுக்குதல்)
"இது இந்நாள் நிலையென்றான் உலகப்பன் தான்..
இந்நிலையில் இருப்பதனுல் உலகப்பா..உலகப்பா நீ"

**ஆடி :** அடெ..நம்ப ஐயா பேரு கூடப் போட்டிருக்கே..

**கண் :** ம்..கேளு.. "உலகப்பா நீ
புதுக்கணக்குப் போட்டுவிடு..பொருளை எல்லாம்.."

**ஆடி :** சபாசு..உங்க வேலே கூடப் போட்டிருக்கே..

**கண் :** "பொருளை எல்லாம்

பொதுவாக எல்லோர்க்கும் குத்தகை செய்
ஏழை முதலாளி யென்பதில்லாமற் செய்
என்றுரைத்தேன், உலகப்பன் எழுந்து துள்ளி

(உலகப்பர் கையில் தடியுடன் நுழைதல்)

(ஆடியபாதம் துள்ளி எழுந்து.."ஐயாங்க..ஐயாங்க.." என்கிறான்)

**கண் :** குறையையும் கேளு...

"உலகப்பன் எழுந்து துள்ளி..உலகப்பன் **துள்ளி..**
**(முதலியாரைக் கண்டு விழுங்குதல்)..ம் துள்ளி ..**

**உல :** என்னய்யா கண்ணுயிரம்..நீயும் துள்ளச் சொல்லு றியா..

**கண் :** இல்லீங்க..ஒரு கதை..

**உல :** ஆளு இல்லேயின்னு கதாப் பிரசங்கந்தான் போலி ருக்கு என்னய்யா துள்ளி துள்ளின்னுக்கிட்டு..

**கண் :** சும்மா..ஒரு பாட்டு.

(ஆடியபாதம் தடியை வாங்கி அப்பால் வைத்தல்)

**உல :** அது ஒண்ணுதான்யா குறைச்சல். பொறுங்க.. திருவோடும் கையுமாத் தெருவோடே போயிப் பஜனே பாடலாம்.

**கண் :** இல்லேங்க..அதுக்குள்ளே வேண்டாங்க..அதில்லே ங்க...

**உல :** உன்னேயெல்லாம் வைக்கிற இடத்திலே வைக்க வேணும் ஐயா..ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்கணும். பாடிக் கறக்கிற மாட்டை..

**கண் :** பாடிக் கறக்கணும்ங்க..

**உல :** அட சட்.. கூடக் கூடப் பேசிக்கிட்டு. போய்யா போயி வக்கீலேப் பார்த்துட்டு வா.

**கண் :** எல்லா வைக்கக்கட்டும் களத்து மேட்டிலே அடைஞ்சி ருக்கிறதைக் காலேயிலே பார்த்துட்டுத் தாங்க வந் தேன்.

**உல :** அட என்னய்யா..குருடு குருடுன்னு, செவிடு செவிடு ங்கிறே போயி வக்கீல் ஐயாவைப் பார்த்துக் கூட்டி வாய்யா.

(கண்ணுயிரம் போதல்)

எல்லாப் பயலும் இப்படித் தான் ஆயிட்டான். சுதந்திர மாம். சுண்டைக்காயாம். நல்லா வந்துச்சு..

(பலவேசப் பண்டிதர் நுழைதல்)

**பல :** கும்பிடறேங்க...

உல : பண்டிதரா..உனக்குத்தான்யா ஆள் அனுப்போனு ம்னு இருந்தேன்.

பல : இந்தச் சடலத்தை ஆள் அனுப்பியா கூப்பிடணும். முதலியார் வீட்டு உப்பைத் தின்னு வளர்ந்த ஊத்தை உடம்பை எப்பக் கூப்பிட்டாலும்

உல : உட்காருங்க..எனக்குக் கொஞ்சங்கூட மன நிம்மதி யில்லே. அதுதான் உங்களைக் கூப்பிட நினைச்சேன்

பல : நானும் காலையிலே உங்கள் பேர் ராசியை வைத்து ஆருடம் பார்த்தேன். உங்களுக்குப் பிள்ளைகளாலே மனக் கஷ்டம்னு வந்துச்சு....

உல : பிள்ளைகளாலே மட்டும்தானு.......ஊரானுமில்ல பேயாப்படுத்துருனுக.

பல : அதிலேயும் மூத்த தம்பி ஜாதகத்திலே அன்னிக்குப் பார்த்தோமே அது உத்திராடத்திலே பிறந்த பிள்ளை தான். நல்ல நட்சத்திரம்.

உல : ஆமா..அதுக்கெல்லாம் குறைவில்லே..உத்திரா டத்தில் ஒரு பிள்ளையும், ஊர் வாரியில் ஒரு நிலமும் என்பாங்க....எனக்கு உருப்படருப்பிலே ஒரு பிள்ளை இருந்தால் போதாது..

பல: சின்னத் தம்பி பொறந்தது சித்திரையிலே தானே..

உல : சித்திரையிலே செல்வன் பொறந்துதான் என் சீரையும் செல்வத்தையும் கெடுக்கிருன். இந்தாப் பாருங்க பலவேசப் பண்டாரம்..ஆகிற குடி யென்றுல் அரைக்காசிலே ஆகும். பிள்ளையிருந்தெ ன்ன..பெருஞ்சொத்திருந் தென்ன..மனுசனுக்கு மன நிம்மதி வேண்டாமா ?

பல : கட்டாயம் வேணுமுங்க..என் எல்லாத்தையும் பிள்ளைகள் கிட்டே பிரிச்சுக் குடுத்துப்பிடுங்களேன்.

உல : அப்புறம் என்கையிலே ஒரு ஓட்டைக் குடுத்து ஓட்டிப்பிடுவானுக..

பல : இல்லேங்க..பொறுப்பைக் குடுத்தா எல்லாம் சரியா வந்து விடும்பாருங்க....

உல : அது சரி. ஏதாவது பாட்டுக் கொண்டாந்தியா..

**பல :** பாட்டுத்தானே..சித்தரு பாட்டே இருக்குங்க..

**உல :** உன் பாட்டில்லையே..சொல்லுய்யா..

**பல :** கேளுங்க..

நாடு காடாவதும், காடு நாடாவதும்
நவில் சகடு மேல் கீழதாம்
நடையூறு சந்தை பல கூடும்
உடனே கலையும்
உடனே கலையும்

**உல :** எதையெடுத்தாலும் சேர்க்கிறதாக் காணோம்..கலைக் கிறதாத்தான் இருக்கு.

**பல :** இது பாட்டுங்க.

**உல :** அது சரி. ஏய்யா பண்டாரம் உங்ககிட்டேக் கேட்டாத் தெரியுமே ஏதோ ஊரெல்லாம் திட்டம் திட்டம்னு பெரிசாப் பேசுறாங்களே என்ன..

**பல :** அதைக் கேட்டுப்பிட்டுத்தாங்க இந்தப் பயலுக இப்படி ஆடுறானுக.. உங்களுக்குத் தெரியாமலா திட்டம் வரப்போகுதுன்னு நினைச்சேன். இதெல்லாம் சும்மாங்க.. கடுதாசித் திட்டம்.

**உல :** அது என்ன ஐயா திட்டம்ன்னு..

**பல :** அது சர்க்காரு போட்டிருக்கிற அஞ்சாண்டுத் திட்ட முங்க...

**உல :** எதுக்கு இருக்கிற நிலத்தையும் திட்டம் போட்டுப் பிடுங்கிக் கொள்ளவா..

**பல :** இல்லீங்க..ஏதோ விவசாய முன்னேற்றம், வருமான உயர்வு, விளைவுப் பெருக்கம், சுகம், சுபீட்சம் அப்படியெல்லாம் நிறைய அந்த திட்டத்தினாலே வருமாம்.

**உல :** வரும்..எல்லாத்தையும் அள்ளிக்கிட்டுப் **போக** ஒரேயடியா வந்திரும்.

**பல :** ஆமாங்க..அப்படிப் புரட்சி யொண்ணும் வராமே.. சமாதான வழியிலே, நாட்டிலே செல்வத்தைப் பெருக்க இந்த வழிதான் சிறந்ததுன்னு ஊரெல் லாம் பேசுறுங்க..அதோடெ நம்ப மூத்த தம்பி கூட..எல்லா விவசாயிகளேயும் கூட்டிவைச்சுப் பெரிய பிரசங்கமே பண்ணுறுரு.

**உல :** பண்ணட்டும்..பண்ணட்டும்..

**பல :** காலமே கெட்டுப் போச்சுங்க..நீங்க விவசாயிகளுக் குச் செய்யாத சவுகரியத்தையா சர்க்காரு செஞ்சிடப் போகுது ? இதெல்லாம் சும்மாங்க..ஏமாத்தும் வேலே. திட்டம் திட்டம்னு வரியைத்தான் கூட்டுவாங்க. உங்க குணமும் தயாளமும்..

**உல :** சரி..பண்டாரம். வேறே என்ன விஷயம்..

**பல :** முதலியார் வாள் நீங்க ஊருக்கு உபகாரி. ரொம் பவும் பெரிய மனசுள்ளவர்.

**உல :** அதுக்கெல்லாம் இப்ப என்னய்யா ?

**பல :** பொங்கலுக்கே என் பெண்ணுக்குப் புதுசு வாங்கித் தரலே. பொங்கலும் போயிருச்சு..இப்ப ஒரு சேலேக்கு..

**உல :** சேலேயாவது சில்க்காவது....எதுக்கும் நாளேக்கு வாங்க. கணக்கப் பிள்ளேயெக் கேட்டுச் சில்லறை இருந்தா ஏதாவது பார்ப்போம்.

**பல :** நீங்க அப்படிச் சொல்லப்படாது.

**உல :** நீங்க இப்படித் திடீர்னு கேட்கப்படாது..வர்றீங் களா..

நாளேக்கு வாங்க..

அடேய்..ஆடியபாதம்..ஆடியபாதம்

(திரை)

# களம் 2

## காட்சி 4

**இடம் :** கிராமத் தெரு.

**மாந்தர் :** கிரா்மவாசிகள், முனிசாமி, சங்கிலி, ராம சாமி, நல்லப்பன்.

(தெருவில் ஐந்தாண்டுத் திட்டச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன)

**முனி :** இது என்ன சங்கிலியண்ணே....என்னமோ திட்டம் கிட்டம் கிருங்க

**சங் :** ஆமா..“ அறுக்கமாட்டாதவன் கையிலே அறு பத்திரண்டு கருக்கறுவாள் ” என்னமோ அஞ்சாண்டு திட்டமாம்..

**முனி :** அப்படியின்னு..

**சங் :** நம்ம விவசாயத்தைப் பெருக்கவும், விளைச்சலை நிறையச் செய்யவும் ஏதோ திட்டம் போடுறுங்களாம். நம்ம கஷ்டத்தை யெல்லாம் ஒரேதாத்தீர்க்கப் போறுா களாம்.

**முனி :** நம்ம கஷ்டத்தைத் தீர்க்கவா..அப்ப நல்ல திட்டம்தான். அதான் அன்னிக்கு நல்லப்பரு கூட எல்லாருக்கிட்டேயும் சொல்லிக் கொண்டிருந்தாரு.. இதைப்பத்திதானு..

**சங் :** அவரு சொல்லிட்டாருல்ல..‘ குளோஸ் ’

**முனி :** போண்ணே..நீ பாண்டியருக்கு வாலுல்ல.. உனக்கு உங்க பாண்டியர் சொல்றதுதான் ஏறும்..

(ராமசாமி வருதல்)

**ரா :** அப்படிப்பத்துத்தரம் சொல்லுங்க முனிசாமி.. சர்க்காரு கோடி கோடியாச் செலவழிச்சு நம்ம குடிதழைக்கத் திட்டம் போடுறுங்கன்னு நல்லப்பரு சொல்லுறுரு..இவுக பாண்டியர் அதெல்லாம் உருப் படாத திட்டம், விவசாயிக்குக் கதிமோட்சம் வேணும்னு புரட்சி பண்ணிணுத்தான் காரியம் ஆகும்னு கரை யுராரு..

**சங்:** நாங்க சொல்றதெல்லாம் கரையுற மாதிரிதான் இருக்கும்.

**முனி :** அடெடெ....கோவிச்சுக்காதே அண்ணே...... உனக்கு விபரம் தெரியுமே, இந்தத் திட்டத்திலே இருக்கிற நல்லது கெட்டது என்னன்னு பாண்டியர் சொல்லியிருப்பாரேன்னுதான் கேட்கிறோம்.

**ரா :** அவரெங்கே நல்லதைச் சொல்லியிருக்கப் போறாரு.. கெட்டது தான் சொல்லியிருப்பாரு....புரட்சி .... பூதம்னு உருமியிருப்பாரு..

**சங் :** ஏன்னு....நல்லதைச் சொல்லத்தான் உங்க நல்லப் பரே அவதாரம் பண்ணியிருக்காருல்ல..நிறுத்தய் யா....உங்க பிரதாபத்தை..

**ரா:** அட..நீயும் வாலைச் சுருட்டி அடக்கய்யா..

**முனி :** நல்லாயிருக்கு..திட்டத்தைப் பத்திப் பேசுங்கன்னு, நீங்களே திட்டிக்கிட்டுச் சாகிறீங்களே..நிறுத்துங்க.. நிறுத்துங்க..உழுத நிலம் மாதிரில்ல கண் அப்படியே குழம்பியிருக்கு

**ரா :** நீ....சும்மா இருண்ணே..

**முனி :** அந்தா நல்லப்பரே வருது....வாங்க தீர்த்துக் கலாம்..

**சங் :** போங்க....போங்க....அவருதான் பொளக்கப் போறாரு

**ரா :** கோவிச்சிக்காதேண்ணே..இவரு சொல்றதையும் கேளு..புடிச்சாக் கேட்டுக்க.....புடிக்கலையின்னு உங்க பாண்டியரைப் பிடிச்சுக்கிட்டுச் சங்கிலியாத் தொங்கு..

**சங் :** நீ உங்க நல்லப்ப ராமருக்கு ஏத்த அனுமாராச் சேவகம் பண்ணு....தோப்புக் கரணம் போடு....

**முனி :** அடெ நொப்புராட்டி....நிறுத்துங்கப்பா....

இந்தா அவரும் வந்துட்டாரு....

(நல்லப்பன் வருதல்)

**சங், ரா :** (ஒன்றாக) கும்பிடறேங்க....!

**நல் :** வணக்கம்....வணக்கம்....

**சங் :** (வேண்டா வெறுப்புடன் கை குவித்தல்).

**நல் :** வணக்கம்..என்ன இப்படிக் கார சாரமாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்......?

**முனி :** காரமாகத்தான் பேசிக்கிட்டோம், ஆனல் சாரமாத் தான் இல்லே..அதான் உங்களை கேட்கலாம்னு இருக் கிறோம்..

**நல் :** என்ன கேளுங்களேன்..எதைப்பற்றி....

**ரா :** ஏதோ..அஞ்சாண்டுத் திட்டமுனு தெருவெல்லாம் சினிமா நோட்டீஸ் ஒட்டியிருக்காங்களே..அதைப் பத்திக் கொஞ்சம் இவருக்கு (சங்கிலியைச் சுட்டி) விளங்கச் சொல்லுங்க....

**சங் :** (ராமசாமியிடம்) முதல்லே நீங்க விளங்கக் கேட்டுக் குங்க..

**நல் :** எல்லோருக்குமே சுருக்கமாகச் சொல்லுகிறேன்.... நமது நாடு சுதந்திரம் அடைந்தவுடன் நாடெங்கும் உழவு நல்லா இல்லே, தொழிலும் சீராக இல்லே....

**சங் :** அது மட்டுமா....ராசாங்கம் கூடத்தான் ஒழுங்காக இல்லே....

**ரா :** அடெ..குறுக்கே பேசாமெ முழுக்கக் கேளுப்பா....

**நல் :** பரவாயில்லே....கேட்டுவிட்டுப் பேசட்டும்..எதற்கு வேண்டுமானலும் பதில் சொல்லுகிறேன்....

**முனி :** நீங்க சொல்லுங்க.......

**நல் :** நமது நாடு பெரிய நாடு, விவசாய நாடு, கிராமங்கள் நிறைந்த நாடு..ரொம்பப் பேரு விவசாயத்தை நம்பியே வாழ்கிருர்கள். ஆனல் விவசாயிகள் நிலே மோசமாகி விட்டது. நம் நாட்டு விவசாயி கடனிலே பிறக்கிருன், கடன் வாங்கியே வாழ்கிருன், கடனேடு சாகிருன், கடனேயே தன் பிள்ளேகளுக்குச் சொத்தாக விட்டுச் செல்லுகிருன். அவனுடைய ஜீவியம் அரைப் பட்டினியாகவே இருக்கிறது. அவனேப் போலவே அவனுடைய நிலமும், சீர் கெட்டுகிடக்கிறது. போதிய

கால் நடை வசதி இல்லே. இதனுல் சரியான விளேவும் இல்லே. போதிய விளேச்சல் இல்லாததால் எத்தனேயோ தொழில்கள் அமுங்கி விட்டன.... வேலே யில்லாத் திண்டாட்டம் பெருகி விட்டது. நாடெங்கும் வறுமைப் பேயும் பஞ்சப் பிசாசும் வளர்ந்து விட்டது....

**சங் :** இதற்கெல்லாம் யாரு காரணம், நம்ப சர்க்காரு தானே....

**நல் :** அது மட்டுமல்ல. நாமும் தான் காரணம். நம் நாட்டு விவசாயிகள் இன்னும் பழைய பத்தாம்பசலி வாழ்க்கையே போதும் என்று பழமைப் பாசிக் குட்டையில் மூழ்கிக் கிடக்கிருர்கள். மூடப் பழக்கத்தின் முடை நாற்றம் வீசும் கேடு கெட்ட வாழ்வு வாழ் கிருர்கள். தீண்டாமைப் பேயால் பீடிக்கப்பட்டு நலி கிருர்கள். முன்னேற்றப் பாதையைக் காட்டினுலும் முன்னேற மறுக்கிருர்கள். ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டாலென்ன என்றமனப் பான்மையில், பிடிப்பின்றி வாழ்கிருர்கள். போதிய வேலே உள்ள இடங்களிலும் சேர்ந்து உழைக்க மறுக் கிருர்கள். சிறு சிறு சண்டைகளேயும், பெரிதாக்கி, கோர்ட்டு, வழக்கென்று நாளெல்லாம் அலேகிருர்கள். நலிந்து அழிகிருர்கள்....இந்த நிலேயை மாற்றி விவசாயியின் வாழ்வில் வளமும் வனப்பும் பெருகச் செய்யத்தான் நமது சர்க்கார் திட்டம் போட்டிருக் கிருர்கள்.

**முனி :** அப்படிச் சொல்லுங்க....அதிலுலே என்னங்க.. பண்றது......

**நல் :** நமது பொருளாதார வாழ்வை உயர்த்த உதவித் திட்டங்கள் போட்டிருக்கிருர்கள், விவசாயப் பெருக் கத்திற்கு வேண்டிய பாசன வசதி, கால்நடை வாங்க வசதி, வித்து, உர வசதி, கூட்டுறவு வசதி, கிராம நலன் உயர்வு, தொழில் பெருக்கம் என்றெல்லாம் ஏற்படுத்திச் சுய தேவைப் பூர்த்தி வழியில் ஒவ்வொரு கிராமத்தையும் சுதந்திரக் குடியரசாக்கத் திட்டமிட்டுள்ளார்கள்....இதுதான் சுபிட்ச வாழ்வுக்கான சுளுவான மார்க்கம்....

**ரா :** நீங்க சொன்னபடி யெல்லாம் வர எத்தனே வருஷ மாகும்....

**சங் :** எத்தனே மாமாங்கம்னு கேளுண்ணே..உன் மண்டை மண்ணுக்குள்ளே போறதுக்குள்ளே எதுவும் வந்திடாது....

**நல் :** அப்படியெல்லாம் சந்தேகப்படவேண்டாம்..முதல்லே ..குறிப்பிட்ட வழிகளிலே முன்னேற்றம் காண்பதற் காகவும் கவனமாகச் சீர்திருத்தம் செய்யவும் ஐந்தாண்டுத் திட்டம்னு முதல் திட்டம் போட்டி ருக்காங்க......

**முனி :** அப்படின்னு....

**ரா :** அப்படின்னு..இந்த அஞ்சு வருஷத்துக்குள்ளே எந் தெந்த வழியிலே நல்லது செய்யுறதின்னு பார்ப் பாங்க....

**சங் :** ஆமா....பார்ப்பாங்க....அவ்வளவுதான்....பார்க்கிற தோடே சரி....

**முனி :** இல்லே செய்வாங்க, நிச்சயம் செய்வாங்க....

**நல் :** (புன் சிரிப்புடன்) ஆம்! நீங்கள் செல்லுவது போல திட்டம் ஆரம்பித்த இரண்டு வருடத்திற்குள் ஓரளவு செய்து சாதித்தும் இருக்கிறுர்கள். அந்தச் சாதனேயை வரையறுத்து விளேவைத் தெரிஞ்சுக்கத்தான் குறுகிய காலமாக ஐந்தாண்டு என்று நிர்ணயமும் செய்திருக் கிறுர்கள்....

**சங் :** ஏன் அஞ்சாண்டுத் திட்டம்னு போடணும்.. ஒரு ஐம்பதாண்டுத் திட்டம்னு போட்டுக்கிட்டா? என்ன ஆச்சு அப்படி இப்படின்னு யாரும் கேள்வி கேட்க மாட்டாங்க....ஆகும், ஆகும்னு கடத்திக்கிட்டே இருக்கலாமே....

**நல் :** அண்ணுச்சிக்கு இன்னும் சந்தேகம் தீரலே......

**ரா :** அவரு பாண்டியரு கட்சி....இது தீர்ற சந்தேகம் இல்லே. அவுக புரட்சி வரைக்கும் போகாமெ நிக் காது....

**சங் :** அடச்சரித்தான் நிறுத்துங்கிறேன் மாணுன்! ஏன் அஞ்சு வருஷத் திட்டம்னு போடனும்னு கேட்டா.... பாயுறியே மஞ்சு விரட்டு மாடு மாதிரி....

**நல் :** கேளுங்க....கேளுங்க....இந்தத் திட்டத்தின் அடிப் படை என்னன்னு....? நாம் அடைய விரும்பும் ஒரு லட்சியத்தின் அடிப்படைப் பாதை என்று வைத்துக்கொள்ளுங்களேன். அந்த லட்சியத்தை அடைவதற்கான வழியை அமைப்பதுதான் திட்டம். ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டமும் இந்த லட்சியப் பாதையின் ஒவ்வொரு மைல்கல்....

**சங் :** ஆமா....முடிவே யில்லாத பாதையிலே போற முடவனுக்குப் போட்ட மைல்கல்....

**நல் :** ம்........இன்னம் அவருக்குச் சந்தேகம் தீரலே.. நாளைக்குப் பேசிக்குவோம்....அவர் சந்தேகத்தைத் தீர்க்காமல் விட மாட்டேன்...

**ரா :** இது தீர்ற சந்தேகம் இல்லீங்க....பிறவிக் குணம், பிறவிக் குணம். உடம்போடு வந்த வியாதி.... உரிச்சாக்கூடப் போகாது..

**சங் :** அட்ச் சரித்தான் நிறுத்தய்யா........

**முனி :** ரெண்டு பேருமே நிறுத்துங்க........

(திரை)

# களம் 3

## காட்சி 1

**இடம் :** உலகப்பர் வீடு.

**மாந்தர் :** ஆடிய பாதம், உலகப்பர், செல்லத்துரை.

**உல :** டேய்..ஆடியபாதம்....

**ஆடி :** எசமான்..கூப்பிட்டவுடனே வந்துட்டேங்க....

**உல :** உள்ளே என்னடா.. பண்ணுறே....

**ஆடி :** காயப் போடுறேங்க....

**உல :** எதெடா காயப் போடறே..உன் சமையலே தின்னுப்புட்டு வயிறு காயறது பத்தாது....

**ஆடி :** பத்தாத சாப்பாட்டினுலே வயிறு காயுமுங்க..

**உல :** சீ.:முண்டம்..எனக்குன்னு வந்துவாச்சியே..நீ ஏண்டா இப்படி இருக்கிறே...

**ஆடி :** ராமனைப் போல ராசா இருந்தா அனுமானைப் போலச் சேவகனும் இருப்பான்னு நீங்கதானே அன்னிக்குச் சொன்னீங்க..

**உல :** ஆமா..உன்னைப்போல குரங்குதான் இருக்கும்..

**ஆடி :** அது எசமானைப் பொறுத்ததுங்க....

**உல :** நிறுத்துடா கழுதை..

**ஆடி :** ஆகட்டுங்க..

**உல :** எங்கேடா அவன் ..செல்லத்துரை ?

**ஆடி :** செல்லத்துரை ஐயா சீரங்கத்திலே இருக்காரு..

**உல :** என்ன சீரங்கத்திலேயே..

**ஆடி :** இன்னமும் தூங்கருருன்னு சொன்னேங்க..

**உல :** இன்னமா தூங்கருன்,..காலையிலே அவன் பண்ணைக்குப் போகலே..

**ஆடி :** அதெல்லாம் போறதில்லீங்க..இவரு போனு மூத்த வருதான் நல்லவருன்னு இவரைத் திட்டுறுங்களாம்.. அவரு அன்னிக்கே புடிச்சுப் போறதில்லேயே..

**உல :** போயி அந்தத் துரையை எழுப்பிவிடுடா..தலேயிலே ரெண்டு குடம் தண்ணியைக் கொட்டு..

**ஆடி :** நிசமாகவே கொட்டட்டுங்களா..?

**உல :** போயி எழுப்புடான்னு..

(ஆடியபாதம் உள்ளே ஓடுதல்)

**உல :** அட மூத்தவனுக்குத்தான் இருபது எக்கராவைப் பிரிச்சுக் கொடுத்து ஓட்டியாச்சு..இவனுவது வீட்டோடே இருந்து நிலங்கரையைப் பார்த்து வருவான்னு பார்த்தா இது கிடைக்கு இரண்டு ஆடு கேக்குது..அட பரந்தாமா, பார்வதீசா..

(செல்லத்துரை சோம்பல் முறித்துக் கொண்டு வருதல்)

**செ :** என்னப்பா இது..இந்த வீட்டிலே தூங்கக் கூட விடமாட்டேங்கிறீங்க..

**உல :** இப்படித் தூங்கினு..இங்கேயும் எல்லாம் தூங்கிப் போயிரும்டா, தூங்கிப் போயிரும்..காலா காலத்திலே நிலங்கரைகளைப் பார்ப்பானு..

**செ :** அதுக்குத்தான் கண்ணுயிரம் இருக்கிறுர், நீங்கள் இருக்கிறீர்கள், எனக்கும் இந்த 'நான்சென்ஸ்' விவசாயத்திற்கும் சூட் ஆகாதுப்பா..என்னுலே இந்தப் பட்டிக்காட்டிலே ஒரு நாள் கூட இருக்க முடியாதப்பா..சொல்லிவிட்டேன் !

**உல :** இவரு பட்டணக் கரையிலே ரெக்கை கட்டி பறந்தவரு..உன்னே மாதிரி அரை வேக்காட்டுப் பயலெல்லாம் விவசாயம்னு மட்டமாப் பேசித்தாண்டா ஊரு இந்த நிலேக்கு வந்துச்சு..பட்டிக்காடாம், இவருக்குச் சூட் ஆகாதாம்....

**செ :** அப்பா..என் படிப்பை கெடுத்துப் பாழாக்கியதுமில்லாமல் என் வளர்ச்சியையும் மண்ணே நோண்டுவதில் குட்டிச் சுவராக்கச் சொல்லுகிறீர்கள்..இதற்குத்தான் என்னே படிக்கக் காலேஜுக்கு அனுப்பினீர்களா..?

**உல :** இவ்வளவு நாளாகப் படிக்கிறேன், படிக்கிறேன்னு பாழாக்கினது போதும்..இனி மேல் இங்கேயிருந் தாவது காசு அருமையெத் தெரிஞ்சுக்கோ..

**செ :** அப்பா எனக்கு இந்தக் கட்டுப் பெட்டி வாழ்க்கையே பிடிக்கவில்லை..

**உல :** பிடிக்காதப்பா..பிடிக்காது. செலவழிச்சே சுகம் கண்ட பயலுகளுக்கு இதெல்லாம் பிடிக்காது..நாலு காசு சம்பாதிச்சுப் பார்த்தால்தாண்டா உலகம் தெரியும்..முட்டை இடுகிற கோழிக்குத் தாண்டா வருத்தம் தெரியும்..

**செ :** அப்பா..உங்களுக்குப் பணம் தானே சம்பாதிக்க வேண்டும் ஒரே வருஷத்தில் பல லட்சங்களை கால டியில் புரளச் செய்கிறேன்.

**உல :** புரளும்..புரளும்..என் தலை தான் உருளும்.... அப்பா 'ஆகிற காயின்னு பிஞ்சிலே தெரியும்' டா..

**செ :** பொறுப்பைப் கொடுத்துப் பாருங்களப்பா..அண்ண னுக்குப் பங்கு பிரித்து இருபது ஏக்கராவைக் கொடுத் தது போல் எனக்கும் பங்கு பிரித்துக் தந்து விடுங்கள்..

**உல :** தந்தா..விதைக்காமே விளைய வச்சிடுவாயோ..

**செ :** ஆமாம்..வானத்து நட்சத்திரங்களை வெள்ளித் திரையிலே ஜொலிக்கச் செய்வேன், இரும்புப் பெட்டியெல்லாம் இருபது லட்ச மாக்குகிறேன்.. உங்களுக்குக் கனகாபிஷேகம் செய்கிறேன்.

**உல :** சினிமாப் படச் சுருள்ளே தீப்பிடிச்சா என்ன ஆகும் தெரியுமா உனக்கு..?

**செ :** பூராவும் எரிந்து விடும்....

**உல :** சினிமாக்காரன் பிழைப்பும் அப்படித்தான்..இவரு சினிமாப் பிடிக்கப் போறாராம்..செழிக்க வைக்கப் போறாராம்....

(ஆடியபாதம் ஓடி வந்து)

**ஆடி :** எசமான்..எசமான் மேல வயலிலே ஒரே கலகம்.. உழப் போனவர்களை ஒதெச்சு விரட்டிட்டாங்க.. பாண்டியனும் இரண்டு பேரும் சேர்ந்துக்கிட்டு நம்ம கணக்கப் பிள்ளையைக் கூடக் கை வச்சுட்டாங்களாம்..

**உல :** என்ன அடிக்கிற அளவுக்குக் கை மீறி விட்டதா..

**ஆடி :** இந்த விவசாயம்னுலே அடியும் கலகமும் ரெட்டைப் பிள்ளை மாதிரி கூடவே வந்துக்கிட்டேதாம்பா இருக்கும்..இதுனுலே தான் இந்தப் பிஸினஸ் வேண்டாம்கிறேன்....

**உல :** எங்கேடா கம்பு..கொண்டா இங்கே....

(ஆடிய பாதம் கைத் தடியை எடுத்து வருதல்—முதலியார் வேகமாகப் போகிருர்)

**செ :** (அவர் போன திசையில் திரும்பி) பரந்தாமா ! பார்வதீசா !

**ஆடி :** அண்ணுமலைக்கு அரோகரா.... !

**செ :** என்னடா அரோகராப் போடுறே..

**ஆடி :** நீங்க உங்க அப்பாவுக்குப் பிடிச்ச சாமியைக் கும்பிட்டுங்க. நான் எனக்குப் பிடிச்ச சாமியைக் கும்பிட்டேன்..

**செ :** ஆடியபாதம்..உனக்கு இருக்கிற முக வெட்டுக்கும், நடிப்புக்கும் நீ இங்கே இருக்க லாயக்கில்லேடா..

**ஆடி :** உங்க கையிலே பெட்டிச் சாவி வந்தப்புறம் லாயக்கு லாயக்கில்லேன்னு சொல்லுங்க. எனக்கு இங்கே ஏழு வருஷப் பிராட்டிசுன்னு பெரிய தம்பியே சொல்லியிருக்க சம்பளம் சல்லி கூடாட்டியும் போனுப் போகுதுன்னு பொறுத்துக் கிட்டு வேலே பார்க்கிறேன் நீங்க என்னடான்னு..

**செ :** அதில்லே ஆடியபாதம்..நீ ரொம்ப லாயக்குன்னு தான்..நானும் சொல்கிறேன்..நான் பிடிக்கப் போற சினிமாப் படத்திலே உன்னே ' ஹீரோ ' ஆக்கப் போறேன்..

**ஆடி :** ஈரலாக்கப் போறீங்களா ? ஈரலும் வேண்டாம், எலும்பும் வேண்டாம்..

**செ :** ஹீரோப்பா..கதாநாயகன்..அதாவது முக்கியமான முதல் ஆளு..படம் முழுக்க நீதான்..

**ஆடி :** ம்..(மிக மகிழ்ச்சியுடன்) அது எந்தப் படங்க..நாளேக்கே நடிச்சுப்பிடுகிறேன்..படத்துக்குப் பேரு..

**செ :** உன்னேக் கதாநாயகனுக்கிஞ அது எந்தப் படமா இருக்கும்..

**ஆடி :** ‘ நொண்டி மாடுன்னு ’ படத்துக்குப் பேரு....
அதிலே ஒரு சாப்பாட்டுச் சீனும் சேர்த்துப்பிடுங்க....
நான் பரிமாறும் அழகெப் பார்த்துச் சொக்கிடுவாங்க
சொக்கி....

**செ :** ஐயோ....

(திரை)

# களம் 3

## காட்சி 2

**இடம் :** கருணாகரர் வீடு.

**மாந்தர் :** கருணாகரர், பாண்டியன், சங்கிலி.

(கருணாகரர் குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி)

**கரு :** ஊரிலே கல்யாணம் மார்பிலே சந்தனம்னு திரிவது ? எப்பொழுது நாம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லையோ அப்பவே நமக்கு வெளியிலே தலைகாட்ட யோக்கியதை எங்கே இருக்கிறது. இந்த லெட்சணத்தில் ஊரான் மஞ்சிக் கெல்லாம் ஏன் போகிறாய்?

**பா :** அப்பா நீங்கள் பேசுகிற சாந்தி வழியில் போனால் இந்தக் காலத்தில் எவனும் வாழமுடியாதப்பா. உலகப்பரும் அவருடைய கணக்கப் பிள்ளையும், கையாட்களும் ஊரிலே செய்யும் அக்கிரமம் விஷம் கட்டி ஏறி வரும் போது என் மனச் சாட்சியைச் சுட்டு விட்டுத்திரிய என்னாலே முடியாதப்பா....

**கரு :** அதற்காக....கை நீட்டி அடித்து விடுவதோ....

**பா :** நாங்களாக முதலில் கை நீட்ட வில்லையப்பா....விவசாயிகள் நிலத்திலே அவர்கள் ஆளை விட்டுக் கண்ணாயிரம் உழவந்தான். கூடாதென்று அவர்களைத் தடுத்தோம். அதிகாரத்திமிரில் கை நீட்டினான். பலனை அனுபவித்தான்....

**கரு :** உலகப்ப முதலியாருடன் வருஷக் கணக்கில் பழகியவன் நான். அவன் வீம்புக்கு வேட்டையாடுகிறவன், பணத்துக்காகச் சொந்தப் பிள்ளையைக் கூட சொத்துப் பிரித்து விரட்டின ஆசாமி. அந்த மனுசன் வம்பு நமக்கு எதற்கு ? நமது குடும்பக் கவலை தலைக்கு மேலே இருக்கிறது.......குடும்பத்தைப் பற்றியே அக்கறை இல்லாமல்....

பா : குடும்பம், குடும்பம் என்று குறுகிய மனப்பான்மைக் கெல்லாம் இந்த நூற்றுண்டில் ஏதப்பா இடம்? இப்பொழுது உலகந்தான் குடும்பம், ஊரார் தான் சுற்றத்தார்....

கரு : அப்படியாளுல் ஊர் முழுக்கச் சத்திரம் கட்டி வைத்து விடலாமே....

பா : காலமே மாறி வருகிறதப்பா..அரசாங்கமும் மக்களும் ஒரே அச்சில் சுழல ஆரம்பிக்கும் காலம் இது..

கரு : அதனுலே தான் கீரைக் கடைக்கு எதிர்க் கடை போடுகிற மாதிரி அரசாங்கத் திட்டத்துக்கு எதிர்ப் பிரசாரம் செய்கிருயா..

பா : அப்பா....என்னுடைய லட்சியத்திற்கும் கொள்கைக்கும் மாறுபட்ட போக்கு எங்கிருந்து புறப்பட்டாலும் அதை முழு மூச்சாக எதிர்க்கத் தயங்கமாட்டேன். கொள்கைதான் எனக்கு வாழ்வு..அதிலும் இன்றைய சமுதாயம் சாக்கடையாக, சின்னுபின்னப் பட்ட கோட்டையாக, பாழடைந்த வீடாக, உடைந்த கண்ணுடியாக உருக்குலைந்து கிடக்கிறது. இந்தக் கேடு கெட்ட சமுதாயத்தைத் திருத்துவதற்குப் பாடுபடுவதே என் லட்சியம். குடும்பத்திற்கு ஒரு இளைஞனை நாட்டு நலத்திற்காகத் தியாகம் பண்ணிஞல் நமது நாடு உலக முன்னணிக்கு வந்துவிடும்....

கரு : இவ்வளவுதாஞ....இன்னும் இருக்காப்பா....

(பாண்டியனுடைய நண்பனும், கிராமவாசியுமான சங்கிலி அவசரமாக ஓடிவந்து கொண்டே)

சங் : பாண்டியண்ணே....பாண்டியண்ணே....

பா : என்ன . . . என்ன விஷயம்?

சங் : அந்தக் கணக்கன் இல்லே....கண்ணுயிரம்....அந்த ஆளு, சர்க்காருக்குத் தெரியாமெ இருபது மூட்டை நெல்லைக் கடத்திக்கிட்டுப் போனபோது நம்ப ஆளுகள் அமுக்கிப்பிட்டாங்க.....திருடனுக்குக் தேளுக் கொட்டின மாதிரி ஆசாமி போட்டுட்டு ஓடிப்போயிட்டான்..

**கரு :** யாரு..கண்ணுயிரமா..?

**பா :** ஆமாப்பா..அவன் உலகப்பர் வீட்டுக்குள்ளே தனிச் சுரங்கம் தோண்டுகிருன். அவனே மடக்கிஞத்தான் உலகப்பர் ஒடுங்குவார்..

**கரு :** என்னமோப்பா..எனக்கு எதுவுமே பிடிக்கவில்லே.. இதெல்லாம் வேண்டாத சமாச்சாரம்..

**பா :** நீங்கள் எதுவும் தவருக எண்ணுதீர்களப்பா.. இதோ வருகிறேன்..

(போதல்)

(திரை)

# களம் 3

## காட்சி 3

**இடம் :** கண்ணுயிரம் வீடு.

**மாந்தர் :** கண்ணுயிரம், அம்மாக்கண்ணு.

(கண்ணுயிரத்துக்கு அவன் மனேவி அம்மாக்கண்ணு ஒத்தடம் போட்டுக் கொண்டிருக்கிருள்—அவன் கத்தி முனகுகிருன்.)

**கண் :** அடியே தர்ம பத்தினி....பார்த்து ஒத்தடம் கொடுடி ....எளஞ் சூடாடி....அவனுகளே பாதி என்னேப் பொசுக்கிப்பிட்டாங்கடி. நீ சுடுகாட்டுக்கே சுட்டு அனுப்பிடாதே அம்மாக்கண்ணு.

**அம் :** இன்னிக்கு எந்த விடியா மூஞ்சி முகத்திலே முழிச்சீங்க ?

**கண் :** உன் முகத்திலே தாண்டி ! உன் சந்திரவதனத் திலேதாண்டி முழிச்சேன். முதுகை முக்காத்துட்டுப் பெருமெப் பேத்துப்பிட்டாண்டி.

**அம் :** நான்தான் அப்பவே சொன்னேனுல்ல....

**கண் :** ஆமாமா....பத்தினி சொல்லேக் கேட்டுத்தான் பட முடியாத துயரமெல்லாம் பட்டு வந்திருக்கிறேன். காலங் காத்தாலே களத்து மேட்டிலே பெரட்டிப்

பிட்டான், பாதி உசிரு போச்சு. ம்....ம்.... மெதுவாடி.. மெதுவா..அம்மா....மிராசுதாருக்கும் சின்னத் தம்பிக்கும் வீட்டிலே பெரிய அடிதடி . .

**அம் :** அதிலே யாருக்கு அடி....

**கண் :** அதிலேயும் எனக்குத்தாண்டி.... சின்னவருக்குச் சொத்தைப் பிரிச்சுக் குடுத்துடுங்கண்ணு நியாயம் சொன்னதுக்கு அந்தக் கிழவன் நொக்கிப்பிட் டாண்டி.

**அம் :** இவ்வளவு அடியையும் வாங்கிக்கிட்டுச் சும்மாவா வந்தீங்க ?

**கண் :** இல்லேடி..வழக்கம் போலச் சுரண்டுறதை விட இன்னிக்குக் கூடத்தான் பத்திருபது மூட்டை கொண்டு வந்தேன்....

**அம் :** இருபது மூட்டை கிடைக்கிறபோது இதுக்கு மேலேயும் அடி வாங்கிக்கலாமே....

**கண் :** அதாண்டி இல்லே....அந்தப் பாவி பாண்டியன் அதையும் வாய்க் கெட்டாமெச் செஞ்சுட்டாண்டி....

**அம் :** அதுவும் போச்சா....அடப்பாவி மனுஷா....(ஒத்த டத்தை அப்படியே மேலே கொட்டி விடுதல்..)

**கண் :** (சூடு பொறுக்காமல்.) ஆய்....ஆய்....

**அம் :** ஏய்யா.. நீ திடீர்னு மண்டையைப் போட்டுட்டா என் கதியும் என் பிள்ளைகள் கதியும் என்ன ஆகிறது ? உன்னெ நம்பி நான் பாவி என் கழுத்தைக் குடுத் தேனே....

**கண் :** உன்னெ நம்பி நான் என் உடம்பைக் குடுத்திருக் கேனே..(கெஞ்சலாக.) நான் என்ன அம்மாக் கண்ணு செய்வேன் ? எரியுற வீட்டிலே புடுங்கின வரைக்கும் ஆதாயம்னுதான் முடிஞ்சவரைக்கும் பார்த்தேன். நான் கட்டின நெடுஞ் சுவரை யெல்லாம் ஒரு நிமிஷத்திலே குட்டிச் சுவராக்கிட்டான், அந்தப் பாண்டியன்.

**அம் :** அவனெச் சும்மாவா விட்டீங்க....

**கண் :** நானு சும்மா விடுவேன்.... நாலஞ்சு பேராச் சேர்ந்து அமுக்கிப்பிட்டான்....இல்லாட்டி....

**அம் :** இன்னமேயும் அப்படிச் செய்வான்ல....அவனேச் சும்மா விடப்படாது....ஆமா.

**கண் :** ஆமாண்டி....ஆமா....இதுவரைக்கும் விட்டது தப்புத்தான். இனி, அவனேத் தீர்த்துக் கட்டிப்பிட்டுத் தான்....அதுக்கும் ஒரு திட்டம் போட்டுடறேன்....

**அம் :** அடுத்தாப்பிலே உங்க மிராசையும் பார்த்துக்குங்க...

**கண் :** கறந்து முடிச்சப்புறம் தாண்டி அந்தக் காமதேனுக் கிட்டே இந்தக் கண்ணுயிரம் போவேன். கணக்கிலே சுண்டிப் பிடுவேன்ல. சொர்ணக்கிளியே . . . . (கொஞ்சுதல்)....

**அம் :** போங்க....சின்னப்பிள்ளே மாதிரி

**கண் :** எத்தனே டசன் பெத்தா என்னடி....இவரு என் றைக்கும் சின்னப் பிள்ளேதான்....என் அம்மாக் கண்ணுக்கு எத்த சின்னப் பிள்ளேதான்........ம் வலிக்குதுடி....பார்த்துப் போடு....ம். அம்மா..

(திரை)

# களம் 3

## காட்சி 4

**இடம் :** தெரு.

**மாந்தர் :** கிராமவாசிகள்—முனுசாமி, சங்கிலி, ராமசாமி.

(பாலேயூர்க் கிராமம் புதுச்சோபையுடன் விளங்குகிறது. கிராமவாசிகள் பேசிக்கொண்டு வருதல்.)

**ராம :** வாங்கண்ணே வாங்க....மாரியம்மன் பொட்டல் கூட்டத்துக்குத்தானே ?

**முனி :** ஆமாண்ணே : நம்ப நல்லப்பய்யா பேசப்போரு ருல்ல....

**ராம :** நல்லப்பனுலே நம்ப பாலேயூர் கிராமத்துக்கு வந் திருக்கிற வாழ்வைப் பார்த்தீங்களா.

முனி : கோயில்லே வச்சுத்தான் கும்பிடணும். அப்பாவுக்கிட்டேயிருந்து தனக்குக் கிடைச்ச இருபது வேலி நிலத்தையும் நம்பளுக்கே கொடுத்துக் கூட்டுப் பண்ணையாக்கிவிட்டு அவருமில்ல தினம் வயக்காட்டிலே நிக்கிராரு....

ராம : இந்த மனசு யாருக்கு வரும் ? நாலு சாண் நிலம் கிடைச்சா ஒவ்வொருத்தன் தலைகீழா ஆடுருன். இவரா....

முனி : அதோடே அந்த அஞ்சு வருஷத் திட்டத்தை நம்ப ஊரிலே கொண்டாந்துட்டாரே அதைச் சொல்லுங்க..

(ஐந்தாண்டுத் திட்ட விளக்க ஆடல்—பாடல் நிகழ்ச்சிகள்.)

ராம : இவ்வளவும் நல்லப்பளு கொண்டாந்தாரு....

முனி : அவரு இல்லே....சர்க்காருதரன் திட்டத்தைக் கொண்டாந்தாங்க....ஆனால் அவருதானே நம்பளை யெல்லாம் ஒழுங்கா ஒத்துழைக்க வச்சாரு.... விவசாயத்தைப் பெருக்கச் சேர்ந்து பாடுபடச் சொன்னுரு....அதைச் சொல்றேன்....

ராம : என்னே ....யானே மாதிரி ஒரு பூதம் வந்து ஒரு நொடியிலே ஊரு நிலத்தை யெல்லாம் உழுது தள்ளிட்டுப் போச்சே அது பேரு என்ன....

முனி : அதுவா....அதுதான் உழுகிறது....

ராம : அதுதான் தெரியுமே! அதுக்குப் பேரென்னன்னு கேட்கிறேன்....

முனி : ம்....பேரு....ட்....டாக்டரு....டாக்டரு....

ராம : டாக்டரு இல்லேண்ணே....அது மாதிரிதான் வரும். வேறே பேரு....

முனி : வாங்க....விளக்கு வைக்கிற நேரமாச்சு....வேகமாப் போகலாம்.

ராம : நம்ப பாலையூர்க் கிராமத்திலே விளக்கு வைக்கிற நேரம்னு சொல்லாதீங்கண்ணே .. .. விளக்குப் போடுற நேரமின்னு சொல்லுங்க....இந்த அஞ்சு வருஷத் திட்டத்திலே நம்ப ஊருக்குமில்லே வெள்ளைக்காரன் வீட்டு எலெக்ட்ரிக்கு விளக்கு வந்திருச்சு......

**முனி :** அது வெள்ளேக்காரன் விளக்கு இல்லே....நம்ப வுங்க விளக்குத்தான்.

**ராம :** போடு சக்கை....நம்ப ஆளுதான் இவ்வளவு பெரிய விளக்குப் போடுறுங்களா! ஆமாண்ணேண்...... இதுக்கு முன்ஞலே நம்ப கிராமத்தை இருட்டின வுடனே பார்த்தா கூடையைப் போட்டுக் கவுத்த மாதிரி ஆயிடும்

(சங்கிலி வருதல்)

**சங் :** இப்பப் பட்டப்பகல்லே கூடையைப் போட்டுக் கவுக்கி ருப்பிலே வந்திருச்சு.

**முனி :** சங்கிலி அண்ணஞ உங்க......வெள்ளெழுத்து எப்படியிருக்கு?

**சங் :** வெள்ளெழுத்தாவது கருப்பெழுத்தாவது.

**ராம :** உங்களுக்கு யானேயைப் பார்க்கவே வெள்ளெழுத்து ங்குது..அஞ்சு வருஷத் திட்டமின்ஞ உங்களுக்கு ஆலகால விஷம் ஆச்சே. கிராமம் நல்லாயிருக்கிறது உங்களுக்குப் பிடிக்காதோ....

**சங் :** இன்னிக்குப் போட்டிருக்கிற வெளிச்சத்தைப் பார்த்துப் பிட்டுப் பேசாதே. இது என்ன சுண்டைக்காய்த் திட்டம். எங்க பாண்டியர் சொல்றபடி செய்தால் ஒரே புரட்சியில் நாடெங்கும் ஒளி வந்து விடும்....கூட்டுப் பண்ணே நாடெங்கும் பரவிவிடும்.

**ராம :** இப்ப புரட்சியில்லாமலே..நல்லப்பரு கூட்டுப் பண்ணே ஆக்கிப் பிட்டாரே....

**முனி :** ஆமா..ஒரு வயலுக்கும் இன்ஞெரு வயலுக்கும் நடுவே கிடந்த வரப்பெல்லாம் உடைச்சு விட்டு ஒரே நிலமாயிருச்சு....எல்லோரும் ஒருமிக்கப் பாடுபடு கிறேம்......

**சங் :** வரப்பை உடைச்சுப்பிட்டாப்பிலே கூட்டுப்பண்ணே வந்திரு மோ! அந்த நிலத்திலே வர்ற விளேவு எல்லாம் அந்த ஆசாமிக்குத்தானே....உலகப்பரு ஒரு வழியாச் சுரண்டிஞரு....நல்லப்பரு புது வழியிலே சுரண்டு வாரு..பணக்காரன் எப்படியும் பணக்காரஞகத்தான் பார்ப்பான்....

**மூனி :** வயலுக்கு வேண்டிய தண்ணீர் நல்லாப் பாய்ந்த பிறகு கண்மாயிலே தண்ணீர் தேங்கிக் கிடக்கிறது நல்லதுதானே..நமக்கு நல்லாத் தந்துவிட்டு அவரு முதலாளி ஆனால் ஆகட்டுமே..

**ராம :** அப்படிச் சொல்லுங்க அண்ணே......(சங்கிலியிடம்) இந்தாப்பாரு......இந்தச் சந்தேகப் பிசாசு இருக்கிற வரைக்கும் நீ உருப்பட மாட்டே......

**சங் :** உருப்படுற வழி வேறே உங்களுக்குச் சொல்லித் தர்றாங்களா.

**முனி :** என் ராத்திரிப்பாடம் படிக்க வந்துதான் உருப்பட வழி பாரேன்.

**சங் :** ராத்திரிப்பாடமா?

**ராம :** ஆமா....முதியோர் கல்வித் திட்டம்னு துவக்கி தினம் வாத்தியார்கள் சொல்லித்தர்றாங்க....

**சங் :** பிள்ளைகளுக்கே ஒழுங்கான பள்ளிக்கூடம் கிடையாது, பிள்ளைகள் இருந்தால் வாத்தியார் இல்லே....வாத்தியார் இருந்தால் பிள்ளைகள் இல்லே. இரண்டும் இருந்தாலும் ஒழுங்கா நடக்கிறதில்லே.

**ராம :** நீ எந்த உலகத்திலேண்ணே இருக்கிறே..நம்ப கிராமத்திலே புதுசா இரண்டு பள்ளிக்கூடம் திறந்து எட்டு வாத்தியார்கள் வந்திருக்காங்க, என்னமோ பேசுறியே....

**சங் :** பள்ளிக்கூடம் சம்பளமெல்லாம் எப்படி?

**முனி :** உனக்குப் பிள்ளையிருந்தால்ல அக்கறையாக் கேட்டுக்குவே....சம்பளமும் இல்லே....சங்கடமும் இல்லே.. எட்டாம் வகுப்பு வரைக்கும் இலவசமாக் கத்துத் தர்றாங்க..பிள்ளைகளுக்குப் பகல் சாப்பாடு கூடப் போடுறாங்க போங்க....இப்ப நம்ப பயல்லாம் பள்ளிக்கூடம் போகக் களவடிக்கிறதேயில்லே, பாடத்தைக் கரைச்சுக் குடிக்கிறான்....

**ராம :** நான்கூட ராப்பள்ளிக்கூடத்திலே புத்தகத்தைக் கரைச்சுக் குடிச்சிப்பிடலாமென்று இருக்கேன்.

**சங் :** நல்லாயிருக்கு..விவசாயின் வயிறு வறட்டுச் சட்டியாகக் காயும் போது முதியோர் கல்வியாவது, முட்டாள் கல்வியாவது....விவசாயி வயிறு நிறைந்தால் வாழ்வு பொங்கினுல் எல்லாம் தன்னுலே வந்துவிடும். விவசாயிக்கு எல்லா வகையிலும் கதிமோட்சம் கிடைக்கணும்னு கிளர்ச்சியைத் தவிர வேறு வழி இல்லே.

**ராம :** எண்ணே..தானுக் கனியுறது வேணும்னு தடியாலே அடித்து நாறவைக்கணும்னே நினேக்கிறீங்க....எங்களோடே வாங்க..நல்லப்பரு சொல்றதைக்கேளுங்க.... அவரு சொல்றபடி முயற்சி பண்ணுங்க....

**முனி :** ஒண்ணும் ஒத்து வரலேயின்னு எல்லோரும் சேர்ந்துக் குவம், உங்க பாண்டியரோடே சேர்ந்து புரட்சி போடுவோம்.

**சங் :** நல்லப்பனுக்கு என்னய்யா தெரியும். என்னமோ பெரிய மனுஷன் பிள்ளேயின்னு நாலு பயலுக வேட்டியை மடிச்சுக் கட்டிக் கிட்டு மரியாதை பண்றதினுலே இவரும் பெரிய மனுஷரு ஆயிட்டாரு....

**முனி :** அப்படியெல்லாம் கேவலமாப் பேசாதேய்யா....அவருக்கு என்ன தெரியும்கிறதைத்தான் வந்து கேட்டுப்பாரேன்.

**ராம :** ஆமா வந்து கேளுண்ணே....இன்னிக்கு அவரு பேசுருரு....

**சங் :** தெரியும் தெரியும்....சமுதாய நலத் தீட்டத்திலே தானே....

**முனி :** தீட்டமின்னு நீட்டாதிங்க....திட்டமின்னு சொல்லுங்க.

**சங் :** ம்....திட்டம்....திட்டம்....எத்தனே திட்டம்தான் வருமோ.

**ராம :** வாண்ணே....கேட்டுப் பார்க்கலாம். இந்தா இருக்கிற மாரியம்மன் பொட்டலுக்குத்தானே....

(போதல்)

(திரை)

# களம் 3

## காட்சி 5

**இடம் :** மாரியம்மன் கோவில் மைதானம்.

**மாந்தர் :** நல்லப்பன், கிராமவாசிகள்.

(பாலையூர்க் கிராமச் சமுதாய நலத்திட்டத் துவக்க விழாப் பலகைகள் தொங்குகின்றன—நல்லப்பன் பேச எழுந்ததும் ஒரே கைதட்டல் ஆரவாரம் எழுகிறது.)

**நல் :** தாய் நாட்டுப் பெருமக்களே. . . . இன்று நமது பாலையூர்க் கிராம வரலாற்றிலே முக்கியமான நாள். ஐந்தாண்டுத் திட்ட அடிப்படையில் அமைந்த சமுதாய நலத் திட்டத்தை நமது ஊரில் துவக்கப் போகிறார்கள். இதனால் நமது கிராமத்தில் வாழ்வு பொங்கும், மகிழ்ச்சி பொங்கும், இன்பம் பொங்கும், எல்லாம் பொங்கும். இது நமது திட்டம்! ஆக்கவேலைத் திட்டம், அபிவிருத்தித் திட்டம், நாட்டுக்கேற்ற நல்ல திட்டம், திரு வளர்க்கும் திட்டம், இந்தச் சமுதாயநலத் திட்டம் விவசாயியையும் நிலத்தையும் இணைக்கும், விவசாயியையும் சமூகத்தையும் பொருத்தும், நிலத்தின் வளர்ச்சியிலும் உழவன் வாழ்விலும் சமுதாயமே அக்கறைக் காட்டச் செய்யும், நகரத்து வசதிகளையெல்லாம் கிராமத்தில் பெருகச் செய்யும். இந்தத் திட்டத்தின் வழியாக நமக்குச் சமுதாய வாழ்விலும் அரசியல் அமைப்பிலும், பொருளாதார நிலையிலும் சரியான நியாயம் சாதனையில் கிடைக்கும். சோஷலிச சமுதாயம் என்ற ஏற்றத்தாழ்வற்ற இனிய பூங்காவை நோக்கி இந்தியாவின் முதுகெலும்பாகிய கிராமங்கள் நடை போடத்துவங்கும். நாடெங்கும் தொழில் வளம் பெருகும். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் வாழ்வு நிலைக்கும். வீணில் உண்டு களிக்கும் சோம்பேறி வாழ்வு தொலையும். உலகத் தொழிலனைத்தையும் உவந்து செய்யும் உயர்ந்த நிலைவரும். கிராம நலனுக்கு அடிப்படையான மருத்துவ வசதி, கல்வி வசதி பெருகும். நாட்டின் எல்லாப் பாகங்களோடும் நமது கிராமம் எல்லா வகையிலும் இணைக்கப்படும். இந்த இணைப்பை நாம் பயன்படுத்தவேண்டும். நாம் அனைவரும் நாட்டு நலனுக்காக அயராது உழைக்க வேண்டும். நாம் இணங்க, இணங்க முன்னேற்றம்

ஆக்கம்!....பிணங்கப் பிணங்க, பிற்போக்கு, அழிவு!! ஆக்கவழியில் முன்னேறும் அன்புப் பாதைதான் இந்தத் திட்டம். மக்கள் நலனுக்காக, மக்களைக் கொண்டே நடத்தப்படும் மக்களது திட்டமாகிய இந்தச் சமுதாய நலத்திட்டத்தை பயன்படுத்தி வெற்றி நடை போடலாம். சுபிட்ச ராட்சியத்திற்கும், சுகமான வாழ்விற்கும் ஏற்ற இனிய எளிய மார்க்கம் இந்தத் திட்டம் ஒன்றுதான் என்று கூறி அமர்கிறேன்.... வணக்கம்....!!

(திட்டத்தின் விளைவுகளை உணர்த்தும் கிராமிய நடனம்—உரை நடைப் பாங்கில் அமைந்தது)

(திரை)

# களம் 3

## காட்சி 6

**இடம்:** தெருவின் ஒரு திருப்பம்.

**மாந்தர்:** கிராமவாசிகள்—முனிசாமி, சங்கிலி, ராமசாமி, நல்லப்பன்.

(சமுதாய நலத்திட்டம் பற்றிய உரையாடல் நீடிக்கிறது).

**முனி:** நல்லப்பய்யா....நீங்க இன்னேரம் சொன்னதெல்லாம் விளங்கிடுச்சு..ஆனால் ஒன்னே ஒன்றுதான் புரியவில்லே....

**நல்:** என்ன....?

**முனி:** திட்டமெல்லாம் பெரிசாத்தான் இருக்கு. இதெல்லாம் ஒழுங்கா நடக்குமா? இல்லே நம்ப சர்க்கார் தானேன்னு தட்டிக் கழிச்சுப்பிடுவாங்களா....

**சங்:** சரியான கேள்வி! கேளுங்க....நடக்குமா....

**நல்:** நடக்கும்படி செய்யவேண்டியது நம் பொறுப்பு. மக்களுடைய பரிபூரண ஒத்துழைப்பைக் கொடுத்தால் எல்லாம் வெற்றிகரமாக நடக்குமே....

**சங்:** நடக்குமே....அதோடே அதிகாரிகளுடைய பையும் நிரம்புமே....

**ராம:** உனக்கு எப்பவும் வக்கிரப்புத்திதான்..

**நல் :** நம்ப சங்கிலியண்ணன் சொல்ற மாதிரியும் ஒரு சில இடங்களிலே நடக்குது. ஆனால் எல்லா அதிகாரிகளையும் அப்படிச் சொல்லக்கூடாது. அதிகாரிகளும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் லஞ்சம் வாங்க இடம் தருவதே பொதுமக்கள்தானே! நமக்கு விசேஷச் சலுகை வேண்டுமென்பதற்காக வழி தவறி நடக்கிறோம். பணத்தைக் கொடுத்தாவது சுய நலத்தைப் பெருக்குகிறோம், சமுதாயத்தில் நஞ்சைப் பரப்புகிறோம். மக்கள் விழிப்படைந்துவிட்டால், குற்றம் செய்யும் அதிகாரிகளும் திருந்திவிடுவார்கள், தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்வார்கள்....

**சங் :** திருந்துறதெங்கே? நடுத்தெருவிலே வைத்துச் சுட்டால்தான் திருத்த முடியும்....

**ரா :** அது உங்க பாண்டியரு திட்டமா? சுடுங்க.....சுடுங்க.

**முனி :** அதுசரிங்க....வருமானத்தைப் பெருக்கோணும்னிங்களே! விவசாயி நிலத்தை நம்பி வாழறவன். நிலத்திலே விளைஞ்சால்தானே வருமானம் பெருகும். அதோடே நிலத்திலே விளையுறதுமட்டும் விவசாயிக்குச் கட்டுபிடியாகலியே....

**ரா :** வருஷம் பூராவும் நம்ப நாட்டு விவசாயிக்கு நிலத்திலே வேலையும் இல்லையே....விவசாயியை விடப் பிச்சைக்காரன் தினமும் நிறையச் சம்பாதிக்கிறான்.... இதுக்கும் பிச்சைக்காரப் பிழைப்பு தேவலை போலிக்கு....

**நல் :** அதுக்கும் திட்டம் போட்டிருக்காங்க....

**சங் :** விவசாயியை எல்லாம் பிச்சைக்காரன் ஆக்கத்தானே!

**நல் :** சங்கிலியண்ணனுக்குச் சரியான மூளைதான்! நான் விவசாயிக்கு வருமானப் பெருக்கத்துக்குப் போட்டிருக்கிற திட்டத்தைச் சொல்றேன்....

**முனி :** நீங்க நேரத்தை வீணாக்காமெச் சொல்லுங்க தம்பி!

**நல் :** நம் நாட்டு விவசாயியின் வருஷ வருமானம் சுமார் ரூபாய் 200தான். அமெரிக்கா போன்ற இதர நாடுகளிலே ஒரு விவசாயியின் சராசரி வருஷ வருமானம் பத்தாயிரம் ரூபாயாம்....

ரா : அம்மாடி..மலையும் மடுவுமாவல்ல இருக்கு..அங்கே நிலத்திலேயெல்லாம் பணமே முளைக்குதோ....

நல் : கேளுங்கள்....நம் நாட்டு விவசாயின் வருமானத்தைப் பெருக்கவும் நமது ஐந்தாண்டுத் திட்டத்தில் வழி செய்திருக்கிறார்கள். அந்தந்தக் கிராமச் சூழ்நிலைக் கேற்றபடி பல கிராமக் கைத்தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் வளர்க்கப் போகிறார்கள். இருகையாலும் உழைக்க வழி செய்யப் போகிறார்கள்.

சங் : (திருப்தியடைந்தவர்போல) சீனாவிலே கூட ஒரு பழமொழி இருக்கிறதாம். சாப்பிட வாய் ஒண்ணு, அதற்கு உழைக்கக் கை இரண்டு என்று....

நல் : ஆமாம். சரியான பழமொழிதான். அந்த இரண்டு கைக்கும் இனிமேல் வருஷம் முழுவதும் வேலை கிடைக்கும்.

ரா : கொஞ்சம் விபரமாகவே சொல்லுங்க தம்பி....நேரமானாலும் பரவாயில்லை.

நல் : உதாரணமாக....நமது கிராமத்தைச் சுற்றிப் பனைமரம் நிறைய இருக்கின்றன....இல்லையா....இங்கே கூடை முடைவது, பனைவெல்லம் காய்ச்சுவது எல்லாம் செய்யலாம்....வருமானம் கிடைக்கும்....

சங் : கூடவே கள்ளச் சாராயமும், திருட்டுக் கள்ளும் காய்ச்சினா ரொம்ப வருமானம் சுளுவாக் கிடைக்குமே....

ரா : அது உங்க புத்தி....

நல் : நான் பாடுபட்டுழைத்து நேர்மையாகச் சம்பாதிக்கும் வழிகளையே சொல்லுகிறேன்....இதைப் போலவே அந்தந்தக் கிராமத்திலே கிடைக்கும் மூலப் பொருள்களையும் சூழ்நிலையையும் உதவியாகக் கொண்டு எவ்வளவோ தொழில்களைச் செய்யலாம்.

முனி : பனைவெல்லம் போல இன்னும் என்னென்னதான் செய்ய முடியும், சொல்லுங்களேன் தெரிஞ்சுக்கிறோம்....

ரா : ஆமா தம்பி..நல்லாச் சொல்லுங்க....

**நல் :** கேளுங்கள்..ஒரு பட்டியலே தருகிறேன்....திண்டுக் கல்லிலே—பூட்டு, ஆம்பூரிலே—தோல் பதனிடும் தொழில், பழனியிலே....

**ரா :** பஞ்சாமிர்தம்..சீமைக்குக் கூடப் "பார்சேல்" பண்ண லாம்.

**நல் :** பஞ்சாமிர்தம் மட்டும் இல்லேங்க....பழனியிலே—லாந் தர் விளக்கு, கும்பகோணத்திலே—கொசு உற்பத்தி இல்லே, பித்தளே பாத்திரம் செய்யலாம்....மதுரை ஜில்லா முழுக்க ஆலேத் தொழிலுக்கு வேண்டிய உப கருவிகள் செய்யலாம். மானுமதுரையிலே மண் பாண்டம்....

**சங் :** மண சட்டி செய்யுறது என்ன வருமானத்தைத் தந் திறப் போகுது....

**நல் :** அப்படிச் சொல்லாதிங்க....சீனுப் பீங்கான் சட்டி எப்படி முன்னேறிச்சு....கோடி கோடியாய் அந்த நாட்டுக்குப் பணத்தைக் குவிக்குதில்லே....

**முனி :** அப்புறம்....

**நல் :** சேலத்திலே—கண்ணுடி வளேயல், பாலக்காடு, பல்லா வரம் போன்ற இடங்களிலே பாதரட்சைகள் செய்கி ருர்கள்....சிவகாசியிலே தீக்குச்சி, இன்னும் உசிலம் பட்டி, கொடைக்கானலிலே தேனீகூட வளர்க்கிருர் கள்....

**முனி :** நம்ம கிராமத்திலேயெல்லாம் வெறும் ஈதான் வளர்க்கலாம்.

**சங் :** அதுக்கொன்னும் திட்டம் போட்டு வளர்க்க வேண் டாம்.....தானுகவே வளரும்....

**ரா :** அதை உங்க பாண்டியரு திட்டத்திலே சேர்த்துக்கங் கண்ணே.

**சங் :** நான் பேசினு எய்யா அவரைப்போயி இழுக்கிறே....

**முனி :** எங்க....இவ்வளவுக்கும் கொள்ளே ரூபாய் செலவா குமே..

**நல் :** ஆமா....அதையெல்லாம் ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ்வரும் சமுதாய நலத் திட்டங்களில் சர்க்கார் கோடி கோடியாய்ச் செலவழிப்பார்கள்..

ரா : கோடின்னு எவ்வளவு கோடி....?

நல் : முதல் திட்டத்திலே மட்டும் மூணு ஆயிரம் கோடி வரைக்கும் செலவாயிருக்குது..

ரா : அம்மாடி....இவ்வளவும் கிராமத்திலேதான் செல வாகும். பட்டணக் கரையிலே ஒண்ணுமில்லையா..

நல் : அங்கும் நிறைய உண்டு. அங்கே பெரிய தொழிற் கூடங்களும், ஆலைத் தொழில்களும், இயந்திரச் சாலை களும், ஆராய்ச்சி மண்டபங்களும் அமைத்துப் படித்த இளைஞர்களுக்கு வேலை தருவார்கள். கனரகத் தொழில்களில் பல லட்சம் பேருக்கு நாடெங்கும் வேலை கிடைக்கும். வெறும் புத்தகப்படிப்பு மட்டும் இல்லாமல் இயந்திரக் கல்வி கற்றுத் தந்து நாட்டுத் தொழில் நுணுக்க அறிவை வளர்ப்பார்கள் ..எல்லாவற்றிற்கும் சேர்த்துப் பல ஆயிரம் கோடி ரூபாய்கள் செலவாகும்....

சங் : செலவு தான் ஆகும்! விளக்கெண்ணைக்குத் தான் கேடு....பிள்ளையொன்றும் பிழைக்காது....

ரா : அட சும்மா இருங்கிறேன்..அவநம்பிக்கை புடிச்ச ஆசாமிகள்....எல்லாம் நடக்குதா இல்லையான்னு பொறுத்துப் பாரேன்....

நல் : இன்றைக்கு இவ்வளவு போதும்....இன்னொரு நாளை க்குப் பேசுவோம்.

முனி : ஆமாமா....நாங்களும் ராப்பள்ளிக்கூடம் போகணும் நேரமாச்சு....வாண்ணே....சங்கிலி அண்ணே ...

சங் : நான் எதுக்குய்யா....

ரா : சும்மாவா..உன் தோலை வெளுக்க முடியுமான்னு பார்க்கலாம்.

(திரை)

# களம் 4

## காட்சி 1

**இடம் :** பூந்தோட்டம்.

**மாந்தர் :** நல்லப்பன், காவேரி.

(பாட்டு முடிந்ததும் நல்லப்பன் குனிந்தபடி இருக்கிறான்.)

**கா :** இதுதான் இயற்கைக் கோலத்தைப் பார்க்க வந்த அழகு: கைக்கடிகாரத்து முள்ளைச் சுற்றிக் கொண்டே யிருக்கிறீர்களே....

**நல் :** ஆம் காவேரி..இயற்கைக் கடிகாரத்தைப் பார்த்துப் பார்த்து அலுத்து விட்டேன். இயற்கைத்தாயின் படைப்பிலே என்றும் நிரந்தரத்தைப் பார்க்க முடிவதில்லை. பேதமற்ற இணக்கத்தையும் உணர முடிவதில்லை..இயற்கையில் தோன்றுவதெல்லாம் காலப்போக்கில் அழிகின்றன..போட்டியிட்டு மாய்கின்றன....

**கா :** அப்படியானால் உங்களுடைய செயற்கைக் கடிகாரத்தில்..

**நல் :** இதிலிருக்கிற இந்த இரண்டு முள்ளுமாவது பல தடவை சேர்ந்து சேர்ந்து பிரிகின்றனவே....

**கா :** பிரிந்து போகிற முள்ளையாவது திருப்பிச் சேர்த்து விடலாம். பிரிந்து போகிற மனத்தை, நெஞ்சத்தை என்ன செய்வது?

**நல்:** அன்பும் பாசமும் தான் இதை இணைக்கலாம். ஆனால் அதற்கும் பஞ்சமாகிவிட்டது. அப்பாவும் நானும் ஒரு கடிகாரத்துச் சேராத முள்களாகிவிட்டோம். வாழ்க்கைத் துறையில் நானும், தம்பி செல்லத்துரையும் கிளைநதிகளாகி விட்டோம். கொள்கைத் துறையில், நானும் பாண்டியனும் இரு துருவங்களாகிவிட்டோம்....காதல் துறையில் (பெருமூச்சுடனும்) நானும், நீயும்....

**கா :** எல்லா வகையிலும் இரண்டறக் கலந்தவர்களாகிவிட்டோம் அன்பரே! மலரும், மணமும் ஒளியும்

நிழலும்,..இசையும், இனிமையும் என்றெல்லாம் புலவர்கள் புகழ்ந்துரைப்பார்களே அந்தக் கற்பனைக் கோவைகளை யெல்லாம் கடந்த வாழ்க்கைக் காதலர்களாகிவிட்டோம்.

**நல் :** காவேரி! அதோ அந்த ஒட்டுமாஞ்செடியில் இருக்கும் ஜோடிப் புருக்களைப் பார்த்தாயா? நாமும் அதைப் போல்.. .. ..

**கா :** என்ன? ஒட்டுமாஞ்செடியா...!

**நல் :** ஏன்....ஒட்டுமாஞ்செடிதான்....

**கா:** நாமும் அதைப் போலா....

**நல் :** ஆமா அதிலென்ன....உண்மையும் அதுதானே....

**கா :** அன்றைக்கு அப்பாவும் அப்படித்தான் சொன்னார்..

**நல் :** என்ன சொன்னார் காவேரி....?

**கா :** நான் உங்களை நேசிப்பது ஒட்டுமாஞ்செடி உறவுபோல என்றார். ஒட்டுமாஞ்செடி இணைந்து, செழித்துப் பழுக்கும் வரை அதன் வாழ்வு நிலையில்லாதது என்று சொன்னார்.

**நல் :** நமது காதலும் செழித்துப் பழுக்கும் ஒட்டுமாஞ் செடியாகும் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு காவேரி.

**கா :** நம்பிக்கை மட்டும் இருந்தால் போதுமா....?

**நல் :** விருப்பமும் தான் இருக்கிறது....

**கா :** அதே விருப்பம் எனக்கு மட்டிலும் இல்லையா....

**நல் :** உன்னிடம் விருப்பம் மட்டும் இல்லை காவேரி. உள்ளம் மீறிய உணர்ச்சியும் இருக்கிறது. நிறைய இருக்கிறது அதனால் தான் உன்னை மறந்து பேசுகிறாய். கடவுள் உன்னை கொள்கைக்கேற்பப் படைக்கவில்லை.... உணர்ச்சிக்கேற்பப் படைத்துவிட்டார்....

**கா :** போதும்....போதும், ஆண்கள்தான் உணர்ச்சி வகையில் கட்டுப்பாடில்லாத காட்டாற்று வெள்ளம், பெண் எப்பொழுதும்....

**நல் :** கிணற்று நீராக்கும்! அந்த நீரிலே என்ன சுவை அதிகமாக இருக்கும் தெரியுமா?

(காவேரி குனிந்திருத்தல்)

சொல்லு காவேரி....எது அதிகமாக இருக்கும்.... ம்....(மீண்டும் பேசாதிருத்தல். நல்லப்பன் அவள் தாடையை நிமிர்த்துகிறன்....அவள் கண் களில் நீர் மல்குகின்றன).

இதென்ன காவேரி விபரீதம்....கிணற்று நீர் என்ற தற்காகவா காவேரி நதியையே கண் வழியே கொட்டுகின்றுய்....

(காவேரி அமைதியாகத் தலையசைத்தல்)

பின்னே....என்னதான் சொல்லேன்!

**கா :** கம்மிய குரலில்) நீங்கள் ஏன் என்னை விரும்ப வேண்டும்? நாம் ஏன் இப்படிச் சந்தித்தோம்....? ஏன் நம்மிடையே காதல் பிறந்தது? (விம்முதல்)

**நல் :** அசடே! காதல் ஏன் பிறந்ததா? இது காலங் கடந்த ஆராய்ச்சியாயிற்றே. நீதான் அன்று சொன்னுய் காதல் மின்னல் என்று. வாழ்க்கை வானத்தில் அது மின்ன வேண்டிய இடம் இதுதான் என்ற நியதி எங்கே இருக்கிறது? அதை யார்தான் தீர் மானிப்பது?

**கா :** வானத்து மின்னல் போல நமது காதலும் நொடி யில் அழிந்தால்!

**நல் :** மின்னலென்று ஏன் அலட்டிக்கொள்கிறுய்? .... (அவள் கண்களைத் துடைத்தபடி) காவேரி........ காதல் மின்னல் இல்லை....இது வேனிற் காலத்து வெண்ணிலவு, என்றென்றும் வளர்பிறை....இந்த வளர்பிறைக் காதலில் அறிவைக் கொள்ளை கொடுத்து அன்பைப் பெருக்கி வாழ்வோம்....

**கா :** உங்கள் தகப்பனர்....

**நல் :** என் தகப்பனரது சிந்தை திருந்தும், மனம் மாறும் என்பதற்காக இதுவரை பொறுத்தேன். சுட்ட மண் ணும் பச்சை மண்ணும் என்றுவது ஒட்ட முடியுமா?

**கா :** அப்படியானல்....

**நல் :** அப்பா இன்னும் சுட்ட மண் மனப்பான்மையில் தான் நடந்துகொள்கிறார். எனக்கு எல்லாம் தெரியும். உங்கள் குடும்பத்திற்கு அவர் இழைத்துவரும் கொடுமைகளை நான் அறிவேன்....அவரைப் பொறுத்த மட்டில் நான் தோற்றுவிட்டேன்....

**கா :** உங்கள் தம்பி இருக்கிறாரே....

**நல் :** ஆம்! இருக்கிறான்....எப்படியோ இருக்கிறான்.... தம்பி உடையவன் படைக்கஞ்சான் என்பார்கள். ஆனால் என் தம்பி வீட்டுச் செல்வத்தை யெல்லாம் சினிமாச் சுருள்களாக அஞ்சாமல் சுட்டெரிக்கிறான்.

**கா :** என்னைக் கேட்டால் நீங்கள் வீட்டை விட்டு வந்ததே குற்றம்....வீட்டிலிருந்தே அப்பாவை இணங்க வைக்க முடியாமல் வெளியேறியது குற்றம்தானே?

**நல் :** அது மட்டுமா? நான் பிறந்ததே பெரும் குற்றம் காவேரி....பெரும் குற்றம்.... (தலையைப் பிடித்துக்கொள்ளுதல்).

**கா :** என்னை மன்னித்துவிடுங்கள் நான் ஏதேதோ சொல்லி உங்கள் நெஞ்சத்தைப் புண்ணாக்கிவிட்டேன்....

**நல் :** இது இன்று பட்ட புண் இல்லை காவேரி....என்றோ புண்ணாகிப் பொறுக்குத் தட்டிப் போய்விட்டது. பொறுக்குத் தட்டிப்போன புண்ணில் லேசாக ஏதாவது தட்டினாலும்....

**கா :** நான் தவறு செய்துவிட்டேன். தயவு செய்து என்னை ....

**நல் :** தயவு செய்து உன்னைச் சும்மா விடமாட்டேன்.... இந்த வருஷத்துப் பொங்கலோடு என் மனையரசியாகித் தினமும் பொங்கிப்போடும் வரை உன்னை **விட**மாட்டேன். சும்மா விடமாட்டேன்....

**கா :** (சிரித்தல்).

(**திரை**)

# களம் 4

## காட்சி 2

**இடம் :** உலகப்பர் வீடு.

**மாந்தர் :** உலகப்பர், கண்ணுயிரம், ஆடியபாதம்.
(உலகப்பர் கோபமாகப் பேசிக்கொண்டிருத்தல்).

**உல :** இன்னும் எத்தனை நாளைக்குத்தான்யா இப்படிக் கையாலாகதவன் மாதிரி ஒப்பாரி வைச்சுக்கிட்டு இருப்பாய்....இந்தச் சுண்டைக்காய்ப் பயலை....ஒரேதாத் தீர்த்துக் கட்ட எத்தனை நாளுய்யா ஆகும்.

**கண் :** நீங்க உம்னு....ஒரே அடிலே குளோஸ். நம்ப அடியாளுகள் எல்லோரையும் தயாரா இருக்கச் சொல்லிட்டேங்க. நீங்க அன்றைக்குச் சொன்னதிலே யிருந்து நானும் உஷாராயிட்டேங்க....

**உல :** (ரகசியமாக) அந்தப் பயலை இன்னிக்கு ராத்திரியே வயக்காட்டிலே புதைத்துவிடணும் ஆமா....

**கண் :** வயக்காட்டிலே என்னங்க : இந்தக் கண்ணுயிரம் பிளானு போட்டா வயிற்றுக்குள்ளே கூடப்புதைச்சுப் பிடுவேங்க. இன்னிக்கு அவனை வீட்டிலேயே தீர்த்துப் புடறேன்....

**உல :** எய்யா....ஒருவேளை கண்டுபிடிச்சிட்டா....

**கண் :** நீங்க ஒண்ணும் சந்தேகப்படாதீங்க எசமான் .... நான் உங்க உப்பைத் தின்று வளர்ந்தவன். அந்தப் பயல்பாண்டியன் உங்களுக்கு மட்டுமா இடஞ்சல் பண்ணுருன், என்னையுமில்ல பிழைக்க விடமாட்டேங்கிருன்....(பல்லைக் கடித்து) என்னபாடு படுத்தியிருக்கான்....ம்....ம்....டேய் பாண்டியா.... உன்னைப் பழிக்குப் பழி வாங்கப் போறெண்டா.... வீட்டிலே சமாதி கட்டப் போறேன்....

**உல :** (பயந்தபடி) சரி....சரி....கண்ணுயிரம்....உனக்கு உதவிக்கு ஆளு....

**கண் :** உதவி யென்னங்க உதவி ....என் கைதான் எனக்கு உதவி. இந்தக் கை பிடிக்கப்போற கட்டாரிதான் கைக்கு உதவி.

உல : இருந்தாலும் அவனேயும் கூட்டிக்கிட்டுப் போய்யா..

கண் : ஆமாமா....அடியாளுகள் எல்லாம் கூடவே வருவாங்க....

உல் : பத்திரம்பா....அவனே மட்டும் தீர்த்துப்பிட்டியின்ஞ உனக்கு பத்து மூட்டை நெல்லு இனமாத் தர்றேன்.

கண் : அதுக்கென்னங்க....உங்கக்கிட்டேயிருந்து பத்து மூட்டைதாஞ எவ்வளவு வேணும்ஞலும்....

உல : என்னே மட்டும் காட்டிக் குடுத்துப்பிடேதப்பா.... உன் பெண்சாதி பிள்ளேகளே நான் காப்பாற்றுகிறேன்.

கண் : அதுக்கென்னங்க : உங்க வீட்டுச் சொத்திலே மிச்சமிருக்கிறது எங்கே போகப் போவுது....நான் போகட்டுங்களா ....

உல : போய்....நல்ல சேதியோடே திரும்பி வாய்யா....

க்ண் : நான் திரும்பாட்டியும் நல்ல சேதி கட்டாயம் வரும். (போதல்).

உல : பார்வதீசா....பரந்தாமா....அதர்மம் தலேயெடுக்கிற போது நீ அவதாரம் செய்வேன்னு சொல்லியிருக்காங்களே....நீ ஏம்பா இன்னும் பூவுலகத்திலே பொறக்காமே எங்களேக் கஷ்டப்பட விட்டிருக்கே. பரந்தாமா....

(திரை)

# களம் 4

## காட்சி 3

**இடம் :** கருணகரர் வீடு.

**மாந்தர் :** கருணகரர், காவேரி, பாண்டியன், கருந் துணி போர்த்திய உருவம்......

(இரவு மணி எட்டரைக்கு மேல்......)

கா : அப்பா......அப்பா......

கரு : எம்மா.... ?

கா : எம்ப்பா ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள் ?

கரு : ஒன்றுமில்லையம்மா காவேரி....

(அவர் காலருகில் காவேரி அமர்தல்)

கா : என்னாலே தானேப்பா உங்களுக்கு இவ்வளவு கவலை.

கரு : உன்னைப்போலக் குடும்பத்து நிலையறிந்த நூறு பெண் குழந்தைகள் எனக்கிருந்தாலும் நான் கவலைப்படமாட்டே னம்மா....எல்லாம் உன் உடன்பிறந்தானைப்பற்றிதான். ஊருக்கே அடங்காதவன் வீட்டுக்கெங்கே அடங்கப்போ கிருன்....எல்லாம் நான் செய்த பூர்வ வினை...... எனக்கும் பிறகு அவன் எப்படியம்மா உன்னைப் பேணப் போகிருன் ?

கா : அப்படியெல்லாம் வருத்தப்படாதீர்கள் அப்பா.... அண்ணன் சொல்வதும் ஒரு வழியில் நியாயமாகத் தானே அப்பா இருக்கிறது. நாட்டுக்கு நல்லது செய்யத் தானே அவரும் பாடுபடுகிருர் ?

கரு : ஆமா. அடிதடியும் கொலையும் கொள்ளையும் நடத்தி தான் நாட்டுக்கு நல்லது தேடணுமா......ஆருயிர்க் கெல்லாம் அன்பு செய்யும் அமைதி வழியிலே எவ் வளவோ சாதிக்கலாமே....அம்மா....

கா : அப்படியும் தானப்பா அண்ணு செய்கிருர்.

கரு : இல்லையம்மா இல்லை. அமைதி வழியில் அவனும் செய்வதில்லை. செய்பவர்களையும் விடுவதில்லை. அந்த நல்லப்பனுடைய கூட்டுப் பண்ணைக்கு எதிராக ஒரு விவசாய சங்கம் ஏற்படுத்தி ஏக ஆர்ப்பாட்டம் செய்கிரு னம்மா. விவசாயிகளுக்குள்ளே புதுவகையான பிரிவு களுக்கும் மனத்தாங்களுக்கும் நிரந்தரமாக வழி செய் கிருன்......

கா : இதெல்லாம் அவரு (மறைத்தபடி) உங்களுக்குச் சொன்னாரப்பா.

கரு : எவரம்மா....

கா : அவரு..அவரு..சொன்..இல்லப்பா அண்ணன்.

கரு : சும்மா சொல்லம்மா..உன்னைப் பெற்ற தாய் உயிரோடு இருந்தாளென்றால் நீ இப்படித் தயங்குவாயா?.. வயதுப் பெண்ணின் மனவோட்டத்தையும் நெஞ்சு அலைகளையும் தாயுள்ளந்தான் உணர முடியும், அந்தத் தாயுள்ளம் இல்லாத குறையை நானெப்படியம்மா நிவர்த்திக்க முடியும் .. எல்லாம் இறைவன் சோதனை....

கா : ஏனப்பா இப்படி வேதனைப்படுகிறீர்கள்....

கரு : உன் எதிர்கால வாழ்வின் ஒவ்வொரு அம்சமும் நன்கு அமையவேண்டுமென்பதற்குத் தானம்மா நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன். இறைவன் அதற்காகத்தானம்மா என்னை இன்னும் நடைப் பிணமாக உலவ விட்டிருக்கிறான்.

கா : என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள் அப்பா..கடவுள் அருளாலும் உங்கள் ஆசியாலும் எனக்கு மங்கள வாழ்வு கிடைக்கும். இறைவனுடைய திருவுள்ளம் வேறு மாதிரியாக இருந்தாலும் பொறுமையோடு ஏற்பேனப்பா....

கரு : அம்மா......

கா : தாய்நாடு என்னைப் போல ஆயிரமாயிரம் பெண்டிரின் சேவையைக் கையேந்தி அழைக்கிறதப்பா..என்னை நன்றாகப் படிக்கவைத்துவிட்டீர்கள், சர்க்காருடைய ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள எந்தச் சேமநல விடுதியிலாவது சேர்ந்துவிடுவேனப்பா....

கரு : நாங்களெல்லாம் உயிரோடிருக்கும்பொழுது உனக்கு ஏனம்மா இந்த அனுதை வாழ்வு....

கா : என்னப்பா....இதை அனுதை வாழ்வு என்கிறீர்கள். பாரத நாட்டை வாழ்விக்கப் பெண்களால்தான் முடியும், வீட்டுக்கொரு பெண் நாட்டு நலம் காக்கப் புறப்படவேண்டும் என்று அன்று சொன்ன நீங்கள் இன்று இப்படிச் சொல்லுகிறீர்கள்....

கரு : இல்லையம்மா....இல்லை....(இருமுதல்)

கா : அப்பா..அதிகமாக இருமுகிறீர்களே..மன்னித்துவிடுங் களப்பா..நீங்கள் இருக்கும்வரை எனக்கு ஒரு குறை யும் இல்லையப்பா....

கரு : நீ சும்மா சொல்கிருயம்மா..உன் உணர்ச்சிகளை யெல்லாம் மூடி மறைத்து விட்டுப் பொய் சொல்லுகிருய். வயதுவந்த பெண்ணுக்குப் பிறந்த வீட்டில் நீடித்திருப்பதே பெருங் குறை தானம்மா..இயற்கைக்கு மாருன கொடிய குறை (இருமுதல்) (காவேரி அழுதல்) அம்மா காவேரி.. என்னைப்பார்..அழாதேம்மா..உன் விருப்பப்படியே உன்னை நல்லப்பனுக்குக் கொடுக்கத்தானம்மா இதுவரை எண்ணியிருந்தேன். ஆனுல்.... (இருமுதல்)

கா : அப்பா. சொல்லுங்களப்பா....

கரு : நல்லப்பன் உனக்கேற்ற பையன். கண் நிறைந்தவன். பண்பாலும் எண்ணத்தாலும் உயர்ந்த இளைஞன். என்ருலும்கூடப் பலதடைகள் இருக்கின்றனவே....

கா ; என்னப்பா....

கரு : தகப்பனை விட்டு அவன் வெளியில் வந்ததற்குக் காரணமே நாம்தான் என்று உலகப்ப முதலியார் ஊர் முழுக்கப் பரப்பியிருக்கிருர். இந்த நிலையில் ஏதேனும் நடந்துவிட்டால் கேட்கவேண்டாம். நாம் கொடுக்கவேண்டிய பாக்கிக் கடனுக்கு கோர்ட்டுவரை சிரிக்க வைத்துவிடுவார்....

கா : இருந்தாலுங்கூட அவரு நல்லவரப்பா..அவருக்கு....

**கரு :** உன் ஆசை முழுவதையும் இந்த ஏழை அப்பன் அறிவானம்மா....முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட கதை உனக்குத் தெரியுமேம்மா....

**கா :** அவரும் முடவனென்று தன்னைச் சொல்லிக் கொள்ளுகிறாரப்பா......

**கரு :** உம்....பார்க்கலாம்....பார்க்கலாம்....

(பாண்டியன் வேகமாக வருகிறான்)

**பாண் :** அப்பா....நான் அவசரமாகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகவேண்டும்.

**கா :** (கிண்டலாக) நீயாகப் போகிறாயா....அல்லது அவர்களாக அழைத்திருக்கிறார்களா. அல்லது அங்கேயும் பிரசங்கமா....

**பாண் :** விளையாட்டுக்கெல்லாம் இது ஒன்றும் நேரமில்லை காவேரி. அப்பா....உலகப்பருடைய கொட்டத்துக்குச் சாவுமணி அடிக்கும் காலம் நெருங்கி விட்டது. கடைசியாக இரண்டிலொன்று பார்க்கப் போகிறோம்....

**கரு :** உலகப்பன் கொடியவனாயிற்றே பாண்டியன்..நரம்பும் இரத்தமுமாகப் பழகிய என்னையே நாய்போலக் கருதிவிட்டான். தன் ரத்த சந்ததியான மூத்த பிள்ளையை வீட்டைவிட்டே வெளியேற்றிவிட்டான்.

பாண் ; அப்பா....விவசாயிகளும் பொங்கிவிட்டார்கள் நலலப்பன் பேச்சைக் கேட்டு இவ்வளவு நாளும் அடங்கிக் கிடந்தவர்கள் கூடப் புறப்பட்டு விட்டார்கள். உலகப்பரை இந்த உலகத்தை விட்டே வெளியேற்றத் திட்டம் தீட்டி விட்டோம். அதற்கு இறுதிக் கணை பாய்ச்சத்தான் நான் புறப்படுகிறேன்.

**கா :** (தந்தையிடம்) என்னப்பா இது......

**பா :** உலகப்பருக்குச் சட்டப்படி கைவிலங்கு பூட்டத்திரண்டு விட்டோம்.

**கரு :** ஊர்வம்பு நமக்கு எதுக்கு ?

**பா :** நியாயத்தை நிலைக்கச் செய்வதெல்லாம் வம்பாகு மாப்பா...... சரி......காவேரி........வெளிக் கதவைத் தாளிட்டுக்கொள்......அப்பா........ வருகிறேன். (போதல்.)

**கா :** சரிண்ணு.

**கரு :** பார்த்தியாம்மா....நீதியை நிலை நிறுத்தப் போகிற போக்கை......ம் எல்லாம் என் தலைவிதி.

(சற்று அமைதி)

**கா :** அப்பா......உங்களுக்கு எங்கே படுக்கை போட ?

**கரு :** அண்ணன் படுக்கிற இந்தக் கட்டிலிலேயே படுத்துக் கொள்ளுகிறேன் நீ உள்ளே படுத்துக்கம்மா......

**கா :** சரியப்பா......

(விளக்கை அடக்கிவிட்டு உள்ளே போதல்)

(கருணுகரர் படுக்கிருர்....சற்று நேரம் கழிகிறது. கருப்பு உடை போர்த்திய உருவம் ஒன்று கட்டாரியுடன் உள்ளே நுழைகிறது. சுற்றுமுற்றும் பரர்த்தபடி பாண்டியன் எனக்கருதிக் கருணுகரரைக் குத்தி விடுதல். உருவம் மறைதல்).

**கரு :** ஆ......அப்பா......அம்மா........காவேரி...... கா......வே....ரி....யா.

**கர :** அப்பா......(என அலறுதல்)

(கருணுகரர் உடன் மீது காவேரி வீழ்தல்)
(திரை)

# களம் 4
## காட்சி 4

**இடம் :** தெரு.

**மாந்தர் :** முனுசாமி, ராமசாமி, சங்கிலி.

**முனி :** வாங்கண்ணே....என்ன ரொம்ப நாளா இந்தப் பக்கமே காணோம்....என்ன சமாசாரம் ?

**ரா :** எனக்குப் பொண்ணு பிறந்திருக்குண்ணே....

**முனி :** போடு சபாசு....இப்பவே சம்பந்திக்குச் சரியான ஆளாப் பாருண்ணே....

**ரா :** அதான் நீ இருக்கிறியில்ல....உன் பயலுக்கும் என் பொண்ணுக்கும் நாளைக்கே பேசி முடிச்சுக்குவம்.

**முனி :** அடே....நீ ஒரு பக்கம். இந்தக் காலத்திலேயாவது பேசி முடிக்கிறதாவது....வயசு வந்துட்டா அதுகளாப் பேசாமெக் கூட முடிச்சுடுங்க....ம்.... எங்கே....பிரசவம் வீட்டிலே தானே.

**ரா :** இன்னமுமா வீட்டிலே....நம்ப புது ஆசுபத்திரிலே தான்....

**முனி :** டாக்டரம்மாள் எல்லாம் வந்தாச்சா..மருந்து இருந்து ஏதாவது இருக்கா ?

**ரா :** உனக்கு ஒண்ணுமே தெரியாதா....இரண்டு டாக்டர், எழெட்டு நரசம்மாக்கள்....ஆயாக்கள்....பெரிய பட்டாளமே இருக்கு....இதெல்லாம் தெரிஞ்சுக்க வேண்டிய அவசியத்தை இனிமேலாவது உண்டாக்கிங்கண்ணே.

**முனி :** வேண்டாம் அண்ணே....வேண்டாம். பகவான் கொடுத்த இந்த ஒரு பயலே போதும். இல்லாட்டி உலகப்ப மிராசு வீடு மாதிரி நமக்கும் தலைக்குக் கத்தி....கொண்டாந்திருவான்....

**ரா :** ஆமா....நம்ம நல்லப்பய்யா வெளியிலே வந்தப்புறம் மிராசுதார் வீட்டிலே ஒரே குழப்பமாமே....

**முனி :** ஆமா....அந்தச் சின்னப் பயல் இல்லே....செல்லத்துரை. அவனும் பங்கைப் பிரிச்சு வாங்கினான்..

**ரா :** வாங்கிப்பிட்டானு....அப்பனுக்கேத்த பிள்ளைதான்..

**முனி :** வாங்கி என்ன செய்ய ? மூணு மாசத்திலே சினிமாப் படம் பிடிக்கிறேன்னு தீர்த்துப்புட்டானும்.... இப்ப திரும்பவும் வந்து பணம் கேட்கிறானும்....

**ரா :** கொடாக்கண்டனுக்கு ஏத்த விடாக்கண்டன்தான்— உலகப்ப மிராசு பெத்த பிள்ளைக்கே இல்லேங்கிற ஆசாமியாச்சே....

**முனி :** இல்லேன்னு சொன்னாலும் இவன் விடமாட்டானே. நம்ப நல்லப்பரு மாதிரியா....இவன் கிண்டன் ஆச்சே....அப்பனை வெளுத்து வாங்கினானும்....

**ரா :** அப்படியா....நீ ஒரு பயலோடே நிறுத்திக்கண்ணே எழெட்டுப் பெத்து இழுபடாதே....

(சங்கிலி வேகமாக வருதல்)

**ரா :** என்ன புயலு இப்படி வேகமாக வருது....என் காலங்காத்தாலே ஒரு மாதிரியா இருக்கீங்க....

**சங் :** உங்களுக்கெல்லாம் தெரியாதா ?..பெரிய அனியாயம் நடந்துவிட்டதே....ஊரெல்லாம் அமர்க்களப்படுது..

**முனி :** என்ன சமாசாரம்....

**சங் :** சொல்லக் கூட வாய் வரமாட்டேங்குதுண்ணே.... எப்படிச் சொல்றதுண்ணே தெரியலே....பண்டியர் ஊரிலே இல்லாத சமயத்திலே நேற்று இராத்திரி அவரு அப்பாவைக் குத்திக் கொன்னூட்டாங்களே..

**ரா :** அட பாவிகளா....யாரு இதைச் செஞ்சது....

**சங் :** யாருன்னு தெரியலையே....

**முனி :** தெரியாமலா போயிடும்....

**சங் :** பாண்டியர் காலையிலேதான் வந்தாரு....பெத்த அப்பனைப் பிணமாக் கண்டாரு....

**முனி :** என் அந்த வயசான மனிசனைப் போய்க் கொன்னுங்க....

**சங் :** இது அவருக்கு வந்த கத்தியில்லை. எங்கள் பாண்டியரைக் கொல்லச் செய்த சூழ்ச்சி இது....

**ரா :** சூழ்ச்சியா ? யாரு சூழ்ச்சி செய்ய இருக்கிறது ?

**சங் :** செய்வதற்கா ஆள் இல்லை, உலகப்பருடைய அதிகாரத் திமிர் ஒரு பக்கம், நல்லப்பனுடைய போட்டிச் சங்கம் இன்னொரு பக்கம்....ஆளா இல்லை. . .

**முனி :** சே....சே..உலகப்பரை வேணும்னு சொல்லுங்க.. நல்லப்பரைச் சொல்லாதீங்க..அவருக்கும்..அந்தப் பொண்ணு காவேரிக்குக் கூட இந்தப் பொங்கலை அடுத்து

**சங் :** அதெல்லாம் வேஷம் ஐயா வேஷம் .. உங்கக்கிட்டே ஏன் தொண்டைத் தண்ணியைக் குடுக்கணும்..நான் ஸ்டேஷனுக்குப் போறேன். ..

**முனி :** போங்க....... போங்க....வாங்க்ண்ணே நாமும் போயிப் பார்த்துட்டு வரலாம்......

**முனி :** ஆமாண்ணே .... அந்த நல்ல மனுசனுக்கா இந்தச் சாவு வரணும் ....

(திரை.)

# களம் 4

## காட்சி 5

**இடம் :** கண்ணுயிரம் வீடு.

**மாந்தர் :** கண்ணுயிரம், அம்மாக் கண்ணு.

(கண்ணுயிரம் காலைக் கட்டிக்கொண்டு பயப்பிராந்தியுடன் பேய் அறைந்தவன் போல் உட்கார்ந்திருத்தல்)

**அம் :** என்னங்க ! உங்களைத் தானே... காலங்காத்தாலே காலைக் கட்டிக்கிட்டு உட்கார்ந்து வெளியிலே போற மூதேவியை எல்லாம் வீட்டுக்குள்ளே அழைக்கிறீங்களா ?

**கண் :** நீதான் வீட்டிலேயே ஒரு மூதேவி இருக்கிறியே பத்தாதா வெளியிலே திரியறதையும் கூப்பிட்டுச் சக்களத்திப் போராட்டம் வேறேயா நடத்தணும் ....

**அம் :** ஒரு (வாழ்வரசி) வாவரசி, சுமங்கலி நான் இருக்கிற வீட்டிலே அவுட்டுப் பிடிச்சமாதிரி இருக்கிங்களேன்னு கேட்டா ....

**கண் :** எண்டி என் உயிரை வாங்குறே. .. கொஞ்ச நேரம் நிம்மதியா இருக்கவிடேன். ..

**அம் :** ஏன் ? உங்களுக்கு இப்ப என்னவந்திச்சு .. ராத்திரி நடுசாமத்திலே வந்ததிலேயிருந்து ஒரு மாதிரியா இருக்கிறீங்க .. என்னமோ கொலைவாங்கின ஆளு மாதிரி. பார்க்கப் பயமாயிருக்கு. ..

**கண் :** (நடுங்கி) ஐயையோ .. தர்மபத்தினி. .. உன் வாயைமூடுடி .. மூடு .. என் மானத்தை வாங்கிப் பிடாதே .. நான் ஒண்ணும் கொலே வாங்கலேடி .. வாங்கலே .. எல்லாம் ..

**அம் :** எல்லாம் . . . என்னதான் நடந்துச்சு .. சொல்லுங்க

**கண் :** ஒண்ணும் நடக்கலே. .. என்னைக் கொஞ்சம் சும்மா விடு தாயே !

**அம் :** நீங்க கட்டின இந்தத் தாலி தன்னுனே சத்தியமா நீங்க ஒளிக்கமெச் சொல்லலே அந்தஆறுபிள்ளைகளையும் கேணியிலே போட்டுப் பிட்டு நானும் .. ம் .. ம் .. ம் .. நல்ல தங்காள் மாதிரி..ம் .. ம்

**கண் :** வேண்டாண்டி அம்மாக்கண்ணு. நீயும் என் வயிற் றைக் கலக்காதே .. சொல்றேன் .. சொல்றேன் .. (மெதுவாக) ஊருக்குள்ளே என்னமும் பேசுருங் களா ?

**அம் :** என்ன .... எதைப்பத்தி. ..

**கண் :** பிள்ளையார் பிடிக்கப் போயிக் குரங்கா முடிஞ்சிருச்சு அம்மாக்கண்ணு. அந்த அயோக்கியப் பயலே ஒழிச் சுக்கட்டப் போன இடத்திலே அந்த பாவிக் கிழவனைத் தீர்த்தாச்சு. ..

**அம் :** கிழவனைத் தீர்த்தாச்சா .. அப்படியின்னு நம்ப பொழப்பு என்ன ஆகிறது ? போட்டத் திட்டப்படி பாதி நெல்லுக்கூட வீடு வந்து சேரலே ....

**கண் :** உலகப்ப முதலியாரு இல்லேடி. .. அந்தப் பாண் டியன் அப்பன் கருணுகரம் பிள்ளையை...

**அம் :** அடப்பாவிகளா ! அந்த நல்ல மனுசனையா கொன்று போட்டிங்க

**கண் :** என்னடி செய்யிறது. நரிக்குப் போட்ட வலேயிலே மான் விழுந்துவிட்டதே ..

**அம் :** விழும். .. விழும் .. இந்த இடியும் பாவமும் யாருதலேயிலே விழுகப் போகுதோ ? நீங்க இப்பக் கொலே யெல்லாம் செய்யப்பழகிட்டீங்களா ....

**கண் :** (நடுங்கியபடி) நீ இருக்கிறவரைக்கும் நான் ஒன்னும் செய்யமாட்டேன் அம்மாக்கண்ணு .. நான் .. நான் பண்ணலே. நான்கூடத்தான் போனேன். அந்த முரடன்தான் ஆளுத் தெரியாமெக் குத்திப்பிட்டான்..

**அம் :** இப்ப .... போலீசு வந்தா. ....

**கண் :** அம்மாடி. .. போலீசா .. பயமுறுத்தாதேடி .. வந்தா எப்படியாச்சியும் காப்பாத்துடி தெய்வமே...

**அம் :** போலீசு உங்களேப் பிடிச்சுக்கிட்டுப் போயிட்டா என் கதியும் என் பிள்ளேகள் கதியும் என்ன ஆகிறது...?

**கண் :** அதை முதலாளி கவனிச்சிக்கிறேன்னு சொன்ஞருடி ... அதிஞலே தான் நான் துணிஞ்சி செஞ்சேன் ....

**அம் :** ஆமா . .. அவரு சொன்ஞராம் .. இவரு செஞ்சாராம் .. இந்தாப்பாருங்க .. இந்த மிராசுதாருக்கிட்டேயிருந்துபாதிப் பணம் இன்னிக்கு ராத்திரியே நம் வீட்டுக்கு வந்துடணும் போயிப் பயமுறுத்திக் கேளுங்க .. தராட்டித் தீர்த்துப்பிடுங்க. .. சொல்றேன்...

**கண் :** கிழவன் முரடஞச்சேடி...

**அம் :** அவன் முரட்டுத்தனமாக நம்மைக் காட்டிக் கொடுத்துதுப்பிட்டா .. பயப்படாதீங்க..

**கண் :** பார்க்கலாம்டி...

**அம் :** பார்க்கிறதாவது .. இன்னிக்கு ராத்திரியே ரெண்டிலே ஒண்ணு பார்த்திடணும். இல்லே நானே ஊரு முழுக்கச் சொல்லிப்பிடுவேன்...

**கண் :** எதைடி சொல்வே....

**அம் :** நடந்ததை யெல்லாம் தான்...

**கண் :** ஐயையோ .... பொறுடி .... தாயே .. நாளேக்குப் போறேண்டி...

**அம் :** அதெல்லாம் முடியாது .... ஆறின கஞ்சி பழங்கஞ்சியாப் போயிடும் .... இன்னிக்கு ராத்திரியே .... ஆகணும் .... ஒண்ணு நான் பணக்காரியாகணும்..

**கண் :** இல்லாட்டி கம்மனுட்டியாப் போயிடுவாயேடி .... அம்மாக்கண்ணு .... கொல்லாதேடி .... போறேண்டி ..

(திரை)

# களம் 4

## காட்சி 6

**இடம் :** உலகப்பர் வீடு.

**மாந்தர் :** உலகப்பர், ஆடியபாதம், பலவேசப் பண்டிதர், செல்லத்துரை.

(மனக்கவலையுடன் கூடத்தில் அமர்ந்திருக்கிறார் உலகப்பர்)

**உல :** பார்வதீசா... பரந்தாமா .. திருச்சிற்றம்பலத்து ஆடிய பொற்பாதநாதா..

(ஆடிய பாதம் ஓடி வந்து)

**ஆடி :** கூப்பிட்டிங்களா .... எசமான் ..

**உல :** ம் .. ஆமா .. உட்காருங்க .. வெற்றிலே போட்டுக் கங்க..

**ஆடி :** (மகிழ்ச்சியுடன் கோணியபடி) என்னங்க....இது.... புதுசா....

**உல :** சும்மா போட்டுக் குங்க....

**ஆடி :** அடெ நம்பவீட்டிலேயும் சமத்துவம், உரிமை எல்லாம் வந்திருச்சே ... ம் ...

(நாணிக்கோணி மகிழ்ச்சியுடன் உலகப்பருக்கு அருகில் நாற்காலியில் அமருதல்)

**உல :** அடச்சீ....எழுந்திருடா முண்டம்....

**ஆடி :** என்னங்க... குடுத்த உரிமையே ஒரு நிமிசத்திலே ஒரு அதட்டிலே பறிச்சிட்டீங்க ....

**உல :** போடான்னு . .. போய் வேலையைப்பார்ப்பானு...

**ஆடி :** நீங்கதானே கூப்பிட்டீங்க...

**உல :** நான் தான் கூப்பிட்டேனு... வந்து என்னன்னு கேட்கிறது..

**ஆடி :** அதானே கேட்டேன்... நீங்கதான் உட்காருன்னீங்க

**உல :** அதுக்காக என் தலைமேலே உட்கார்றது தானே .. எங்கேடா அவரு...

**ஆடி :** சின்ன எசமான் தானே...

**உல :** இப்பவே எசமான் ஆயிட்டாரா...

**ஆடி :** ஆமாங்க, பாதிச்சாவி அவருவச்சிருக்காருல்ல .. அதினுலேதான் (உலகப்பர் உறுத்துப்பார்ப்பது கண்டு) அவரு நிலத்தை விலை பேசப் போயிட்டாருங்க..

**உல :** நிலத்தையா ... ?

**ஆடி :** ஆமாங்க..அவரு அன்னிக்குப் பட்டணத்திலே யிருந்து வந்ததிலே யிருந்து அப்படித்தானே கூடிக் கூடிப் பேசுருரு...

**உல :** ஏண்டா எங்கிட்டே முன்னுலே சொல்லலை... உன்னைத் தொலைச்சுப்பிடுறேன் பாரு....

**ஆடி :** இது என்னங்க வம்பாப்போச்சு..உங்களுக்கிட்டே சொன்னு அவரு தொலைக்கிறேங்கிருரு, சொல்லாட்டி நீங்க தொலைக்கிறேன்ங்கிறீங்க...என்னுலே இதுக்கு மேலே முடியாது .. நான் இந்த வேலையைத் தொலைத்து விட்டுப் போறேன் .. வயலிலே மாடா உழைச்சாலாவாது அரை வயிற்றுக்கஞ்சி மரியாதையாக் கிடைக்கும்..

**உல :** உனக்கும் கொழுத்துப்போச்சுடா..எல்லாம் என் காலம் ! (சாந்தமாக) ஏன்டா ஆடியபாதம் ஊருக்குள்ளே என்னமாவது பேசுருங்களாடா...

**ஆடி :** ஓ... நம்பளைப்பத்திப் பேசாத நாளெதுங்க..நீங்க கஞ்சத்தனம் பண்ணித்தான் சின்னவரு இப்படிச் சீரழிக்கிருருன்னு எளனமாகப் பேசுருங்க...

**உல :** அதில்லேடா...அந்தக்கருணகரம் பிள்ளை செத்ததைப் பத்தி..

**ஆடி :** அது அவராச் சாகலேங்க...எந்தப்பாவியோ அவரைக் கொன்னுட்டானுங்க...அயோக்கியப்பயலுக....அந்த நல்ல மனுசனைப் போயிக் கொலே பண்ணிப்பிட்டானுங்களே அவனுகளுக்கு எந்தமாதிரிச் சாவு வரப் போகுதோ....

**உல :** சரி..சரி..நீ உள்ளே போய் வேலையைப் பாரு ..

**ஆடி :** வேலையைப் பார்க்கலாம்ல .. இல்லே உங்களுக்குப் பிடிக்கலேயின்னு விட்டுடுங்க ..

**உல :** போடான்னு

(ஆடியாபதம் உள்ளே போதல்)

**உல :** (தனக்குள்) என்ன காலத்துக்குத்தான் இப்படி ஆடுருனுகளோ .. பார்வதீசா .. பரந்தாமா .. பாவவிஞசா .. பக்தரட்சகா ..

(பலவேசப் பண்டிதர் வருதல்)

**உல :** வாய்யா... வா .. என்ன சமாசாரம்..

**பல :** சமாசாரம் இருந்தாத்தானு இந்தப்பலவேசம் வரணும் .. அதுவும் தவிர மிராசுதார் வீட்டிலே விசேஷம் இல்லாத நாளுதான் ஏது ...

**உல :** அதுக்கெல்லாம் குறைச்சல் இல்லே .. விடிஞ்சு எழுந்தா ஒரு நாள் போவது ஒரு யுகம்போல இருக்கிறது. பிள்ளையாரைப் பிடிச்சசனியன் அரசமரத்தையும் பிடிச்சமாதிரி மூத்தவன் போன மாதிரியே சின்னவனும் போயிருவான் போலிருக்கு .. இவன் அக்கிரமம் தாங்க முடியலே...

**பல :** ஆமாங்க .. மூத்த தம்பியாவது மரியாதையா பண்ணே கிண்ணே வச்சுக்கிட்டு...

**உல :** ஆமா பெத்த அப்பனுக்கு எதிராகப் போட்டி போடுகிறதுதான் மரியாதையோ.

**பல :** அதில்லேங்க..அதாவது பரவாயில்லே .. சின்னத் தம்பி ஏதோ சினிமாப்படம் எடுக்குருருன்னு ..

**உல :** அவன் சினிமாப்படமா பிடிக்கிருன் .. அவனுக்குச் சரியாச் சனியன் பிடிச்சிருக்குய்யா ... ஒருத்தனலே

யாவது எனக்கு ஒரு துளி நிம்மதி இல்லே..வளர்த்த கடாய் மார்பிலே பாயுது...

**பல :** இந்தாப்பாருங்க .. முதலியார்வாள். உலகத்திலே சொல்லு வாங்க .. "செருப்பின் அருமை வெயிலில் தெரியும், நெருப்பின் அருமை குளிரில் தெரியும்னு"..

**உல :** அப்பன் அருமை செத்தால் தெரியும் .. என்னே அப்படிச் சாகடிச்சாலும் பரவாயில்லேயே பலவேசப் பண்டாரம் ...

**பல :** அப்படியெல்லாம் ஒண்ணும் வருத்தப்படாதீங்க .. சின்னவரு இப்ப வந்திருக்காரா ...

**உல :** வந்துமட்டுமா இருக்கான் .. இரண்டு லெட்ச ரூபாய் கொடுன்னு ஒரேயடியா நிற்கிருன்...

**பல :** இரண்டு லட்சமா... ?

**உல :** ஆமா .. என்ன செய்யிறது .. பார்வதீசா ..

**பல :** வேறே என்னங்க செய்யுறது .. கேட்கிறதைக் கொடுத்துவிட்டுக் காசி ராமேஸ்வரம்னு போவதை விட்டு..

**உல :** இவ்வளவு சம்பாதிச்சதையெல்லாம் விட்டுப்பிட்டு அனுதையாகப் போயிச் சாக என் மனசு இடம் தரலியே பண்டாரம்...

**பல :** செத்தா இந்தச் சொத்தாங்க கூட வரப்போகுது..

**உல :** அதெல்லாம் இல்லாதவன் சொல்ற வேதாந்தம்ல..

**பல :** அந்தாத் தம்பி வர்ருருங்க.. நான் போறேன்.

**உல :** இருய்யா....நீயும் போயிடாதே....இரண்டு நாளா பயல் ஒரு மாதிரியா இருக்கிருன்....எக்குத்தப்பா எல்லாம் நடக்க ஆரம்பிச்சுட்டான்....எள்ளும் தண்ணியும் இறைக்கவாவது ஒரு பிள்ளே வேணு மேன்னுதான் பொறுமைப் பொறுத்துக்கிட்டே யிருக்கிறேன்.

**பல :** அதெல்லாம் சீக்கிரம் இறைச்சிடுவாங்க ....நல்ல பிள்ளைகள்தான்.

(செல்லத்துரை வேகமாக வருதல்).

**உல :** என்னடா எதிரே வந்து முறைச்சுப் பாக்கறே....

**செல் :** அப்பா....கடைசி முறையாகக் கேட்க வந்திருக் கிறேன்....

**உல :** பெட்டிச் சாவிதானே....அது இந்த உலகப்ப முதலி யாரு உயிரோடே இருக்கிற வரைக்கும் நடக்காது.

**செல் :** அப்பா நான் கேட்பது இரண்டு லட்சம். குபேர செல்வத்தைக் கொட்ட வைக்கத் தேவையான இரண்டே லட்சம்.

**உல :** வேண்டாம்.. வேண்டாம்....குப்பை மேடாகாமல் இருந்தாலே போதும்....குபேரச் செல்வமும் வேண் டாம்....குட்டிச்சுவரும் வேண்டாம்.

**செல் :** அப்பா நீங்கள் ஆடி ஓய்ந்த பம்பரம். ஆடிக் காற்றி றிலே உதிர வேண்டிய சருகு....புதையல் காத்த பூதமாகி என்னைப் பலியாக்காதீர்கள் அப்பா.

**உல :** என்னடா மிரட்டுறே....ஆறு போறதே போக்கு அரசன் சொல்றதே தீர்ப்புன்னு உருட்டுறே.... துள்ளாதேடா துள்ளாதே.

**செல் :** அப்பா....கடைசி முறையாகக் கேட்கிறேன்.

**உல :** எத்தனை முறை கேட்டாலும் எதுவும் நடக்காது.... நீயும் வேணும்னு உன் அண்ணனைப் போல வெளியே போயிடு. எனக்குப் பிள்ளையே பிறக்கலேன்னு நினைச்சுட்டுப் போறேன்....

**செல் :** அதுதானே அப்பா உங்கள் முடிவு.

**உல :** முடிவு என்ன முடிவு....பணம் கிடையாது அவ்வ ளவு தான்

(செல்லத்துரை வேகமாக உள்ளே போகிறுன்)

**பல :** இதென்னங்க....தம்பியும் வம்பு பண்ருரு....

**உல :** இதுக்கெல்லாம் நானு மசிவேன்....பண்டாரம் நாளைக்கே நம்ப வக்கீலைக் கூட்டியாங்க....நான் ஒரு மாதிரியா எல்லாத்தையும் தீர்த்துப்பிடறேன்.

**பல :** அப்ப....என்னேயும் கொஞ்சம் பெரிய **மனசு** பண்ணி மிராசுதார்வாள் கவனிக்கணும்....

**உல :** ம்....ம்....ம்....

(பலவேசம் போதல்.)

பார்வதீசா....பரந்தாமா....

(திரை)

# களம் 5

## காசி 1

**இடம் :** தெரு.

**மாந்தர் :** கண்ணுயிரம், செல்லத்துரை.

(கண்ணுயிரம் முக்காடிட்டபடி பய உணர்ச்சி யுடன் போய்க்கொண்டிருத்தல்)

**செல் :** (திரைக்குள்) ஒய்....முக்காடு....முக்காடு உங்களைத் தான்யா.... (கண்ணுயிரம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தல்)

**செல் :** என்னய்யா....கூப்பிடக் கூப்பிடப் போய்க்கொண்டே யிருக்கிருய்....

**கண் :** யாரு....நீங்கதாணு....நான் யாரோன்னு நினைச் சுப் பயந்துட்டேன்.

**செல் :** யாரா இருந்தாத்தான் உனக்கென்னய்யா....நீ ஏன்யா பயப்படணும்....என்யா எல்லாம் எப்படி இருக்கு....

**கண் :** (திடுக்கிட்டு) ம்....எது....எனக்கு ஒன்றும் தெரி யாதே....எது எப்படி இருக்குங்க ?....

**செல் :** அதான்யா....எனக்கிட்டே ஏமாத்தப் பார்க்கிறியே.. எங்கப்பாவும் நீயும் சேர்ந்து செய்ததெல்லாம் எனக்குக் கூடத் தெரியாதுன்னு நினைக்கிறியா....

**கண் :** ஐயையோ....நீங்க எதையோ கேட்டுப்பிட்டுல்லே

பேசுறீங்க....நான் பிள்ளை குட்டிக்காரனுங்க.... நாணு ஒன்னும் செய்யலிங்க....

**செல் :** அப்பா சொல்லித்தான் செய்தாயோ....

**கண் :** ஆமாங்க ! தம்பி நீங்க கூடச் சந்தேகப்படுறீங்களே..

**செல் :** சந்தேகப்படருப்பிலே தானய்யா இருக்கு..ஏய்யா ....இரும்புப் பெட்டியிலே இருப்பு எப்படி இருக்கு.

**கண் :** என் கிட்டே ஏதுங்க இரும்புப் பெட்டியும் தகர டப்பியும்.

**செல் :** உன்கிட்டே இல்லேய்யா....அப்பா கிட்டே....

**கண் :** (சமாளித்துக்கொண்டு) ஓ....அதுவா....ஏதுங்க இப்பப் பணம். இரும்புப் பெட்டி ஓலைப் பெட்டி ஆகிப் பே ச்சு. ஒரு நாளைக்கு ஆயிரம் ஆயிரமா இந்தக் கண்ணுயிரம் கையிலே புரண்டதெல்லாம் போச்சு.. நல்லப்பன் போனப்புறம் கால்வாசி இறங்குச்சு. நீங்க சினிமாக் கம்பெனி ஆரம்பிச்சப்புறம் எல்லாம் கோடை காலத்துக் குளமா வறண்டு போச்சுங்க....

**செல் :** என்னய்யா கதை விடுறே எனக்கு எல்லாம் தெரியும் ....இந்தாப்பாரு எனக்கு இன்னிக்கு ராத்திரியே இரண்டு லட்சம் வேணும்....

**கண் :** ரெண்டு லட்சமா !

**செல் :** ஆமா....அந்தப் பணத்தோடே நம்ப "ஆகாச கோட்டை" ங்கற படமும் வெளியாயிடும். இந்தாப் பாருங்க கணக்குப் பிள்ளை உங்களையும் ஸ்டுடியோ விலே ஒரு அக்கௌண்டன்டாகப் போட்டுவிடுகிறேன். இந்தப் பண்ணை விவகாரத்துக்கே ஒரு முழுக்குப் போட்டு வந்துடலாம். எனக்கு இரண்டு லட்சம் மட்டும் கிடைக்க வழி சொல்லுங்க.

**கண் :** நீங்க சொல்றதும் நியாயமாத்தான் தெரியுது. உங்க அப்பா என் இன்னும் லவா, லவான்னு திரியணும். முக்கால்வாசி நிலத்தை நேத்துத்தான் இரயம் பண்ணி மூணு லட்சம் ரூபாயை அந்த மூலைப் பெட்டிக் குள்ளே வச்சிருக்காரு....நீங்க....

**செல் :** மூலைப் பெட்டிக்குள்ளேதானே! அதெல்லாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நாளைக்குக் காலையிலே நீங்க பட்டணத்துக்குப் புறப்படத் தயாராயிருங்க.... இன்னிக்கு ராத்திரி இரண்டு மணிக்கெல்லாம் மூணு லட்சம் என் கையிலே புரளும்....வரட்டுமா....

**கண் :** செய்யுங்க....தம்பி....செய்யுங்க....என்னை மட்டும் காட்டிக் கொடுத்துப்பிடாதீங்க....(செல்லத்துரை போக)....

**கண் :** (தனக்குள்) மூணு லட்சம் இந்த முட்டாள் பயல் கையிலே புரளும்....நாளெல்லாம் கை வலிக்கக் கணக்கெழுதி ரூபாய் ரூபாயாகச் சேர்த்துக்கொடுத்தவன் நானிருக்க, பணக்காரனுக்குப் பிள்ளையாகப் பிறந்த ஒரே அநியாயத்துக்காக மூணு லட்சம் இவன் கையிலே புரளுமாம்....ம்....கண்ணாயிரம் இனி மேலும் தூங்கமாட்டான்....ராத்திரி இரண்டு மணிக்கு முன்னாலே அந்த மூணு லட்சமும் என் கையிலே புரளாட்டி நான் கண்ணாயிரம் இல்லே. ஆமா....ம்....

(போதல்)

(திரை)

# களம் 5

## காட்சி 2

**இடம் :** கருணாகரர் வீடு.

**மாந்தர் :** நல்லப்பர், காவேரி, பாண்டியன்.

(ஒரு புறத்தில் பாண்டியன் சோர்வாயிருக்க, காவேரி அழுது கொண்டிருக்கிறாள்—காவேரியைப் பார்த்தபடி நல்லப்பன் மௌனமாக நிற்கிறான்.)

**நல் :** வருத்தப்படாதே பாண்டியன்....அன்பே உருவான தந்தையை அநியாயமாகப் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கும் உங்களுடைய துன்பங்களை எல்லாம் என்னுடைய துன்பங்களாக ஏற்றுக்கொள்ளுகிறேன்.

**பாண் :** என்னைக் கொன்றிருக்கலாமே அவர்கள்....நீ எங்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகுவது என்னைச் செயலற்றவனாக்குகிறது. இல்லாவிட்டால்

உலகப்பர் என்றோ ஒழிந்திருப்பார். நானே ஒழித்திருப்பேன். ஒரு பாவமும் அறியாத என் தந்தை முதற் கொலையாயிருக்கமாட்டார். ஒருவரையும் வாழ விடாத உன் தந்தை முதலில் பழி வாங்கப்பட்டிருப்பார்....

**நல் :** பாண்டியன்....வருத்தத்தின் எல்லையில் உன்னை மறந்து கொட்டுகிறாய். நீயே முடிவு செய்து பொங்குகிறாய். இந்த அக்கிரமச் செயலைச் செய்தது யார் என்று கண்டுபிடித்துச் சட்டம் தண்டிக்காமலா விடப் போகிறது....

**பாண் :** ஆமாம்....சட்டம்....! சமூகம் ஒரு விசித்திரமான வேதனைக் கூண்டு. அதில் ஏழைகள் தான் இயலாதவர்களாகக் கைதிகளாகிறார்கள். அவர்களை கண்டிக்கவும் தண்டிக்கவும் பணம் நீதிபதியாகிறது. சட்டம் பக்கத் துணை செய்கிறது.

**நல் :** பாண்டியன்....நீ எல்லாம் தெரிந்தவன்...... நீயே இப்படி இருந்தால் உலகமறியாத காவேரியின் நிலை என்ன ஆவது !

(காவேரி விக்கி அழுகிறாள்.)

**பாண் :** ஆம்....காவேரியின் நிலை என்ன ஆவது என்பதற்காகத்தான் இதுவரை பொறுத்திருந்தேன். இல்லையென்றால் என் தந்தையைப் பிணமாகக் கண்ட மறு கணமே பல உடல்கள் மண்ணில் உருண்டிருக்கும்.

**நல் :** பாண்டியன்....

**பாண் :** நல்லப்பன்....இது என்னுடைய கடைசி வேண்டுகோள்....ஒரே விண்ணப்பம். என் தந்தையின் விருப்பமும் அதுதான். இனிக் காவேரி உன்னுடையவள். வாழ்விலும் தாழ்விலும் அவள் உனக்கே உரியவள். எனக்கு அந்த உறுதியைக் கொடு......

(காவேரி எழுந்து வந்து)

**கா :** அண்ணா....

**பா :** நல்லப்பன்....உலகப்ப முதலியாரை அதுதான் உன் அருமைத் தந்தையாரை, இதுவரை வலை பின்னத் தெரியாத சிலந்தி என்றுதான் கருதினேன். ஆனால் அப்படி இல்லை ! அவர் செய்த கொடுமைக்கு

என் தந்தை பலியானுர். ஒரு பாவமும் செய்யாதவர் பிணமானுர். அந்தக் கொடுமைக்கு நீதி தேட நான் புறப்படு முன்னர் என்னுடைய இந்தக் கடமையை முடிக்க உன்னைப் பணிவோடு வேண்டுகிறேன்.

(காவேரியின் கரத்தைப் பற்றியபடி)

**பர :** காவேரி ! இந்த அபாக்கிய அண்ணனை, எதுவும் செய்ய முடியாத கோழையை மன்னித்துவிடம்மா..

**கா :** என்ன அண்ணு இது....நீங்கள் பேசுவதே விளங்க வில்லை....

**நல் :** பாண்டியன் ஏன் விபரீதமாகப் பேசுகிருய்....நான் உன்னைக் காட்டிலும் இக்கட்டான நிலையில் இருக் கிறேன்....கொலை செய்யப்பட்டவர் உன் தந்தை. கொலை செய்யத் தூண்டியது என் தந்தையாக இருக்கலாம் என நீ சந்தேகிக்கிருய்....

**பா :** சந்தேகம் மட்டும் இல்லை..நடந்ததும் அப்படித்தான் என்பதை விரைவில் நிரூபிக்கிறேன்..நான் வரு றேன். இனிக் காவேரி உன்னுடையவள். நான் போகிறேனம்மா..

**கா :** எங்கே அண்ணு..

**பா :** அப்பாவின் ஆத்மாவிற்குச் சாந்தி தேடம்மா..சாந்தி தேட..

(போய் விடுதல்)

**கா :** அண்ணு..(விக்குதல்)

**நல் :** பாண்டியன்..!

(சற்று அமைதி)

**கா :** ஏற்கெனவே தெறித்துப் போயிருந்த கண்ணுடி திரும்பவும் சுக்கல் சுக்கலாகி விட்டதே. அண்ணுவின் மனம் அலை மோதிக்கொந்தளிக்கிறதே.

**நல் :** கலங்காதே காவேரி..பளிங்கு மா மண்டபம் போலத் தோன்றியது திடீரெனப் பனிக்கட்டிப் போலக் கரைந்துவிட்டது. நமது காதலை என் தந்தை வெறுத் தார் ; உன் தந்தை போற்றிஞர்..இரு பெரியவர் களின் ஆசி பெற முடியாத அபாக்கியர்களைப் பாண்டி யன் மனமாரப் போற்றிப் போய்விட்டான்..

**கா :** அண்ணன் கோபமாக எங்கே போகிருர்? ஏதேனும் விபரீதம் நடக்குமோ என்று பயமாக இருக்கிறது.

**நல் :** பாண்டியன் என் தகப்பனுரிடம்தான் போயிருப்பான். அவன் மட்டும் என்ன ? நானே சென்று அவரைக் கேட்டு வருகிறேன். ஊரெல்லாம் பழிக்கும்படி அநியாயக்காரரின் மகனுக, உணர்ச்சியற்ற மரமாக எத்தனை நாளைக்குத்தான் அடங்கி வாழ்வது? இரு காவேரி..இதோ வருகிறேன்..

**கா :** நீங்களும் எங்கே போகிறீர்கள்?

**நல் :** என் தகப்பனுரிடம் தான்..இரண்டிலொன்று கேட்டு வருகிறேன்..(போகிருன்)

**கா :** நீங்களுமா உணர்ச்சி வசப்பட்டு விட்டீர்கள்..கடவுளே! அப்பா . . . . .

(திரை)

# களம் 5

## காட்சி 3

**இடம் :** தெரு.

**மாந்தர் :** கிராமவாசிகள் முனுசாமி, சங்கிலி, ராமசாமி.

(கிராமவாசிகள் பேசி வருதல்.)

**சங் :** விஷயம் தெரியுமில்ல..கருணுகரம் பிள்ளையைக் கொன்னது உலீகப்பரு வீட்டு ஆளுகள் தாணும்.

**ராம :** அப்படியா..யாரு சொன்ன.

**சங் :** யாரு சொல்லணும்..அவராத்தான் இருக்க முடியும்..பணவெறி பத்தும் பண்ணும் இல்லேயா..அதிலேயும் அந்த மனுசனுக்கு வெறி உச்சந்தலேக்கு ஏறிப்போச்சு..

**ராம :** என்னே..அந்த நல்ல மனுசனைப் போயிக் கொல்லணும்.

**சங் :** அதான் நான் அன்னிக்கே புடிச்சுச் சொல்றேன்ல.. அது எங்க பாண்டியரு உயிருக்கு வைச்ச உலே.. அது தவறி இந்த மனுசனைத் தீர்த்துப் பிடிச்சு..

**ராம :** அட..உங்க பாண்டியருக்கு எதிரி இந்த உலகப்பர் மட்டும் தாளு..அவரு கொள்கையை ஏத்துக்காத அத்தனே பேரும் தனக்கு எதிரின்னு தானே உங்க பாண்டியர் நினைப்பாரு..எவனுக்காவது என்னமாவது இடைஞ்சல் பண்ணிக்கிட்டேயிருந்தால் அவனும் எத்தனை நாளைக்குத்தான் பொறுப்பான்..ஆத்திரம் பொறுக்காமெப் பதம் பார்க்க வந்திருப்பான். அது கொலையிலே முடிஞ்சிருக்கு..

**சங் :** நீ பேசுவதைப் பார்த்தால் உங்க ஆசாமிதான் திட்டம் போட்டுத் தீர்த்துப்பிட்டாரோ..

**ராம :** யாரைச் சொல்லுறே ?

**சங் :** உங்க குரு நல்லப்பருதான்..!

**ராம :** இந்தப்பாரு..அவரை நாக்கு மேலே பல்லைப் போட்டுச் சொன்னே உன் நாக்குத் துண்டாயிடும் ஆமா.... அவரு அந்தக் காவேரியைக் கல்யாணம் கட்டிக்கணும்னு வேறே இருந்தாரு..அவரா தனக்கு வரப்போற மாமனாரைக் கொலை செஞ்சிருக்கப் போறாரு..உங்க புத்தி எல்லாத்திலேயும் வக்கிரமத்தான் போகும் போலிருக்கு..

**சங் :** அங்கேதான் விஷயம் இருக்குண்ணேன்..உன் டம் என் இதெல்லாம் பேசித் தொண்டையைப் புண்ணுக்கிக்கோணும்..ம்..மணி பத்தாச்சு..என்ன இந்நேரத்திலே

**ராம :** இப்பத்தான் எங்க பாடம் முடிஞ்சது..

**சங் :** ஓ..உங்க முதியோர் கல்வியா..எப்படி இருக்கு....

**ராம :** இப்ப ரொம்பப் பேர் வருகிறார்களே..ஒவ்வொரு நாளும் சினிமாப்படமெல்லாம் காட்டிப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாங்க ; தினம் காரிலே வைத்துப் புத்தகமெல்லாம் கொண்டாந்து ஊர் ஊராத் தந்து போறாங்க..

**சங் :** எய்யா..ஒரு பயலுக்கும் வீட்டுக் கவலையே கிடையாதோ ?

சங் : எல்லாம் முதியோர் கல்வி கற்றுத்தான் உத்தியோகம் பார்க்கப் போறுங்களோ..எல்லாம் மாடோட்டப் போற பயலுக..படிப்பாம் படிப்பு..

ராம : அதெல்லாம் நீங்க திட்டம் போடுற காலத்திலே வேண்டாம்னு நீக்கிப் பிடுங்க. கட்டை விரலைக் காட்டிக் கீரல் போடும் பிழைப்பை மாத்திப் பென்சில் பிடித் தாச்சியும் எழுதக் கற்றுக்கொண்டோமே அது போதும்..

சங் : மகாத் திட்டம் போட்டுட்டீங்க..

ராம : அஞ்சு வருஷத்துக்கு முன்னுலே முதல் திட்டம் போட்ட போதும் அப்படித்தான் சொன்னீங்க.. உருப்படாதுன்னு சாபங்கூடப் போட்டீங்க..அது அபார மாக முடிஞ்சது..இப்ப இரண்டாவது திட்டங் கூட வந்தாச்சு..

சங் : அந்தா முனுசாமி கூட வந்தாச்சு..ரெண்டு பேரும் சேர்ந்துக்கிட்டுப் பேசுங்க.. கேட்கிறேன்....

(முனுசாமி ஓடி வருதல்)

முனி : உங்களை நான் எங்கெல்லாம் தேடுறது..நீங்க இங்கே தான் நிக்கிறீங்களா..

சங் : என்ன சேதி !

முனி : கருணுகரம் பிள்ளையைக் கொன்னது உலகப்பரு வீட்டு ஆளுத் தான்னு பாண்டியருக்குத் தெரிஞ்சு போயி அவரைத் தீர்த்துக் கட்டப் போயிட்டாராம். அவருக்குப் பின்னுலே நம்ப நல்லப்பரும் போறுராம் ....அந்தப் பொண்ணு காவேரி..அழுதுக்கிட்டே இருக் குங்க.. நம்பளையும் போகச் சொல்லுதுங்க....

சங் : பார்த்தியாய்யா..உலகப்பரு பிரதாபத்தை..

ராம : (தலையை அசைத்தல்)

முனி : வாங்கவாங்க..நாம்பளும் போவோம்.. ராத்திரி நேரம் பார்த்து வாங்க..

(திரை)

# களம் 5

## காட்சி 4

**இடம் :** உலகப்பர் வீடு..

**மாந்தர் :** உலகப்பர், ஆடியபாதம், பாண்டியன், நல்லப்பன், செல்லத்துரை, கண் ஞயிரம், கிராம வாசிகள்.

(விளக்குச் சிறிதாக எரிகிறது..உலகப்பர் உலாவியபடி தனக்குள் பேசிக்கொண்டிருக்கிருர்..ஒரு மூலேயில் உட்கார்ந்து ஆடியபாதம் தூங்கி விழுகிருன்.)

**உல :** "மண்ணிற் பாவம் செய்யாத மனிதர்
ஒருவர் உண்டோ சொல்
மண்ணிற் பாவம் செய்யாது
வாழும் வாழ்க்கை எளிதோ சொல்!"

(நிறுத்தி) பாவம் செய்யாது வாழும் வாழ்க்கை எளிதோ சொல்....எளிதோ சொல்!

நான் செய்தது பாவமா? எப்படிப் பாவமாகும், நாஞ கொன்றேன் ? எவஞே கொன்ருன்..என்னேக் கொல்ல வந்த புலிக்கும் கொட்ட வந்த தேளுக்கும் இரக்கம் காட்டிஞல் பாவம் இல்லேயாக்கும். நல்ல பாவம்..நல்ல நியாயம்..ம்..நான் யாருக்காக இந்தப் பாடுபட்டுப் பணத்தைச் சேர்த்தேன். என் சந்ததி வாழ்வதற்குத் தானே! என் பிள்ளேகள் தீட்டின மரத்திலே பதம் பார்க்கலாம், என்னிடம் கடன் வாங்கி என் காலுக்குச் செருப்பாய்க் கிடந்தவன் சம்பந்தியாகி விடலாம், பண்ணேக்காரப் பயலுகள் எல்லாம் பட்டத்து ராசாக்கள் போலத் துள்ளலாம்..இதையெல்லாம் ஏனென்று கேட்டால் பாவம். எனக்கொரு நியாயம், ஊருக்கொரு நியாயம்..பரந்தாமா..பார்வதீசா..(கொட்டாவி விட்டபடி ..(எல்லாம் உனக்கே வெளிச்சம்....! டேய் ஆடிய பாதம்..ஆடிய பாதம்..

(தூங்கி விழும் ஆடியபாதத்தின் அருகில் சென்று)

**உல :** டேய்..ஆடியபாதம்!

(ஆடிய பாதம் தூக்கத்தில் உளருகிருன்)

**ஆடி :** எங்க எசமானரு—காசுன்ஞ பிசாசுதான்..வெறும் வறட்டு எலும்பைக் கண்ட நாய் மாதிரி தான்.. பிள்ளையாவது குட்டியாவது..கொதறிப்புடுவாரு.. கொதறி..

**உல :** டேய் தடிப்பயலே..(கம்பால் அடித்து எழுப்புதல்)

**ஆடி :** (விழித்துக்கொண்டு) என்னங்க..எவஞே உங்களைப் பற்றிக் கேட்டான். நான் நல்லாத்தாங்க சொன்னேன்..

**உல :** நீ நல்லாச் சொன்னதை நான் கேட்டுக்கிட்டுத் தானே இருந்தேன். வரும்டா..வரும். டேய் எத்தனை நாளாடா இப்படி நீயும் ஆரம்பிச்சிருக்கே..

**ஆடி :** (தூக்கக் கலக்கத்தில்) அது ரொம்ப நாளாச்சுங்க..

**உல :** ரொம்ப நாளாச்சா..அட நன்றி கெட்ட நாயே (கம்பால் அவனது நொண்டிக்காலில் அடித்தல்)

**ஆடி :** ஐயோ..ஐயோ..அது நொண்டிக்காலு அதிலே அடிக்காதீங்க (இன்ஞெரு காலில் அடித்தல்) ஐயையோ..இது நல்ல காலு இதையும் ஒடிச்சிராதீங்க.. (மேலும் அடித்தல்) அடிக்காதீங்க..நான் இப்பவே போயிடுறேன்..உங்க வீட்டிலே வேலை செஞ்சு ஒரு ஒரு சொட்டா ரெத்தம் வத்திப் போச்சு..இருக்கிற எலும்பையும் கழட்டிப்பிடாதீங்க..நான் வர்றேன்.. (போதல்)

**உல :** எங்கேடா போறே..போடா உள்ளே..

**ஆடி :** சும்மா மிரட்டாதீங்க..பெரிய மனுஷன் ஆச்சேன்னு இதுவரை மரியாதை குடுத்தேன்..இனிமேல் கை நீட்டிஞ மருவாதி தப்பிரும் ஆமா..

**உல :** அடெ..வாய் கொழுத்துப் போச்சா..வரும்டா வரும் ..(பிரம்பை ஓங்குதல்)

**ஆடி :** சும்மா நிறுத்துங்க..உங்க அக்கிரமத்தையெல்லாம் பார்த்துக்கிட்டு இந்த மானங்கெட்ட வயித்தை வளர்க்கிறதுக்கு போயிச் சாகலாம்..

உல : இப்பத்தான் புத்தி வந்துச்சோ..

ஆடி : புத்தி அப்பவே வந்திருச்சு..போறதுக்குக் காலம்தான் இப்ப வந்துச்சு. உங்களுக்கும் நமக்கும் இதோடே சரி..நான் போறேன் (உள்ளே போதல்)

உல : போறேன்னு எங்கேடா உள்ளே போறே..

ஆடி : என் துணி மணியை எடுக்கத்தான்..

உல : துணியாவது மணியாவது..போடா அறுதைப் பயலே..

ஆடி : நீங்க அதுக்கும் வக்கில்லாத ஆளு ஆச்சே..வச்சுக் குங்க..வச்சுக்குங்க..நான் போறேன்..

(போதல்)

உல : போ..போ..எங்கே சுத்தியும் ரெங்கனைச் சேவிக்கத் தான் வரணும்..ம்..இந்த வேலைக்காரப் பயலுகளு க்கு வந்திருக்கிற ஆணவமும் திமிரும்..அட ஆண் டவா..உலகத்தையும் படைச்சு இப்படி உபத்திரவத் தையும் ஏனப்பா படைத்தாய்..பார்வதீசா..பரந் தாமா..

(விளக்கை அணைத்துப் படுத்தல்)

[சற்று நேரம் கழித்து முக்காடிட்ட உருவமொன்று புகுந்து மெதுவாகத் தலையணைக்கடியில் இருந்து சாவிக்கொத்தை எடுத்து, மூலையில் இருந்த அலமாரியைத் திறந்து பணத்தை எடுத்துத் திரும்பும் பொழுது..ஏதோ உருண்ட சத்தம் கேட்டு முதலியார் விழித்துக் கொள்ளுகிறார். உருவம் பதுங்கி விடுகிறது. பணப் பெட்டி திறந்து கிடப்பதைக் கண்ட முதலியார்] "ஆ..பணப்பெட்டி..போச்சே..போச்சே..டேய் ஆடிய பாதம்..ஆடியபாதம்" எனக் கூக்குரலிடுகிறார். அப்பொழுது மறைந்திருந்த உருவம் கழியால் ஓங்கி அவர் தலையில் அடித்து விட்டுக் கம்பைப் போட்டு ஓடி விடுகிறது. முதலியார் "ஐயோ..அப்பா" என அலறி வீழ்கிறார்..

(சற்று நேரம் விளக்கணைத்து)

சிறிது ஒளி..பாண்டியன் நுழைகிறான்..கோபக் கனலாகக் கொதித்து வந்திருக்கிறான்.. முதலியார்

இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டு திகைக்கிறுன்..பக்கத்தில் கிடக்கும் கழியைக் கையில் எடுக்கிறுன்..பணப் பெட்டி திறந்து கிடப்பதையும் காணுகிறுன்..)

**பா :** ம்..முதலியார் போய்விட்டார். என்னை விடக் கொடுமைக்கு ஆட்பட்டவன் எவனே முந்திக்கொண்டான்.. முதலியாரைப் பழிவாங்க நான் பிந்தி விட்டேன்..ம்..உலகப்ப முதலியாரே..எந்தப் பணத்துக்காக இந்தப் பாடுபட்டீரோ அந்தப் பணப்பேராசையே உம்மைப் பழி வாங்கி விட்டது, இரத்தத்திற்கு இரத்தம் பெருக்கெடுக்கச் செய்து விட்டது..வெற்றி.. வெற்றி..

(நல்லப்பன் நுழைகிறுன்..கையில் **கழி**யுடன்) நிற்கும் பாண்டியனையும், இரத்த வெள்ளத்தில் கிடக்கும் உலகப்பரையும் காணுகிறுன்..“அப்பா.. அப்பா” என முதலியார் உடலைப் புரட்டுகிறுன்..)

**நல் :** என்ன இது பாண்டியன்..இதுதானு நியாயம்! ..கோழியைக் அடிக்கத் குறுந்தடியா வேண்டும்! கொன்று விட்டாயே.. கொன்று போட்டுத்தானு நியாயத்தை நிலை நாட்ட வேண்டும்? உனக்கு இரத்த வெறியா பிடித்துவிட்டது?

**பா :** எனக்கல்ல நல்லப்பன்..உலகம் புகழும் உன் தந்தை உலகப்பரைக் கேள் சொல்லுவார்..வினை விதைத்தவராயிற்றே. அதனுல் தான் வீழ்ந்து கிடக்கிறுர்.. அவரைக் கேள்....

**நல் :** போதும் விளையாட்டு..உன் தகப்பனுரை என் தந்தை யார் தான் கொன்றிருக்க வேண்டும் என்ற வீண் சந்தேகத்தால் சண்டாளத்தனமே செய்து விட்டாய்.. என் தந்தையின் கொடுமைகளை நானும் அறிவேன்.. காலப் போக்கறிந்து திருந்துவார் என விலகியிருந்தேன்..ஆனுல் நீ ஆண்டு முழுவதும் அவரோடு போராடினுய்..கடைசியில் அவர் உயிரையும் போராடித் தீர்த்துவிட்டாய்..

**பா :** (திகைப்புடன்) என்ன..தீர்த்து விட்டேனு? நன்ருயிருக்கிறது! இன்னும் கொஞ்சம் நேரம் போனுல்

நான் தான் கொன்றேன் என்று சாட்சியே சொல்லி விடுவாய் போலிருக்கிறதே..

**நல் :** என்னப்பா..செய்ததும் செய்து விட்டு என்னிடமே மறுக்கிருயா..

**பா :** மறுக்கவில்லை..வருந்துகிறேன். இந்த நல்ல செயலை செய்ய எனக்குக் கொடுத்து வைக்க வில்லையே என்று வேதனைப் படுகிறேன், விம்முகிறேன்..

**நல் :** போதும் நிறுத்து பச்சைப் பொய் சொல்லாதே.. பாசாங்குக்காரா நமது நட்பும் தொடர்பும் நாசமா கட்டும். நாசமாகட்டும்.

**பா :** நல்லப்பா ! ம் பெற்ற அப்பனைப் பிணமாகக் கண்ட வருத்தத்தில் எல்லை மீறிக் கொட்டுகிருய்..நீ இப் பொழுது இருக்கும் நிலையில் நானும் சில நாட் களுக்கு முன்பிருந்ததை மறந்து பேசுகிருய் பேசு.. பேசு..ஆத்திரம் தீரும் வரை பேசு..

**நல் :** நான் பேசி என்ன செய்வது ? இனிமேல் சட்டம் தான் பேச வேண்டும்.

**பா :** சந்தர்ப்ப சாட்சியங்களை வைத்துத்தானே சட்டம் பேசும் ..பேசட்டும்.

(செல்லத் துரை வருகிருன். நல்லப்பனையும் பாண்டி யனையும் மாறி மாறிப் பார்க்கிருன் ஒருவரும் பேசவில்லை..இரத்த வெள்ளத்தில் கிடக்கும் தன் தந்தையைக் காணுகிருன்)

**செல் :** அப்பா..அப்பா..என்ன இது..இரத்தம் (அண்ண னிடம்) என்ன அண்ணு இது..இரண்டு பேரும் சேர்ந்து "குளோஸ்" பண்ணிப்பிட்டா பேசாமல் நிற்கிறீர்கள்..! (சுற்றிப் பார்க்கிருன் பணப் பெட்டியைக் கண்டு திகைக்கிருன்) ஆ..பணப் பெட்டி திறந்து கிடக்கிறதே. உம் எத்தனை நாளா இந்தத் திட்டம் போட்டிருக்கிறீர்கள் அடப் பாவிகளா ..! இரண்டு லட்சமும் போச்சே..என் "ஆகாசக் கோட்டையை" இந்த மாதமே "ரிலீஸ்" பண்ண லாம்னு இருந்தேனே.. கோட்டையெல்லாம் குட்டிச் சுவராக்கிட்டீங்களே..எங்கே பணம்....! கெஞ்ச லுடன் எனக்குப் பாதியாவது தந்திருண்ணே..

பேசமாட்டியா....நீங்க ரெண்டு பேருமே பேசமாட்டிங்களா..இந்தா வர்றேன்..போலீசைக் கொண்டு வந்து உங்களைப் பேச வைக்கிறேன்..

(புறப்படுதல்..அப்பொழுது கிராமவாசிகள் குரல் கேட்கிறது. "போடா உள்ளே..திருட்டுப் பயலே போ..என்ற குரல் சமீபிக்கிறது.. முக்காடிட்ட உருவத்தை நெட்டித் தள்ளுகின்றனர். முக்காடிட்ட உருவம் கீழே விழுகிறது. முக்காட்டை நீக்கிப் பார்த்தால்..கண்ணாயிரம் பணப்பையுடன் நடுங்கி விழிக்கிறான்..)

**கண் :** சாமி..சாமி..என்னைக் கொன்னுப்பிடாதிங்க..நான் பிள்ளைக் குட்டிக்காரன்..பூராத்தையும் சொல்லி விடுகிறேன். இந்தாங்க பணம்..(செல்லத் துரையைக் கண்டவுடன் பணத்தை நல்லப்பனிடம் தருகிறான்).

**செல் :** நீதானா கணக்கப்பிள்ளே..நீ என்னைவிட மோசமான திருட்டுப்பயலா இருப்பே போலிருக்கே..

**கண் :** (சமாளித்துக் கொண்டு) நான் உங்களுக்காகத் தாங்க இந்த வேலே செஞ்சேன்..நீங்க குறிச்ச நேரத்திலே வரலே..நான் முந்திக்கிட்டேன் (செல்லதுரை திகைக்கிறான்) இப்படி ஆயி போச்சு..என்னே ஒண்ணும் பண்ணுமெக் காப்பாத்துங்க சாமி..உங்க காலிலேகூட விழுகிறேன்..நான் டசன் கணக்காப் பெத்தவனுங்க..சாமி..

**செல் :** பொய்..பொய்..முன்னலே வந்து அப்பாவை "குளோஸ்" பண்ணிப்பிட்டு முழிக்கிறே..பாரு உன்னே லாக்கப்பலே தள்ளுகிறேன்.. எல்லாருமாச் சேர்ந்துகிட்டா என்னே ஏமாத்தப் பார்க்கிறீங்க..இந்தா வர்றேன்..

(போதல்.)

**முனி :** என்னங்க இது பேசாமெ நிக்கிறீங்க (நல்லப்பனிடம்).

**நல் :** எனக்குத் தலே சுற்றுகிறது..

**சங் :** சரி..சரி..கீழே கிடக்கிறவரைக் கவனிங்க..வாங்க..வாங்க..ம்..

பாண்டியன் குனிந்தபடி இருக்கிறான்..

(திரை)

# களம் 5

## காட்சி 5

**இடம் :** உலகப்பர் வீடு.

**மாந்தர் :** உலகப்பர், நல்லப்பன், பாண்டியன், காவேரி, பலவேசப் பண்டிதர், செல்லதுரை.

(உலகப்பர் தலையில் கட்டுடன் உட்கார்ந்திருக்கிறார். நல்லப்பன், பாண்டியன், காவேரி—மூவரும் பக்கத்தில் நிற்கிறார்கள்)

**உல :** ஒருவரும் என்னோடு முகங் கொடுத்துக் கூடப் பேசமாட்டேன் என்கிறீர்களே. .அப்படியானால் என்னை ஏன் உயிர் பிழைக்கவைத்தீர்கள். நான் செய்ததற்கெல்லாம் இந்தத் தண்டனை போதாது. .இன்னும் ஏராளமாகக் கிடைக்க வேண்டும். என்னைப் போலப் புத்தி கெட்டவர்களுக்குக் கண்ணாயிரம் போல மதிகெட்டவர்கள் தான் பாடம் தர வேண்டும். .ம். .எனக்கும் பணம் இருந்தென்ன ? . .பிள்ளைகள் இருந்தென்ன ? பணம் என்னைக் கெடுத்தது. . நான் மிருகமாக மாறி விட்டேன். குரங்கு கைப் பூமாலை போலப் பணம் என்னிடம் இருந்தது ; குருடனுக்குக் கண்ணாடி கிடைத்ததுபோல எனக்குப் பிள்ளைகள் கிடைத்தார்கள் . .நான் குருடன் மட்டும்தானா . .முரடனும் கூடத்தான் . .நல்லப்பன். .

**நல் :** அப்பா !

**உல :** அப்படி இன்னொரு தரம் இந்தப் பாவியைக் கூப்பிடாதேப்பா. நீ எனக்கு மகனாத் தப்பிப் பிறந்து விட்டாய். .உனக்குத் தகப்பன் என்று சொல்லிக்கக் கூட எனக்கு யோக்யதை இல்லை.

**நல் :** ஏனப்பா இப்படியெல்லாம் பேசி அலட்டிக் கொள்ளுகிறீர்கள். உங்கள் உடல் சுகமானாலே எங்களுக்கு போதும். .உங்களுக்குக் கோபம் போலவே குணம் உண்டு என்பது எங்களுக்கு தெரியும்.

**உல :** இனிமேல் நான் வாழ ஆசைப்படலேப்பா. . நிம்மதியாகச் சாவேன். .நான் செய்த பாவங்களையெல்லாம் நீ செய்த நல்ல செயல்கள் துடைத்துவிட்டன. .

நான் நிம்மதியாகச் சாவேன்.. பாண்டியா.. பாண்டியா..

(பாண்டியன் அருகில் வருகிறான்)

உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறேனப்பா.. என்னை மன்னித்து விட்டேன் என்று ஒரு தரம் சொல்லப்பா..

பாண் : அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்..நீங்கள் பெரியவர்கள்..

உல : நானா பெரியவன்..என்னை இன்னும் சித்திரவதை செய்யாதீர்கள். ஊருக்காக உழைத்த நீங்கள் தான் பெரியவர்கள். பிறரை வாழவிடாத நானா பெரியவன் (காவேரி அழுது கொண்டிருத்தலைக் காணுகிறார்). காவேரி..இங்கே வாம்மா.. அழாதேம்மா.. நீ இந்த நிமிஷம் முதல் என் பொண்ணும்மா..உங்க குடும்பத்துக்கு நான் செய்த கொடுமைகளெல்லாம் நீ தான்மா மன்னிக்கணும்..என் குடி தழைக்க வந்த குலதெய்வமா வந்து, வீட்டிலே நீ தாம்மா விளக்கேத்தணும்.. இங்கே வாம்மா..(காவேரி அருகில் வருதல்) நல்லப்பா.. (நல்லப்பனும் வர..இருவர் கையையும் இணைக்கிறார்) கருணாகரம் பிள்ளை யோடு முப்பது வருஷமாகப் பழகினேன்..அப்பவெல்லாம் விளையாட்டுக் காவது நாம் சம்பந்திகளாவோம் என்பார்.. இன்று அது நிசமாகிவிட்டது.. ஆனால் பாவி நான் அவரைக் கூட வாழவிடவில்லை..அதற்கு பிராயச்சித்தமாகத்தான் இந்தத்திருமணத்தை நானே நடத்துகிறேன்..என்னை எல்லோரும் ம்ன்னித்து விடுங்கள்.

(பலவேசப் பண்டிதர் வருகிறார்).

உல : வாங்க பண்டாரம்..நீங்களும் ஆசீர்வதியுங்கள்..

பல : ஆஹா..முதலியார் இதுக்கு முன்னாலே மனசு வைத்திருந்தால் என் இவ்வளவுக்கு கதை நீண்டு தலைக்கட்டு வரைக்கும் வந்திருக்கப்போகுது....

உல : ஆமாங்க பண்டிதரய்யா..இந்தத் தலைக் கட்டுத்தான் என் மனப் பூட்டை உடைத்தது..என்னை மனிதனாக்கியது.

**பல :** உங்களுக் கென்ன மிராசுதார்வாள் நீங்க ரொம்பக் கோபக்காரரே தவிர....

**உல :** இன்னும் ஒரு தரம் மிராசுதார் அப்படி இப்படி யென்று சொல்லாதீர்கள் நான் மிராசும் இல்லே, திராசும் இல்லே. பாண்டியன் என்னுடைய நிலம், ரொக்கம் எல்லாம் உங்களுக்குத்தான் எனக்கு ஒரு துண்டு நிலம் மட்டும் கொடுங்கள்.

**நல் :** அப்பா

**உல :** ஆமா நல்லப்பன் உன் கூட்டுப் பண்ணே செழிச்சு வந்ததைப் பார்க்கப் பார்க்க எனக்குப் பரம சந்தோசம் தான்....மிட்டா மிராசுங்கிற மரியாதையெல்லாம் போச்சேங்கிற வருத்தித்திலே தான்ப்பா அப்படியெல்லாம் செய்தேன்..இனிமேல் சொத்தெல்லாம் உன் கூட்டுப் பண்ணேக்குத்தான்......

**செல் :** (நுழைந்து கொண்டே) என்னப்பா என்னே மறந்துவிட்டீர்கள் ? நான் உங்கள் பிள்ளேயில்லேயா ?

**உல :** "நீங்கள் இருவருமே எனக்கு ரெண்டு கண்கள் தானே"

**செல் :** அதினுலேதான் ஒரு கண்ணிலே வெண்ணேயும் இன்னெரு கண்ணிலே சுண்ணும்பும் வைக்கிறீர்களோ. எனக்கு வேறே ரொம்ப வேண்டாம்....எனக்கு இப்ப இரண்டே லட்சம் தந்தால் போதும்....

**உல :** விவசாயிக்கு நிலம்தான்பா வாழ்வு....பட்டணம் பட்டணம் என்று நிலத்தை விட்டு விவசாயியெல்லாம் போனதினுலேதான்பா நாடு இந்த நிலேமைக்கு வந்தது. நமக்குச் சினிமாவும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். நீயும் அண்ணன்கூட இருந்து நிலத்தைக் கவனிச்சாப் போதும்........

**செல் :** அதல்லாம் "நான்சென்ஸ்" என் "ஆகாசக் கோட்டை" என்ன ஆகிறது ? என் அண்ணு எல்லாம் உன் சூழ்ச்சிதானே....சகோதரத் துரோகம் பண்ணுதே....

**நல் :** தம்பி அப்படியெல்லாம் எண்ணுதே....உன் விருப்பம் போலச் செய். வேண்டிய பணத்தை எடுத்துச் செல்....ஆனுல் சீர் பெற்ற வாழ்வைத் தேடும்

பொழுது ஏரைத் தேட மறந்துவிடாதே. நீ என்று திரும்பி வந்தாலும் நிலத்தாய் கை நீட்டி உன்னை அழைக்கக் காத்திருப்பாள்.

செ : சரி....சரி....நீ தான் " குட் " " அண்ணன். அப்பா தான் கரெக்டான அப்பா " சாயந்திரமே புறப்படுகி றேன். அடுத்த மாதமே " அண்ணன் தியாகம் "னு உன் பிளாட்டையே வைச்சு படம் ஒன்னு புடுச்சுடு றேன். பை....பை....(போதல்)

பல : தம்பி....நல்லப்பன் மனசு யாருக்கும் வராதுங்க.. இப்படிப் பிள்ளையினுலே தாங்க உங்களுக்கு மன நிம்மதி வரணும்....

உல : எல்லோரும் என் மனப்புண்ணைக் கீறிவிட்டீர்கள் இனிமேல் தன்னுலே ஆறி விடும்....பாண்டியன் ஏனப்பா எதுவும் பேசமாட்டேன் என்கிருய்....

பா : மாமா..கருகிவிட இருந்த அரும்பு மலர்ந்தது போல, மங்கிவிட்ட கண்கள் மீண்டும் ஒளி பெற்றது போல, தேய்ந்த நிலவு திடீரென்று முழுமதியானது போல, —இழந்து விட்ட வாழ்வை மீண்டும் பெற்று விட்டோம். இனி என்றென்றும் நாட்டுக்கு நல்லது செய்து வாழ ஆசிர்வதியுங்கள் மாமா....

பல : ஆசீர்வாதமெல்லாம் இப்ப இல்லீங்க தம்பி. இன்னம் ரெண்டு நாளிலே பொங்கல். அதுக்கடுத்த முகூர்த்தத் திலே உங்களுக்கும் ஒரு பெண்ணைப் பார்த்து இரண்டு கலியாணத்தையும் மொத்தமா ஆசீர்வதிச்சுடுவாரு..

உல : எந்தப் பொண்ணையா பார்க்கிறது....உன் பெண்ணைக் குடுத்திடேன்.

பா : உழைக்காமல் ஊரைச் சுரண்டுகிறவர்கள் வீட்டுப் பெண் எனக்கு வேண்டாம் மாமா.... (அனைவரும் சிரித் தல்)

உல : பார்த்தாயா பலவேசம்....

பல : இந்தப் பலவேசம் உழைக்கத் திராணி இல்லாத கட்டையின்னு நினைச்சுப்பிட்டீங்க....நாளைக்கே கலப் பையைப் பிடிச்சேன்னு ஏரு தயங்கும், எருது மயங் கும், நிலம் குழம்பும் ஆமா....

நல் : அப்பா....இந்த வருஷத்துப் பொங்கல் நமக்குப் புதுமையான பொங்கல்....நமது நெஞ்சத்திலே புதுமை, நினைப்பிலே புதுமை, வாழ்விலே புதுமை..

உல : அந்தப் புதுமைப் பொங்கலுக்குக் கிராமத்தாருக்கு கெல்லாம் நம்ப வீட்டு விருந்துதான்....

பல : பார்வதீசா....பரந்தாமா....நீ வாழ்க....அப்பனே வாழ்க !

(சிரித்தல்)

(திரை)

# களம் 5

## காட்சி 6

**இடம் :** பொதுக்கூட்ட அரங்கு.

**மாந்தர் :** நல்லப்பன், பாண்டியன், சங்கிலி, கிராமவாசிகள், உலகப்பர்.

(பொங்கல் விழா அணிகள் எங்கும்—இரண்டாம் ஐந்தாண்டு திட்டச் சுவரொட்டிகள்—நல்லப்பன் தலைவராக அமர்ந்திருக்க, பாண்டியன் பேசுகிறான்).

பா : பெரியோர்களே ! !

இந்த மங்கலப் பொன்னுளில் இந்த மேடையில் நான் பேசுவது வியப்பைத் தரலாம். புதுமையாகவும் தோன்றலாம். ஆம் ! அன்பு வழியில் நல்லப்பன் காட்டிய புதுமை எங்கும் பொலிந்திருக்கக் காண்கிறேன். நாட்டிலே அரசியலார் அமைத்த முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை கிராம மக்களிடையே வெற்றியுடன் பரப்பி மகிழ்ச்சியும், வளமும் நிறைந்த உன்னத வாழ்க்கைக்கு அடித்தளமிட்ட அவரது வெற்றியை காணுகிறேன். கத்தியின்றி ரத்தமின்றி அமைதி வழியில் சாதிக்க முடியாதது எதுவுமேயில்லை யென்பதை உணர்கிறேன். வாழ்க்கையிலே சமத்துவத்தையும் மனத்தினிலே உயர்ந்த நோக்கத்தையும் ஏற்படுத்தக்கூடிய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நமது கிராமத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப்

போகும் இந்த நல்ல நாளில், நானும் தோளோடு தோளிணைத்து உழைப்பேன் என உறுதியளிக்கிறேன். இந்தப் பொன்னான திட்டத்தின் அடிப்படையில் நமது தகுதிக்கேற்ப உழைத்து, அந்த உழைப்பிற்கேற்பப் பலன் அடைந்து நமது நாட்டைப் பொன் கொழிக்கச் செய்ய உறுதி கொள்வோம். அனைவரும் உறுதி கொள்வோம் என வேண்டிக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

(அமர்தல்)

(அடுத்தாற்போல சங்கிலி சில உண்டியல் பொட்டிகளைக் கொண்டு வந்து மேசைமீது வைக்கிறார்)

**சங் :** எல்லோருக்கும் கும்பிடுகிறேன்....

நான்: ரொம்பப் பேசிப்பழக்கமில்லே....எதோ பேசணும்னு ஆசையாலே வந்திருக்கேன். மன்னிங்க. இப்ப.. இந்தக் கிராமத்து விவசாயிகள் எல்லாம் போன திட்டக் காலத்திலே மிச்சம் பிடிச்ச பணத்தையெல் லாம் தேசீய....தேசீய சேமிப்பிலே போட எனக்கிட் டேக்கொடுத்து வைக்கச் சொன்னாங்க....நான் வைச் சேன். நீங்க பார்த்தீங்க....அப்ப எனக்கு மனசு என்னமோ மாதிரியா இருந்திச்சு....ஏன்னா எனக்கு இந்தத் திட்டமே முதல்லேயிருந்து பிடிக்கலே.... அதினாலேதான் எனக்கிட்டே காசு சேரலே.... ரொம்ப சந்தோஷம்....முதல் அஞ்சாண்டுத் திட்டத்தினாலே நம்ப கிராமத்தைப் பார்த்தா கிராமம் மாதிரியாகவே தெரியலே பட்டணம் போல பாதை, அது, இது எல்லாம் வந்தாச்சு..இந்த ரெண்டாவது திட்டத்திலெ யாவது நான் நிறைய ரூபாய் மிச்சப் படுத்தித்தரு வேன்னு உங்ககிட்டே இப்பவே சத்தியம் பண்ணிப்பிடு றேன். நான் வருகிறேன்....கும்பிடுகிறேன். ?

(எல்லோரும் சிரித்தல்....உட்காருகிறார்....நல்லப்பன் பேச எழுகிறான்....ஒரே ஆரவாரம்....)

**நல் :** சகோதரர்களே....! !

சங்கிலியண்ணன் பேசக்கேட்டீர்கள். திட்டம் என்றால் என்ன என்பதை அவர் புரிந்துக் கொண்டார். இது ஒன்றே நமக்குப் பெரிய சாதனைதான் !

இந்தப் பொங்கல் விழாவைப் புதுமைப் பொங்கலென்று பாண்டியன் குறிப்பிட்டார். அது உண்மை. என்னுடைய தனிப்பட்ட வாழ்வில் புதுமை ஏற்பட்டது போல நமது நாட்டு வாழ்விலும் புதுமைகள் பொலிந்துள்ளன. இன்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நமது கிராமத்திலும் துவங்குகிறோம்.... இந்தத்திட்டத்தையும் வெற்றியுடன் நடத்தக் கிட்டத்தட்ட ஐயாயிரம் கோடி ரூபாய்களை நமது சர்க்கார் செலவிட இருக்கிறார்கள். பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும், மின்சார ஆக்கமும், தொழிற் பெருக்கமும் மிகுந்து வெளி நாட்டார் வியக்கும் வண்ணம் நமது நாட்டைப் பொன் கொழிக்கச் செய்யப் போகிறார்கள்—நமது நாடு உயர உயர நாமும் உயர்வோம். நாம் வளர நாடும் சிறக்கும். எனவே அமைக்கப்பட்ட திட்டங்களையெல்லாம் வெற்றியுடன் நிறைவேற்ற நாம் அனைவரும் முழுமனதுடன் ஒத்துழைப்போம். திட்டத்தைச் சாதனையாக்க அயராது பாடுபடுவோம். மக்கள் உழைப்பில் மலையாத நம்பிக்கையுடன் அறம் வளரப் பாடுபடுவோம். அப்பொழுதுதான் இன்று நாம் காணும் புதுமை என்றும் நிலைக்கும். நமது வருங்காலத் தாயகம் வளநாடாய், வான்புகழ் பெற்ற திருநாடாய்த் திகழும்.....வணக்கம்....!!

(கைதட்டல்....கிராமவாசி முனிசாமி எழுகிறார்..)

**முனி :** இனி அடுத்தப்படியாக கிராம விளையாட்டுத் திடலில் நடக்கப்போகும் விளையாட்டு போட்டிகளைப் பார்க்க வருமாறு உங்களையெல்லாம் அன்போடும் ஆசையோடும் அழைக்கிறோம். எல்லோரும் வாங்க !

(உலகப்பர் அவசரமாக வருகிறார்)

**உல :** எல்லோரையும் கும்புடுகிறேன். நான் பழைய உலகப்ப முதலியாருதான்....ஆனா....புது ஆளா மாறிவிட்டேன்....அதெல்லாம் பிறகு பேசிக்குவோம். விளையாட்டுப் பார்க்க எல்லோரும் அப்புறம் போகலாம் நம்ப வீட்டிலே பெரும் பொங்கல் வச்சிருக்கேன். எல்லோருக்கும் விருந்து நம்ம வீட்டிலேதான் வாங்க....! வாங்க....!!

கிராம : வாங்க....வாங்க....முதலியார் தரப்போற இந்த புதுப் பொங்கலேயும் சாப்பிட்டுப்போவோமே...... ........

" பொங்கலோ பொங்கல் "—" புதுமைப் பொங்கல் " பாடல்

(திரை)

முற்றும்